Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் - 16 வெள்ளி - 14 27 - 02 - யூன் - 2005



# அரச தரப்புகளின் [அ] நியாயக்கற்பிதங்களும் இறுதி வாய்ப்புகளும்!

அவதானி

20ஆம் நூற்றாண்டின் முதற்பாதியை காலனித்துவ ஆட்சியிலிருந்து பெரும்பாலான நாடுகள் தங்களை விடுவித்துக் கொண்ட காலகட்டமென வரலாறு குறித்துக்கொள்ளும் அதேவேளை, அந்நூற்றாண்டின் அடுத்தபாதி ஒடுக்குமுறைக்கு உள்ளான தேசிய இனங்களின் சுதந்திரத்திற்கான போராட்டகாலம் என்பது எங்கும் குறிக்கப்படாமலேயே தெளிவாகின்றது. 'தேசியம்' என்ற பிரக்ஞை ஏதோ மேலைத்தேய இறக்குமதி போல் ஆங்காங்கு கருதப்பட்டு, 3ஆம் உலக நாடுகளுக்கு அது அவசியமற்றது




போன்ற வகையிலான கற்பிதங்கள் உலகின் சில முன்னணி நாட்டு முக்கியஸ்தர்களால் முன்வைக்கப்படுகின்றன. ஆனாலும், மேலைத் தேசங்களில் மன்னராட்சிக்கு எதிராக இயல்பாகவே உருப்பெற்ற தேசிய விழிப்புணர்ச்சியைப் போன்று கீழைத்தேசங்களிலும் உருவாகிக் கொள்வதற்கான ஒரு இயல்புநிலை அக்காலத்தில் இருந்திருக்கவில்லை என்பதுதான் உண்மை. அதாவது ஒவ்வொரு இனமும் அல்லது குறைந்தபட்சம் சமூகமும் பூரணமான தேசிய இனம் என்றளவில் அடைந்துகொள்ளக்கூடிய இயல்பான பரிணாம வளர்ச்சி காலனித்துவ ஆட்சியின் கீழ் முடக்கப்பட்டிருந்தது. 2ஆம் உலகயுத்தம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட புறச்சூழ்நிலைகளின் நெருக்குவாரத்தில், அடிமைகொள்ளப்பட்டிருந்த பல பிரதேசங்களும் நாடுகள்(?) என்றளவில் விடுதலை பெற்றன. அந்தந்த நாடுகளில் வாழ்ந்துவந்த சுதேசிய மக்களின் அடையாள விழுமியங்கள் குறித்து எவ்விதத்திலும் கவனம் கொள்ளாமல், எழுந்தமானமாக ஏகாதிபத்தியங்கள் தங்களுக்கு விசுவாசமான உள்ளூர் வர்க்கத்திடம் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைத்துச்சென்றன. (பிரித்தானியாவும், பிரான்சும் வரைபடத்தில் தீர்மானித்த ஆபிரிக்க நாடுகளிற்கான நேர்கோட்டு எல்லைகள் இதற்கு உகந்த எடுத்துக்காட்டு). நன்கு திட்டமிடப்பட்ட இந்த நடைமுறை காரணமாகவே இன்று உலகெங்கும் அமைதியின்மையும், அமைதியின்பேரால் பல ஒடுக்குமுறைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அண்மைக்காலங்களில் யப்பான் நாட்டிற்கெதிராக சீனாவில் இடம்பெற்ற தொடர்ச்சியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் பற்றிய செய்திகள் ஊடகங்களை நிரப்பி வந்தன. யப்பானியப்படையினருக்கென பாலியல் அடிமைகளாக நிர்ப்பந்திக்கப்பட்ட லட்சக்கணக்கான சீனச்சிறுமிகளின் குற்றச்சாட்டுகள் உட்பட யப்பானின் ரோஜோ ஆட்சி பல கறுப்பு அத்தியாயங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளன. மனித உரிமைகள் பற்றிப் பெரிதாகப் பீற்றிக்கொள்ளும் பலரும் பாதிக்கப்பட்ட சீனர்களுக்காக பரிந்துபேச முன்வரவில்லை. தலைகுனிய வேண்டியகளது செயல்களுக்காக கடந்த 60 வருடங்களிலும் சீன மக்களிடம் யப்பான் தரப்பு மன்னிப்பு கூட கோரியிருக்கவில்லை. அண்மையில் தங்களது வரலாற்றுப்பாடத்திட்டத்திலிருந்து சீனா மீதான தங்களது அட்டூழியங்களை மறைப்பதற்கு அது முற்பட்ட போதுதான் சீனமக்களின் எதிர்ப்பு ஊர்வலங்கள் பரவலாக முன்னெடுக்கப்பட்டன. இதையடுத்து 'மன்னிப்பு' என்று வாதிட்டுக் கொள்ளக் கூடிய சில வார்த்தைகளை யப்பான் தரப்பு வெளிப்படுத்தியுள்ளது. ஆனாலும், ஏக காலத்தில் யேர்மனியில் ஹிட்லர் புரிந்த படுகொலைகளுக்கு அந்த நாடு இன்றும் மன்னிப்புக்கோரிய வண்ணமே உள்ளது. யேர்மனியின் தோல்வியின் 60 ஆண்டுகள் பூர்த்தியை மே 08 இல் எல்லா மேலைநாடுகளும் கொண்டாடிக்கொண்டிருக்க 6 மில்லியன் யூதர்கள் உட்பட தமது தரப்பு மேற்கண்ட படுகொலைகளுக்கு இன்றும் தலைகுனிந்து கொண்டிருக்கிறது யேர்மனி.



இரண்டு தலைமுறைகள் கழிந்த பின்னும் அவர்கள் தங்களது கடந்தகாலத்துக்காக மனம் வருந்துகிறார்கள். யூதத்தரப்பினால் கோரப்படும் நட்டஈடுகளை வழங்குகிறார்கள். இஸ்ரேல் அரசு பலஸ்தீனத்தின் மீது கைக்கொள்ளும் அடாவடித்தனத்தை, யூதர்கள் மீது ஹிட்லர் மேற்கொண்ட அழிப்புடன் ஒப்பிட்டு விமர்சித்த முன்னாள் யேர்மனிய நீதியமைச்சர், அக்கூற்று காரணமாக பதவி விலகவேண்டி வந்தது. ஆனாலும், ஹிட்லரிற்கு எந்தவிதத்திலும் சளைக்காத யப்பானின் ரோஜோ விடயத்தில் யப்பான் தலைநிமிர்ந்து நிற்பது எவ்வாறு? இரண்டே இரண்டு யதார்த்தங்கள் மட்டுமே அதற்குக் காரணங்களாகும் : 1). சர்வதேச ரீதியாக யூதர்கள் கொண்டிருக்கும் மேலாண்மை யேர்மனியைத் தலைகுனிய , வைத்தது. 2). அதேவேளை மேலைத்தேசங்கள் குறிப்பாக அமெரிக்காவிற்கு உடன்பாடற்ற சீனநாட்டு மக்களின் வேதனைகளை விட, செல்லப்பிள்ளை யப்பானின் சாதனைகள் மேற்கைப் பொறுத்தவரையில் பெரிதும் எடுபடுகிறது. ஆக தார்மீகம், மனிதம் என்று இன்னோரன்னவற்றையும் விட பொருளாதார லாபங்களே முன்னணியில் வைக்கப்படுகின்றன.

இப்போது கொஞ்சம் எங்கள் பிராந்தியப்பக்கம் வருவோம். தமிழீழத்திடம் இருப்பதாகச் சொல்லப்படும் இரண்டு இலகு விமானங்கள் குறித்து இந்தியா தனது வருத்தத்தைத் தெரிவித்துள்ளது. இந்த விமானங்கள் மூலம் புலிகள் தற்கொடைத்தாக்குதல்களை இந்தியா மீது மேற்கொள்ள வாய்ப்புண்டு என இந்தியாவின் மூத்த ராணுவ ஆய்வாளர்(?) ஒருவர் கருத்துக் கூறியிருக்கிறார். வரைபடத்தில் மட்டும் அருகில் இருப்பதாகத் தெரியும் இந்தியா, 1990 இலிருந்து சிறிலங்கா வான்படைகள் தமிழ்ப்பகுதிகள் மீது மேற்கொண்ட தொடர்ச்சியான கோரத்தாக்குதல்களிற்கோ, வலிகாம இடப்பெயர்விற்கோ, ஜெயசிக்குறுவில் கடைப்பிடிக்கப்பட்ட தமிழ்ப் பொதுமக்களிற்கு எதிரான நெருக்குவாரங்களுக்கோ எதற்குமே வருந்தவில்லை; மாறாக அரசிற்கு ஆயுத வசதிகள் செய்துகொடுத்தன. அடுத்தவர்கள் அனுசரணை செய்ய வந்தபோது 'இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டுக்குப் பங்கம் ஏற்படாத வகையில்' என்று அவர்கள் கருதும் ஒன்றையே நிர்ப்பந்தமான வெளிப்பாடாக நெருக்கி வந்தார்கள். 15 வருடங்கள் கடந்த நிலையிலும் ஒருதலைப்பட்சமாக விடுதலைப்புலிகள் (என்ற வகையில் முழுத்தமிழர் மீதும்) குறித்து கொண்டிருக்கும் நிலைப்பாட்டுக்கு அதே 'மூத்த ராணுவ ஆய்வாளர்' உட்பட பலராலும் சொல்லப்படும் கருத்து 'புலிகள் இன்னும் சனநாயக வழிக்குத் திரும்பவில்லை!' என்பது தான்! இந்த இடத்தில் உலகின் மிகப் பெரிய சனநாயக நாடென்று சொல்லப்படும் இந்தியா சனநாயக விரோதப் போக்கைக் கொண்டிருக்கும் எதேச்சதிகார நேபாள மன்னருக்கு பெருந்தொகையில் இராணுவ உதவிகள் நல்குவதை எவ்வாறு புரிந்துகொள்வது, என்றொரு கேள்வி எழுகிறதே! நட்பு அரசை அல்லது தன்னிடமிருந்து நழுவிச்சென்று விடக்கூடிய அயல்நாடொன்றின் ஆளும் தரப்பைக் காப்பாற்றுவதற்காக 18 மில்லியன் நேபாளியர்களுக்கு எதிராக நிலை



யெடுப்பதுதான் ஜனநாயகமா? இந்தப்போக்கு ஒன்றும் விதிவிலக்கான ஒற்றை நிகழ்வல்ல! 1978 இலிருந்து மாலைதீவின் நித்திய சனாதிபதியாக இருந்துவரும் அப்துல் கயூம் தனது 'வாழ்நாள்' ஆட்சி முறைக்கெதிரான சனநாய முஸ்தீபுகளை பலாத்காரத்தால் நசுக்கி வருகிறார். அங்கும் பிராந்திய நாடொன்றில் அதன் மக்களின் அபிலாசைகளைப் புறந்தள்ளி, ஆக்கிரமிப்பாளர்களை ஆதரித்து தன்னோடு அணைத்துக்கொள்ளும் போக்கையே இந்தியா கைக்கொள்கிறது. குடிமக்களின் விருப்பு-வெறுப்புகளைப் புரிந்து, அவற்றிற்கு ஆதரவளிப்பதன் மூலம் இறுக்கமான நட்புறவைப் பேணிக்கொள்வதை விடுத்து, அரசியல் பச்சோந்திகளை ஆதரவளித்து மடியிலமர்த்தும் போக்கு எந்தவகையில் நியாயப்படுத்திக்கொள்ளக்கூடியது??

அண்மையில் கூட தமிழர் பிரதேசத்தில் ஆயிரமாயிரமாய் உயிர் பிரிந்து ஆவிகள் பறந்து அநாதரவாக நாம் தவித்து நின்றபோது வருந்தாத அந்த 'மனிதாபிமானிகள்', இங்கு இரண்டு விமானங்கள் பறந்ததும் மனம் வருந்துகிறார்கள். அச்சம் வேறு கொள்கிறார்களாம்! 4 ஆண்டுகளுக்கு முன்பும் போர் புரிந்த அணுவாயுத வல்லரசு, அதிலும் பேச்சுவார்த்தைகளின் போதே F16 போர்விமானங்களை வாங்கிக்குவித்த பாகிஸ்தான் தரப்புடன் சேர்ந்திருந்து கிரிக்கெட் ரசிக்க முடியும்போது,2 இலகுவிமானங்கள் மட்டும் மகா அச்சுறுத்தலாக உள்ளதென்றால், அதை என்னவென்பது? அவர்கள் பிரித்தானியாவிடம் எதைக் கோரி நின்றார்களோ, கிழக்கு-வங்காளத்தில் முக்தி வாஹினிக்கு எதைப் பெற்றுக்கொடுத்தார்களோ, அதேபோலத்தான் நாமும் இங்கே! இந்தியா கோவாவைத் தன்னிடம் ஒப்படைக்கக் கோரியும், போர்த்துக்கல் நாட்டிடமிருந்து சாதகமான பதிலேதும் கிடைக்காதபோது, 1961டிசெம்பரில் இந்தியப் படைகள் கோவாவை ஆக்கிரமித்துக் கொண்டனவே! 3நூற்றாண்டுகளுக்குப் பிற்பாடும் பிரதேச உரிமை கொண்டாடிய இந்தியாவினால், உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் சுதந்திரத்திற்காகப் போராடும் நம்முடைய கோரிக்கை மட்டும் புரிந்துகொள்ள முடியாமலுள்ளதா ? கட்டுரையின் ஆரம்பத்தில் பார்க்கப்பட்ட 2ஆம் உலக யுத்த காலகட்ட பாதகங்களைப் போலவே பிரித்தானியாவும் இந்தியாவில் தங்கள் பங்கிற்கு ஆற்றிய படுகொலைப் படலங்கள் குறித்து, 1990களில் அங்கு எலிசபெத் மகாராணியார் சென்றிருந்தபோது, இந்திய மக்களிடம் மகாராணியார் மன்னிப்புக் கோரவேண்டும் என்று சில பொது அமைப்புக்களினால் வற்புறுத்தப்பட்டபோது, 'இங்கிதமற்ற அநாகரிகமான கோரிக்கை அது' என அரசியல்வாதிகள் உட்பட அங்கு பலதரப்பாலும் விமர்சிக்கப்பட்டது. பின்னர் அக்கோரிக்கை அப்படியே அடிபட்டுப்போய்விட்டது.

இவ்வாறு பெரிய தரப்புகள் பலதும் நியாயப்படுத்துவதாக முன்வைக்கும் கற்பிதங்கள், முன்னுக்குப்பின் மட்டுமல்ல சமகாலத்திலும் முற்றிலும் முரணானவையாகவும், பொதுமக்கள் விரோதப்பாங்கையும் கொண்டதாகவுமே அமைகின்றன. இந்த வகையில் தமிழ்மக்களாகிய எமது பலமே எமது எதிர்காலத்தை நிர்ணயிக்கும். எங்களுடைய எதிர்காலத்தையும், அதனூடாக தமிழீழம் என்ற தேசியத்தின் இருப்பையும் உறுதிப்படுத்தும் கடமை அத்தேசியத்தின் பங்காளர்களாகிய நம் ஒவ்வொருவரினதும் பங்காகும்.

(20ஆம் பக்கம் பார்க்க)



# புகழேந்தி: இந்தியாவிலிருந்து ஒரு கலைத்தூதர்

நிலாந்தன்

எஸ்.வி.ஆர் என்று தமிழ் நாட்டிலும் இலங்கைத்தீவிலும் பரவலாக அறியப்பட்ட எஸ்.வி.ராஜதுரை தமிழ் நாட்டிலுள்ள புத்திஜீவிகளில் வித்தியாசமாகத் துலங்கும் ஒருவர். முன்பு தமிழ் நாட்டில் ஈழப்போராட்டத்தை மிகத் தீவிரமாக ஆதரித்துவந்தவர்களில் ஒருவர். தொடர்ச்சியாக உயிர்த்துடிப்போடு செயற்பட்டும் எழுதியும் வருகின்ற ஒரு தீவிர இடதுசாரி; தலித்தியவாதி. தமிழ் நாட்டிலுள்ள நிறுவனம் சார் பாரம்பரிய புத்திஜீவிகள் சாதித்த வற்றை விடவும் அதிகம் சாதித்தவர்.

கடந்த மாவீரர் நாள் அன்று ராஜதுரை யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு வந்திருந்தார். "இந்நாளில் இங்கே நான் எதை கட்டாயம் பார்க்கவேண்டும்" என்று கேட்டார். "துயிலும் இல்லத்திற்கு போவோம்" என்றேன். எமது வாகனம் துயிலுமில்லத்தை நோக்கி புறப்பட்ட போதே மாவீரர்நாள் உரையும் ஆரம்பமாகி விட்டது. ஆளரவமற்ற தெருக்களின் வழியே மழைக்காகக் காத்திருந்த அந்தப் பின்மாலைப பொழுதில் படுவேகமாக ஓடிய வாகனத்தில் இருந்தபடி மாவீரர்நாள் உரையை அவர் கேட்டார்.

மாவீரர்நாள் உரை முடியமுன்பே நாம் துயிலுமில்லத்தை அடைந்துவிட்டோம். அங்கு திரண்டிருந்த சனத்திரளுள் நுழைந்து நாங்கள் நடுகற்களை நெருங்கிச்செல்லவும் மணி யோசை எழவும் சரியாக இருந்தது.

குளிர்ந்த காற்றில் தேங்கி நின்ற மணியோசையும் சோகப்பாடலும் தீச்சுடர் கருகும் வாசமும் நடுகற்களின் முன்னே தமது விழிகளில் தீச்சுடர் மினுங்க அழுதபடியிருந்த உறவினர்களுமாக அந்தச் சூழல் எஸ்.வி.ஆர் இற்கு முற்றிலும் புதியதாக இருந்தது. எல்லாவற்றையும் அவர் பிரமிப்போடு பார்த்தார். மாவீரர் நாள் உரை மிகவும் சமநிலையாக இருக்கிறது. ஒரு வெளிநாட்டுப் பார்வையா ளருக்கு அது விசயங்களை தொகுத்தும் சுருக்கியும் தருகிறது என்று அதை அவர் மிகவும் புகழ்ந்தார். அவருக்குள் இருந்த எளிதில் விட்டுக்கொடுக்காத எதற்கும் சரணடையாத இறுக்கமான ஒரு புத்திஜீவி மெல்லக்கரைந்து மிகவும் உணர்ச்சிவசப்பட்ட தமிழன் அவரிடத்தில் தோன்றினான்.

அந்த இடத்தில் அந்த நேரத்தில் அவர் ஒரு புத்திஜீவியாய் அல்ல மிகவும் உணர்ச்சி வசப்பட்ட ஒரு தமிழனாகவே தோன்றினார்.

ஆனால் எஸ்.வி.ஆர் முதலாவதாக ஒரு புத்திஜீவியும் செயற்பாட்டுக்காரரும், இரண்டாவதாகவே அவர் ஒரு கலைஞர் விமர்சகர்.

ஆனால் அண்மைநாட்களில் வன்னியில் வந்துநிற்கும் ஓவியர் புகழேந்தி ஒரு புத்திஜீவியல்ல. அவர் ஒரு முதலாவதாக ஒரு படைப்பாளி. மிகவும் உணர்ச்சிவசப்படுகின்ற ஒரு ஓவியர். ஒரு உள்ளூர் பத்திரிகைக்கு அவர் பேட்டி வழங்கிக்கொண்டிருந்த போது, தொடர்ச்சியாக இவ்வளவு காலமும் எப்படி ஈழப்போரோடு நிற்கமுடிகிறது என்று கேட்கப்பட்டபோது; அவர் அழுதே விட்டார் என்று சொல்லப்படுகிறது.

அவரும் அவரையொத்த தமிழகத்து ஈழத்து படைப்பாளிகள் பலரும் கலையை ஒரு கருவியாகவே பார்க்கிறார்கள். அதாவது தமது அரசியல் கருத்துக்களை, இலட்சியங்களை சனங்களிடம் எடுத்துச்செல்லும் ஒரு வாகனமாகவே அவர்கள் கலையைப் பயன்படுத்து கிறார்கள். இன்று இப்பத்தி புகழேந்தியின் ஓவியங்களின் கலைத்தரத்தை மதிப்பீடு செய்யப்போவதில்லை. பதிலாக அவருடைய ஓவியங்களின் பின்னால் இருக்கும் அரசியலைப்பற்றிக் கதைப்பதே இன்று இப்பத்தியின்நோக்கம்.

புகழேந்தியின் ஓவியங்கள் பெற்ற முக்கியத்துவத்துக்கும், கவனிப்புக்கும் அவற்றின் அரசியல் உள்ளடக்கம் ஒரு முக்கிய காரணம் என்பதனாலும் அவருடைய ஓவியங்களின் அரசியலை கதைப்பது அதிகம் பொருத்தமானதாய் இருக்கும்.

கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக படிப்படியாக சிதைந்துவரும் தமிழக-தமிழீழ உறவின் பின்னணியில் அவருடைய இந்த ஓவிய அரசியலை பற்றிக் கதைப்பது மேலும் முக்கியத்துவமுடையதாகிறது.

1987இல் இலங்கை-இந்திய ஒப்பந்தம் உருவாகிய காலத்திலிருந்து சிதையத் தொடங்கிய தமிழக-தமிழீழ உறவு கடந்த சுமார் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நிலவிவரும் யுத்தநிறுத்தச் சூழலிலும் பெருமளவுக்கு சீர்செய்யப்படவில்லை.

கடந்த சுமார் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக மேற்குநாடுகளை நோக்கி குறிப்பாக ஐரோப்பாவை நோக்கி ஈழத்தமிழர்கள் சாய்ந்துவரும் வேகத்துடன் ஒப்பிடுகையில் தமிழக-தமிழீழ உறவில் ஏற்பட்டிருக்கக்கூடிய புதிய மாற்றங்கள் எதுவும் ஒப்பீட்டளவில் மிகக்குறைவே.

தமிழ் நாட்டில் உள்ள பெரும் கட்சிகளும் பழமைபேண் இடதுசாரிக் கட்சிகளும் ஈழத்தமிழர்களை எப்பொழுதோ கைவிட்டு விட்டன. அல்லது சிலசமயம் காட்டிக் கொடுத்துமிருக்கின்றன. தற்சமயம் ஈழத்தமிழர் களிடத்தில் அக்கறையோடும் ஆர்வத்தோடும் காணப்படுவது அரசியல் அதிகாரம் குறைந்த சிறிய கட்சிகளும், சிற்றியக்கங்களும், தலித்திய இயக்கங்களும்தான்.

இத்தகையதொரு பின்னணியில் தமிழ்நாடு இனியும் ஈழப்போரின் பின்தளமாக இல்லை என்று டில்லியிலுள்ள கொள்கை வகுப்பாளர்கள் திருப்திப்படக்கூடும், சந்தோசப்படக்கூடும். ஆனால் கடந்த இரு தசாப்தகாலமாக ஈழத் தமிழர்கள் இந்தப் பிராந்தியத்தைக் கடந்து ஒரு அந்நியப் பிராந்தியத்தில் பதிவைக் கப்பட்டு வருவதும் அங்கெல்லாம் அவர்கள் ஏற்கனவே ஒரு நிதிப்பின்தளமாக உருவாகி விட்டிருப்பதும், இனிவரும் காலங்களில் அவர்கள் அரசியல் பின்தளமாக உருவாகப் போவதையும் மேற்படி டில்லியிலிருக்கும் கொள்கை வகுபாளர்கள் ஏனோ கண்டுகொள்ளவேயில்லை.

இதுவொரு அசாதாரண மாற்றம். நிச்சயமாக டில்லியிலிருப்பவர்கள் இப்படியொரு மாற்றத்தை நினைத்துப்பார்த்திருக்கமாட்டார் கள். ஆனால் அது நடந்துவிட்டது. ஈழத்தமிழர் கள் ஒரு அந்நிய பிராந்தியத்தில் பதிவைக் கப்பட்டுவிட்டார்கள். ஐரோப்பா அவர்களை தத்தெடுக்கத் துடிக்கிறது. உழைப்பார்வமும் படிப்பில் வெறியும் சேமிப்பில் வெறியுமுடைய விவேகமும் விச்சுழியும் மிக்க ஒரு தனித்தினு சான புலம்பெயர் சனத்திரளை தன்வயப் படுத்துவதன்மூலம் இந்தப் பிராந்தியத்தில் எதிர்காலத்தில் தமக்குப் பிரகாசமான வாய்ப்புக்கள் உருவாகிவருவதாக அமெரிக்கா தலைமையிலான மேற்குநாடுகள் நம்புகின்றன. அந்த இலக்கைநோக்கி அடிகளை எடுத்து வைக்கத் தொடங்கியும்விட்டன.



அமெரிக்காவிலுள்ள செல்வாக்குமிக்க ஐரிஸ் சமூகத்தைப்போலவோ அல்லது யூத சமூகத் தைப்போலவோ ஈழத் தமிழர்களும் ஒருநாள் ஐரோப்பாவில் அரசியல் அபிப்பிராயங்களை உருவாக்கவல்ல அல் லது அரசியல் அழுத் தங்களைப் பிரயோகிக் கவல்ல ஒரு சனத் திரளாக உருவாகக்கூடிய வாய்ப்புக்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் மேலும் அதிகரித்து வருகின்றன.

இத்தகைய ஒரு பின்புலத்தில் தன்னி டமிருந்து தூரமாகிச் செல்லும்; தனது பிராந்தி யத்தைச்சேர்ந்த; தனது உபகண்டப் பெருங்கலாச்சாரத்தின் "ஒரு கூறாகக்" காணப்படுகின்ற; சிறிய ஆனால் புரிந்துகொள்ளக்கடினமான; வீரம்மிக்க ஒரு சனத்திரளை தொடர்ந்தும் வன்மத்தோடும் "பெரிய இந்தியா" என்ற ஆணவத்தோடும்



டில்லியிலுள்ள கொள்கைவகுப்பாளர் கள் அணுகமுயலும் ஒரு அரசியல் சூழ லில் புகழேந்தி தனது ஓவியங்களையும் காவிக்கொண்டு ஒரு கலைப் பயணத்தை மேற்கொண்டு வன்னிக்கு வந்திருக் கிறார்.

அவர் இதற்கு முன்பும் பலகலைப் பயணங்களைச் செய் திருக்கிறார். ஆனால் இது மிகவும் வித்தியாசமானதும், உணர்ச்சிகரமானதும் அவரை சிலசமயங் களில் அழவைப் பதாகவும் இருக் கிறது. நல்லூரில் திலீபன் உண்ணா நோன்பிருந்த இடத்திலும் ஏனைய சில பெருமெடுப்பிலான படுகொலைகள் நிகழ்ந்த இடங்களிலும் பெரிய அளவிலான ஓவியங்களை வரையவிரும்புவதாகவும் அவர் கூறுகிறார்.

இந்தியாவிலிருந்து இராஜதந்திரிகளும், ஏனைய பிரதானிகளும் வன்னிக்கு வருதல் என்பதை ஒரு துடக்காகக்கருதும் ஒரு அரசியல் சூழலில் இந்தியாவிலிருந்து முதன்முதலாக பகிரங்கமாகவும், துணிச்சலாகவும் வந்திருக்கும் ஒரு கலைத்தூதுவர் அவர்.

ஏற்கனவே இலங்கைத்தீவிலிருந்து சுவாமி விபுலானந்தர், கலாயோகி ஆனந்தக்குமார சுவாமி, தனிநாயகம் அடிகள், நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை போன்ற சில கலைத்தூதுவர்கள் காலத்துக்குக் காலம் இந்தியாவுக்குப் போயிருக்கிறார்கள். இம்முறை புகழேந்தி இந்தியாவிலிருந்து வந்திருக்கிறார்.

பொடாச் சட்டத்துக்கு எதிராக திரு.வை.கோபாலசாமி முன்னெடுத்த வீரம் மிகுந்த ஒரு சாத்வீகப் போராட்டத்தின் வெற்றி களில் ஒன்றாகவும் இதை வியாக்கியானம் செய்யமுடியும்.

ஒரு ஆயுதமேந்திய இயக்கத்தை ஆதரித்ததாகக் கூறப்பட்டு பொடாவின் கீழ் வை.கோ சிறைவைக்கப்பட்டார். ஆனால் அந்தச் சிறைவாழ்வை அதன் வலிகளோடு அமைதியாக ஏற்றுக்கொண்டு அதில் தன்னை வருத்தி அதையே ஒரு சாத்வீகப்போராட்டமாக முன்னெடுத்த வை.கோ. முடிவில் அதில் வெற்றியும்பெற்றார். அந்த வெற்றிகளின் விளைவாக தமிழ் நாட்டில் துளிர்த்துவரும் புதிய நம்பிக்கைகளின் தூதுவராக முதலில் அடியெடுத்து வைத்திருப்பவர் புகழேந்தி எனலாம்.

அவர் இதற்கு முன்பும் (சில மாதங்களுக்கு முன்பு) இலங்கைக்கு வந்துபோனவர்தான். கவிஞர் அறிவுமதி, தங்கர்பச்சான், பேராசிரியர் அரசு, எஸ்.வி.ராஜதுரை, பாலுமகேந்திரா சக்சபோன் கலைஞர் சியாம் சரண் போன்றோர் அதிகம் பரபரப்பின்றி வந்துபோன ஒரு பின்ன ணியில் பகிரங்கமாக ஒரு கலைத்தூதுவராக முதலில் வரத்துணிந்தவர் புகழேந்தி எனலாம்.

தமிழக-தமிழீழ உறவில் இன்னமும் அறுந்துவிடாதிருக்கும் நுண்ணிய மெல்லிழை களில் அவரும் ஒருவர். அவர் கொண்டு வந்திருக்கும் கலைத்தூதைப் பின்பற்றி மேலும் மேலும் இந்தியர்கள் இங்கே வரவேண்டும்.

புதுடில்லியிலுள்ள கொள்கைவகுப்பாளர் கள் புலிகளை மட்டும் ஒரு தடைசெய்யப்பட்ட இயக்கமாகக் கருதவில்லை. மாறாக, புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வசிக்கும் தமிழர் களையும் கூட தடைசெய்யப்பட்ட மக்களாகவே பார்ப்பது தெரிகிறது.

ஆனால் இது விசயத்தில் ஈழத்தமிழர்கள் வித்தியாசமாகவும், நிதானமாகவும் நடந்துகொள்ளவேண்டியிருக்கிறது. அதாவது புதுடில்லியிலுள்ள கொள்கைவகுப் பாளர்களையும், இந்தியப் பெருமக்களையும் ஒரே தராசில் போட்டு நிறுக்கக்கூடாது. ஈழப்போரின் நிர்ணயகரமான தருணங்களில், ஐரோப்பாவில் இருக்கும் தமிழர்களைப்போலவே தமிழ்நாட்டுத் தமிழர்களும் ஒரு தீர்மானிக்கும் பெரும் சக்தியாக அமையமுடியும் என்பதை மறந்துவிடாதிருக்கவேண்டும்.

# சொர்க்கமே என்றாலும் நம்மூரைப்போல வருமா...?




"சொர்க்கமே என்றாலும் அது சொந்த ஊரைப்போல வருமா" இந்த வரிகளின் நிஜம் அன்று அந்த மக்களின் முகங்களில் தெரிந்தது. கடந்த 24ஆம் திகதி மிருசுவில் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நடைபெற்ற தென்மராட்சி பிரதேச உயர்பாதுகாப்புப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து கடந்த பல வருடங்களாக வெளிப்பிரதேசங்களில் வாழ்ந்துவரும் மக்கள் தங்களை மீளச்சொந்த இடங்களில் குடியேறத் தடையாக இருக்கின்ற இராணுவத்திற்கு எதிராக எதிர்வரும் 11ஆம் திகதி முதல் பல வழிகளில் வெகுசன போராட்டங்களை நடத்த முடிவுசெய்தனர்.

இந்தக்கூட்டத்திற்கு வருகை தந்திருந்த தென்மராட்சியின் உயர்பாதுகாப்பு வலயங்களான எழுதுமட்டுவாழ் வடக்கு, கிழக்கு,விலுவாலை, கரம்பகம், ஒட்டுவெளி, உசன், மிருசுவில் போன்ற இடங்களைச் சேர்ந்த மக்கள் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்திருந்த பிரமுகர்கள், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது காரசாரமான வார்த்தைகளை பிரயோகித்ததிலிருந்து அவர்கள் விரக்தியின் விளிம்பில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று தெளிவாகியது.

சிங்களப் படையினரின் உயர் பாதுகாப்பு வலயத்தில் தங்களது வீடுகள், காணிகள் இருக்கத்தக்கதாக வாடகை வீடுகளிலும், மற்றவர்களின் காணிகளிலும் வாழ்ந்துவருகின்ற மக்கள் சிலரோடு தொடர்பு கொண்டோம். அவர்களது சோபை இழந்த வாழ்க்கை இங்கு விரிகின்றன.



எழுதுமட்டுவாழ் வடக்கைச் சேர்ந்த கந்தசாமி என்பவர் நாங்கள் இதுவரைக்கும் 5 வீடுகள் மாறியுளளோம். எழுதுமட்டுவாழிலுள்ள எங்கட வீடு எப்படி இருக்கின்றதோ தெரியாது. எங்கையோ இருந்துவந்த இவங்கள் எங்கட இடத்தில இருக்க நாங்கள் தெருத்தெருவாய் அலைய வேண்டியதாக உள்ளது என்கிறார் கந்தசாமி.



குமார் என்பவர் கூறும்போது, என்ர சொந்த இடம் எழுதுமட்டுவாழ். நான் இப்போ ஆறு வருடங்களாக நெல்லியடியில் வாழ்ந்துவருகின்றேன். இதுவரை பதினொரு வீடுகள் மாறியுள்ளோம். குடும்பத்தில் எட்டுப்பேர் மாதாந்தம் 600 ரூபா வாடகை கொடுத்துத்தான் இருக்கின்றோம். சொந்த இடத்திலுள்ள காணியில் தென்னைகள், பலா என நிறைய பயன்தரக்கூடிய மரங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மாதமும் 8000 இற்கும் மேற்பட்ட தேங்காய்கள் கிடைக்கும். ஆனால் இப்போது சமையலுக்குக்கூட கடையில்தான் வாங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நாங்கள் மீண்டும் சொந்த இடத்திற்குப் போகவேண்டும். அதற்கு எப்படிப்பட்ட போராட்டங்களிலும் பங்குபற்றத் தயாராகவே உள்ளோம் என்கிறார் குமார்.



தயா என்பவர் கூறும்போது, நாங்கள் கிளாலியிலிருந்து பல தடவைகள் இடம்பெயர்ந்து பின் மீளச் சென்று குடியேறி பின்னர் யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்து பின்னர், மீளச் சென்று அதன்பின் 1995ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து இருந்துவிட்டு 1998ஆம் ஆண்டு மீளக் குடியேறி அதன்பின் மீண்டும் 2000ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து தற்போது இன்றுவரை மிருசுவில் பகுதியில் வாழ்ந்து வருகின்றோம். இன்றுவரை நாங்கள் எட்டு வீடுகள் மாறிவிட்டோம். தற்போது இருக்கின்ற வீட்டிற்கு 650ரூபா மாதாந்த வாடகை கொடுக்கவேண்டும் எனவும் ஆனால், சொந்த இடத்தில் காணியிலிருந்து வருமானமாக மாதாந்தம் 10,000 ரூபாக்குமேல் கிடைத்தது எனது வீடு முற்றாக இராணுவத்தால் அழிக்கப்பட்டுவிட்டது. காணி புல்டோசர் மூலம் அழிக்கப்பட்டு இராணுவத்தின் பந்து விளையாடும் மைதானமாக உள்ளது. காணிகளை பார்க்கும்போது பைத்தியம் பிடிக்கும் போல் உள்ளது எனக் கூறினார்.

ஒட்டுவெளியில் இருந்து இடம் பெயர்ந்து மிருசுவிலில் வாழ்ந்துவரும் சிவஞானதேவி கூறும்போது, நாங்கள் ஐந்து வருடங்களாக இடம்பெயர்ந்து வாழ்ந்து வருவருகின்றோம். இன்றுவரை பத்துவீடுகள் மாறிவிட்டோம். தற்போது இருக்கின்ற வீட்டிற்கு மாதம் 500ரூபா வாடகை கொடுக்கவேண்டும். சொந்த இடத்தில் தென்னை, பனை, மற்றும் இதர பயன்தரும் மரங்கள் மூலம் 3000 ரூபா வரையிலான மாத வருமானத்தை இழந்துவிட்டோம். முக்கியமாக ஒவ்வொரு இடமாக மாறி மாறிக்கொண்டிருப்பதால் பிள்ளைகளின்ர படிப்பு பாதிக்கப் படுகிறது.



கரம்பனில் இருந்து இடம் பெயர்ந்து ஐந்து வருடங்களாக வாழ்ந்துவரும் பரமேஸ்வரி கூறும்போது,

எங்கள் குடும்பத்தில் பத்துப் பேர். இவர்களுடன் ஒவ்வொரு முறையும் வீடுகள் மாறுவது என்றால் எவ்வளவு கஷ்டம், இதைவிட பிள்ளைகளின்ர படிப்பு எல்லாம் பாதிக்கிறது. இந்த இராணுவத்தால் எங்களுக்கு ஒவ்வொரு முறையும் துன்பம் தான். பிள்ளைகள் ஆசைக்கு பலாப்பழம் கேட்டால் கூட அதனையும் காசுக்குத்தான் வாங்க வேண்டிய நிலைமை. ஆனால் முன்னரெல்லாம் காணியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஒருமுறை காணியைக் கூட்டிக்கொண்டேக் காட்டினாங்கள் அங்க ஒன்றும் இல்லை என வேதனையுடன் கூறுகிறார் பரமேஸ்வரி.

## நேர்காணல்: மு.தமிழ்ச்செல்வன்

உசன் பகுதியில் இருக்கும் சரஸ்வதி என்பவர் கூறும்போது, எங்களின் வீடு இப்போது இருக்கின்ற வீட்டிற்குப் பக்கத்துக்காணி. இங்கு ஒரு வேலிதான். வேலிக்கு அப்பால் உயர்பாதுகாப்பு வலயம். வேலிக்கு உட்பகுதி உயர் பாதுகாப்பு வலயம் அல்ல. நாங்கள் இப்போது இருக்கின்ற வீட்டில் இருந்து எங்கட வீட்டினைப் பார்த்துக்கொண்டேயிருக்கின்றோம். காணியில் இருந்து எந்தவிதமான பயனையும் பெறமுடியாது உள்ளது. ஒரு வேலிக்கு அப்பால் உள்ள சொந்தக்காணிக்குப் போகமுடியாதுள்ளது. இது தொடர்பாக நாங்கள் பல தடவைகள் பல பேரிடம் முறையிட்டுக் கேட்டும் பார்த்திட்டம். ஆனால் இன்றுவரை ஒரு முடிவும் இல்லை. ஒரு வேலியைக் கடந்து சொந்தக் காணிக்குப் போகமுடியாமல் கடந்த எட்டுவருடங்களாக வீட்டையும் காணியையும் பார்த்துக்கொண்டே இருக்கின்றோம் என வேதனையாகக் கூறுகின்றார்.

எழுதுமட்டுவாழ் தெற்கைச் சேர்ந்த கதிரவேலுப்பிள்ளை: நான் அல்லாரையில் ஐந்து வருடமாக வசித்துவருகிறேன். எனது காணியை ஒரு முறை அழைத்துச்சென்று காட்டினார்கள் 200 மீற்றர் தூரத்தில் இருந்து பார்த்தபோது காணியில் வீடு, மரங்கள் எதுவும் இல்லை எனவும் கிணறு மாத்திரமே இருக்கின்றது எனக் கூறுகிறார்.



உசன் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து கொக்குவிலில் ஐந்து வருடங்களாக வாழ்ந்து வரும் ஈஸ்வரி கூறும்போது, இப் போது நாங்கள் இருக்கின்ற வீட்டிற்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா வாடகை கொடுக்கவேண்டும். ஆனால் சொந்த இடத்தில் மாதம் 3000ரூபா வருமானம் கிடைக்கும் நிலை இருந்தது எனவும் இந்த இராணுவத்தால் எல்லாவற்றையும் இழந்து சொந்த மண்ணிலேயே அகதியாய் வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.





எழுது மட்டுவாழ் கமக்கார அமைப்புகளின் சங்கத் தலைவர் கூறும் போது, எங்களின் சங்க எல் லைக்கு உட்பட்ட விவசாய நிலங்களில் அரைவாசிக்கு மேற்பட்ட நிலங்கள் உயர்பாதுகாப்பு வலயங்களாக இருக்கின்றன. இதனால் எங்களுக்கு பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளதோடு விவசாயத்தை நம்பி இருந்த மக்களின் குடும்ப பொருளாதாரமும் பின்நோக்கிச சென்றுள்ளது. இதனை எங்கட விவசாய நிலங்கள் அனைத்திலிருந்தும் இராணுவம் முற்றுமுழுதாக வெளியேற வேண்டும் என்பதுதான் எங்கட கோரிக்கை.

இவ்வாறு உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து இடம்பெயர்ந்து வாழ்ந்துவரும் பலரை சந்தித்தோம். அவர்கள் அனைவரினதும் நிலைமைகள் கவலை அளிப்பதாகவே உள்ளன. புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி இராணுவம் அரச, பொதுக்கட்டடங்கள், கோயில்கள் என்பவற்றில் இருந்து விலகி மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழி சமைக்க வேண்டும். அத்தோடு இடம்பெயர்ந்து இருக்கின்ற மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீள குடியமர்த்தவேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. ஆனால் சிங்கள இராணுவமோ இதற்கு முரணாகவே நடந்து வருகிறது. காலத்திற்குக் காலம் காவல் அரண்களும் மு்காம்களும் அதிகரிக்கப்படுகின்றதே தவிர இது வரைக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா? என்றால் இல்லை என்றே கூறவேண்டும்.

சொந்த ஊரில் சில மீற்றர் தூர இடைவெளிகளில் கடந்த ஐந்து ஆறு வருடங்களாக இடம்பெயர்ந்து வாழ்ந்துவரும் மக்களின் நிலைமைகள் மோசமாகவே உள்ளன. இதனால் அவர்களது வாழ்க்கைத்தரம் கல்வி உட்பட பல்வேறு விடயங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே இனியும் பொறுமையாக இருக்கமுடியாது. பொறுமையாக இருந்தது போதும் என்ற நிலையில் மக்கள் இனி வரும் காலங்களில் தொடர்ச்சியான பல போராட்டங்களை நடத்தத் தீர்மானித்துள்ளனர். இதற்கு அடையாளமாக எதிர்வரும் 11ஆம் திகதி அடையாளமாக A-9 வீதியை ஒரு மணித்தியாலம் மறித்து போராட்டம் நடத்த முடிவு எடுத்துள்ளனர். இவ்வாறு மக்கள் போராட்டம் தொடர்ந்து நடக்கவேண்டும். திலீபன் கூறியதுபோல மக்கள் புரட்சி வெடிக்கவேண்டும். அப்போதாவது, சிங்கள தேசம் எமது பிரச்சினையைத் தீர்க்கவேண்டும். இல்லையேல் தமிழீழத்தேசியத் தலைவர் கூறியதுபோல தனிநாடு அமைப்பதைத் தவிர வேறு வழி இல்லை. தமிழீழம் எப்போதோ அப்போதுதான் நாங்கள் எமது சொந்த இடங்களில் நிம்மதியாக வாழமுடியும் என்பது கடந்த கால சம்பவங்களிலிருந்து நாம் கற்றுக்கொண்ட உண்மை. இதைத்தவிர வேறு எந்த வழியும் இல்லை.







# தேசத்தின் அழகு மக்கள்!



சுழியன்

இலங்கைத்தீவில் சிங்களவர் பெரும்பான்மையாகவும், தமிழர், இஸ்லாமியர், பறங்கியர் முறையே சிறுபான்மையினமாகவும் வாழ்கின்றனர். இதில் பிரச்சினை என்னவென்றால் இந்நாட்டில் இடம்பெற்றுவருகின்ற உள்நாட்டுப் பிரச்சினை காரணமாக சிங்களப் பேரினவாதிகளாலும், சிங்கள அரசுகளாலும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கையால் தமிழர்களின் இன விகிதாசாரம் குறைந்துவிட்டது; குறைந்துகொண்டு வருகின்றது.

இவ்வாறு தமிழர்களின் இன விகிதாசாரம் குறைந்தமைக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. அவற்றில்

*உள்நாட்டு யுத்தம்

*புலம்பெயர்ந்து சென்றமை

*கல்வியறிவு, நாகரிக வளர்ச்சி, வறுமை காரணமாக பிறப்புகளின் வீதம் குறைந்தமை

*இறப்புக்களின் வீதம் பிறப்பை விட அதிகமாக உள்ளமை.

*ஆயுட்காலம் குறைவு.

*அண்மைக் காலமாக அதிகரித்த நிரந்தரக் கருத்தடை சத்திரசிகிச்சை.

*காலம் தாழ்த்திய திருமணம்.

இவ்வாறான பல காரணங்களால் இத்தீவில் தமிழ் இன விகிதாசாரம் குறைவடைந்து வருகின்றது. இதில் அண்மைக்காலமாக நிரந்தர கருத்தடை சத்திரசிகிச்சை செய்யும் தமிழ்ப்பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

இதன்படி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இதன் விபரங்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் மாவட்ட வைத்திய அதிகாரி இ.சதானந்தன் அவர்களைச் சந்தித்தோம். அவர் தரும் விபரங்கள்.

"கடந்த காலங்களை விட இப்போது எங்களுடைய வைத்தியசாலைக்கு கருத்தடைச் சத்திரசிகிச்சை செய்யவருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. ஆனால் நாங்கள் ஒரு கட்டுப்பாட்டினை வைத்திருக்கின்றோம். என்னவென்றால் கருத்தடை சத்திரசிகிச்சை செய்ய வருகின்றவருக்கு ஐந்து பிள்ளைகள் இருக்கவேண்டும், கருத்தடைச் சிகிச்சை செய்பவர் முப்பது வயதினை கடந்து இருக்கவேண்டும். அத்தோடு அவரது மூத்தபிள்ளைக்கு பத்துவயதைக் கடந்து இருக்கவேண்டும். இருந்தும் இந்தக் கட்டுப்பாடுகளை மீறி வருகின்றவர்களுக்கு வேறு தற்காலிக கருத்தடை சிகிச்சைகளைச் செய்யுமாறு அதாவது லூப், ஆணுறை, ஊசி மற்றும் ஏனைய தற்காலிக முறைகளைப் பின்பற்றுமாறு கூறி அனுப்புகின்றோம். ஆனால் இரண்டு, மூன்று பிள்ளைகளுடன் கருத்தடை சிகிச்சைக்கு வருகின்றவர்களின் எண்ணிக்கை அதிகளவாக இருக்கின்றது. இதற்குக் காரணம் இப்படி வருகின்ற பெரும்பாலான குடும்பங்களின் பொருளாதார நிலைமைகள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன. அவர்களால் நான்கு, ஐந்து பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பது என்பது இயலாமை.

இவ்வாறானவர்களுக்கு நாங்கள் கருத்தடைச் சிகிச்சை செய்யாமல் விட்டால் பின்னர் அவர்களால் பெற்றுக்கொள்ளப் படுகின்ற பிள்ளைகள் ஒழுங்கான போசாக்கின்மை போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டி ஏற்படும். இன்று காலை கூட ஒரு அம்மா எங்களிடம் கருத்தடை சத்திரசிகிச்சை செய்ய வந்தார். அவருக்கு மூன்று பிள்ளைகள், மூத்த பிள்ளைக்கு ஆறு வயது அவருக்கும் முப்பது வயது, நாங்கள் சத்திரசிகிச்சை செய்ய மறுத்தோம். இருந்தும் அவர் அழுகின்றார். தனக்குக் கட்டாயம் செய்யச்சொல்லி. அதற்குக்காரணம் அவரது குடும்ப பொருளாதாரம். எனவே நாங்களும் ஒன்றும் செய்ய ஏலாது கட்டாயம் சிகிச்சை செய்யத்தான் வேண்டும். இப்படியே போனால் இன்னுமொரு ஐம்பது வருடங்களின் பின் இத்தீவில் தமிழர்களின் விகிதாசாரம் குறைவடைந்து காணப்படும்.

இதைவிட திருகோணமலை மாவட்ட வைத்தியசாலையில் மூன்று வருடங்கள் சேவையாற்றி கடந்த ஒருவருடமாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்திய அதிகாரி குகராசா அவர்களின் கருத்துப்படி திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்கள் கருத்தடை சத்திர சிகிச்சை செய்யும் வீதம் அதிகமாக இருக்கின்றது, இஸ்லாமியர் மிகமிக குறைவாகவே வருகின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தினைப் பொறுத்தவரை இது நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது எனவும் கூறுகின்றார் வைத்தியர் குகராசா அவர்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தினைப் பொறுத்தவரை கடந்த 2004ஆம் ஆண்டு 269உம் இந்த ஆண்டு இதுவரைக்கும் 58 நிரந்தர கருத்தடை சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. இதைவிட பொன்னம்பலம் மருத்துவமனையில் கடந்த ஆண்டு 25உம் இந்த ஆண்டு இதுவரைக்கும் 20 கருத்தடைச் சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

இது தொடர்பாக பொன்னம்பலம் மருத்துவமனையினர் கருத்துக் கூறும்போது தங்களிடம் வருபவர்களில் பெரும்பாலும் மூன்று முறை சிசேரியன் மூலம் குழந்தை பெற்றவர்கள். இவ்வாறானவர்கள் இனி குழந்தை பெற்றுக்கொள்ள அவர்களது உடல் நிலை இடம் கொடுக்காது. எனவே அவ்வாறானவர்களுக்குதான் தாங்கள் கருத்தடை சத்திரசிகிச்சை மேற்கொள்வதாக தெரிவித்தனர்

இதைவிட பெரும்பாலானவர்கள் வடபகுதியை விட்டு வெளியே சென்று தனியார் வைத்தியசாலைகளில் பணம் கொடுத்து கருத்தடை சத்திர சிகிச்சை மேற்கொண்டு வருகின்றனர்.

ஒரு புறம் இவ்வாறு கருத்தடை சத்திரசிகிச்சை செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு அடிப்படைக் காரணங்கள் ஒன்று வறுமை, மற்றொன்று கல்வியறிவு.


வறுமைகாரணமாக அதிகளவான பிள்ளைகளைப் பெற்று வளர்க்க முடியாமை. அதற்கு அவர்களது குடும்ப பொருளாதார சூழ்நிலை இடம்கொடுப்பது இல்லை. இதனை மீறி ஏதேனும் நடவடிக்கை எடுப்போமானால் பிறக்கின்ற குழந்தைகள் வளர்கின்ற போது குறைபாடுகளுடன் வளரலாம். அல்லது சில வேளை சிறுவர் துஷ்பிரயோகங்கள் ஏற்படவும் வாய்ப்பு இருக்கின்றது. மறுபுறம் நாகரிகக் கவர்ச்சி, வளர்ச்சி காரணமாக ஓரிரு பிள்ளைகளுடன் கருத்தடை செய்வது.

எனவே கருத்தடை செய்வதினால் எதிர்காலத்தில் தமிழர்களின் இன விகிதாசாரம் இந்நாட்டில் குறையும் நிலை ஏற்படும். செய்யாது விடின் வறுமை காரணமாக பல சமூகப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை உள்நாட்டு போர் காரணமாக அதிகளவானோர் புலம் பெயர்ந்து சென்றுவிட்டனர். இதைவிட இறப்பு வீதம் அதிகரித்துக் காணப்படுகின்றது. குறிப்பாக அண்மையில் ஏற்பட்ட சுனாமியின் அனர்த்தம் காரணமாகவும் பெரும்பாலான தமிழ் மக்களே இறக்க நேரிட்டது. மேலும் யுத்தப் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் என்பதினால் பல்வேறு நோய்வாய்ப்பட்டு இறக்கின்றனர். அத்தோடு நேரடியான போரின் தாக்கத்தாலும் இறக்கின்றனர். மேலும் சிங்கள அரசுகளின் சில திட்டமிட்ட நடவடிக்கைகள் போன்ற காரணங்களால் இறக்கின்ற தமிழர்களின் வீதம் அதிகளவே.

எனவே பிறப்பு வீதம் குறைவாகக் காணப்பட இறப்பு வீதம் கணிசமான அளவு அதிகரித்துக் காணப்படுகிறது. அதேவேளைகருத்தடை செய்பவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

ஒரு தேசத்தின் அழகு என்பது மக்கள்தான். அந்த மக்கள் இல்லையென்றால் அது காடுதான். எங்களுடைய பிரதேசம் பரந்துபட்ட பிரதேசம். இங்கு மக்கள் இல்லையென்றால் எமது தேசத்தினை வளமாக்க முடியாது. இந்நிலைமை காலப் போக்கில் சில வேளைகளில் நிலம் இருக்கும் ஆனால் அந்நிலத்தினை பண்படுத்த ஆட்கள் இல்லாத நிலைமை உருவாகலாம். இப்போதய சூழ்நிலையிலும் கூட சாதாரண மனிதவலு அதாவது கூலியாட்கள் பிரச்சினை பெரும் பிரச்சினையாக உள்ளது. எமது பிரதேசத்தின் மீள் கட்டுமான பணிகளில் பெரும்பாலும் தெற்கிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மனித வலுவே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஒரு நாட்டினுடைய அடிப்படை மூலதனம் அந்நாட்டு மக்கள் எனலாம்.



முக்கியமாக இங்கு கவனிக்கப்பட வேண்டிய மற்று மொரு பிரசசினை என்னவென்றால் படித்த வசதி வாய்ப்புக்கள் நிறைந்த மக்களே பெரும்பாலும் குடும்பக்கட்டுப் பாட்டு சிகிச்சைக்கு அதிக அக்கறை காட்டுபவர்களாகத் திகழ்கின்றனர். இவர்கள் ஓரிரு குழந்தைகளுடன் கருத்தடை சத்திரசிகிச்சையை மேற்கொள்கின்றனர். ஆனால் வறிய குடும்பத்தினை சேர்ந்த மக்கள் குடும்பக்கட்டுப்பாட்டு சிகிச்சை செய்வதில் ஒரு நியாயம் இருக்கிறது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி. 27 . 05 . 2005

மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# அரசின் தவறு..!

தமிழர் தாயகப் பிரதேசத்தை சிங்கள மயப்படுத்தும் வகையில் சிங்கள ஆக்கிரமிப்பின் குறியீடாக புத்தர் சிலைகளை நிறுவி-மக்களின் உணர்வுகளைச் சிதறடித்து தமிழ்மக்கள் மீது இனக்கலவரத்தை தூண்டிவிடும் செயலில் அரச படைகளும் சிங்கள இனவாதிகளும் இறங்கியுள்ளனர். இது மிகவும் ஆபத்தான சூழலை நாடுமுழுவதும் ஏற்படுத்தப் போகிறது என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் எச்சரித்துள்ளார்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் அவர்கள் இவ்வாறு எச்சரிக்கை விடுப்பதற்குக் காரணம் தற்போது திருகோணமலை நகரில் நிறுவப்பட்டிருக்கும் புத்தர் சிலையும் அதன் பின்னால் புதைந்துகிடக்கும் உள்நோக்கங்களினதும் அடிப்படையிலானதாகும்.

அத்தோடு தமிழ் மக்கள் மீது 1956, 1977, 1983 என கட்டவிழ்த்துவிடப்பட்ட இனக்கலவரங்களின் அடிப்படையிலுமாகும்.

ஒரு வழிபாட்டுச் சுதந்திரத்திற்கூடாக ஆக்கிரமிப்பு எண்ணத்தையும், வன்முறையையும் தூண்டும் மனோபாவத்தை கிளறிவிடுவதன்மூலம் இனவாதிகள் இந்த கலவரத்தை ஏற்படுத்திவிடமுனைகின்றனர்.

உண்மையில் சிங்கள மக்களின் வழிபாட்டுச் சுதந்திரத்தையும், இறைவழிபாட்டு உரிமையையும் தமிழ் மக்கள் மதிக்கவே செய்கிறார்கள். பூசிக்கவே விரும்புகிறார்கள்.

ஆனால் பௌத்த மார்க்கத்தின் பெயரால் சிங்கள மேலாண்மைவாத அரசியலை தமிழர் தாயகத்தில் நிறுவமுயல்வதை தமிழ்மக்களால் ஒருபோதும் சகித்துக் கொள்ள முடியாது.

திருகோணமலையில் சர்ச்சைக்குரிய இந்த புத்தர் சிலையை நிறுவியதன்மூலம் சிங்கள இனவாதிகள் மொழியின் பெயரில் உருவாக்கிய இனவாதத்தை மார்க்கத்தின் பெயரில் இப்போது வன்முறையாக தூண்டிவிடமுயல்கின்றனர்.

அத்தோடு இந்த தீய நோக்கத்தை பயன்படுத்தி தமிழர் தாயகத்தை கபளீகரம் செய்துவிட ஒரு இனக்கலவரத்தை பயன்படுத்த முனைவதையே காட்டுகிறது.

உண்மையில் புத்தர்சிலை, ஆக்கிரமிப்பின் சின்னமாகவும்கலவரத்தின் குறிகாட்டியாகவும் இன்று மாறியிருப்பதற்கு அடிப்படையில் அரசே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

ஏனெனில் தமிழர், சிங்களவர், இஸ்லாமியர், பறங்கியர், கிறிஸ்தவர்கள் என பல்வேறு இனங்களைக் கொண்ட இலங்கைத்தீவில் பௌத்த மதத்திற்கு தேசிய அந்தஸ்தும், கௌரவமும் வழங்கி ஏனைய மதங்களைச் சார்ந்த மக்களை அந்நியப்படுத்தி, இந்த குறுகிய மதவாதப் போக்கை பயன்படுத்தியதன் மூலமாகவே பௌத்த பேரினவாதத்திற்கு வழி கோலியதுடன் தமிழ்த் தேசிய இன முரண்பாட்டைத் தீவிரமடையச் செய்தது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஆகவேதான் இன்றைய இந்த நிலைக்கு அடி விதையை சிங்கள அரசுகளே தூவின.

இப்போது நடைபெறுவது கூட சிங்களதேசத்தின் இனவாத், மதவாத அடக்குமுறையே அன்றி வேறில்லை.

இதனையே இதற்கு துணைபோவதன்மூலம் அரச படைகளின் செயற்பாடுகள் புலப்படுத்துகின்றன.

உண்மையில் தமிழ் மக்கள் இனவாதம் கலைந்த, மதவாதம் கலைந்த, ஆக்கிரமிப்பு எண்ணம் கலைந்த சிங்கள மக்களின் வழிபாட்டுச் சுதந்திரத்தையும் இறைவழிபாட்டு உரிமையையும் புனிதமாக மதித்தே நிற்கிறார்கள்.

# காலத்தை இழுத்தடிக்கும் தந்திரம் தீவிரம் பெறுகிறது

காலத்தை இழுத்தடித்து தமிழர்களை இலவு காக்க வைக்கும் அரசியல் உத்தி, இன்று சிறிலங்காவில் முக்கிய இடத்தைப்பிடித்து விட்டது. இலங்கைத்தீவின் சுதந்திர காலத்தில் இருந்து தொடரும் தமிழர்களை ஏமாற்றும் இந்தத் தந்திரம், கடந்த மூன்றாண்டுகளில் தீவிரம் பெற்றிருப்பதுபோலவே தோன்றுகின்றது.

அதிலும் குறிப்பாக சுனாமிப் பேரழிவு ஏற்பட்டதன் பின்பான இந்த ஐந்து மாதத்திலும் இன்னும் துலக்கமாகவே அது தென்படுகின்றது.

தென்னாசிய பிராந்தியத்தில் ஏற்பட்ட பேரழிவில் இருந்து எல்லா நாடுகளுமே குறிப்பிடத்தக்களவுக்கு மீண்டுவிட்டன. தமது பொருளாதார வசதியைக் கொண்டும் உதவி வழங்கும் நாடுகளின் நிதியினைக் கொண்டும் பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்பி விட்டார்கள்.

ஆனால், இலங்கைத்தீவின் வடக்கு-கிழக்கு பகுதி இன்னும் மீட்புப் பணிகள் மட்டும் பூர்த்தியான கோலத்தோடு இருப்பது ஏன்?

சிறிலங்கா அரசின் ஆளும் தரப்புகளுக்கு இடையேயான உள்முரண்பாடுகள் மட்டும் இதற்கு காரணம் அல்ல என்பது வெளிப்படையானது. மறுவாழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்கு தவிர்க்க இயலாமல் வேண்டப்படும் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க, பெரும்பான்மை இன சமூகம் பின்நிற்கின்றது.

தமிழர்களுக்கான சுயாட்சியினையோ அல்லது இடைக்கால நிர்வாக சபையினையோ தானும் வழங்கத் தயாராயில்லாத ஆளும் வர்க்கம் வெறுமனே குறுகிய காலத்துள் காலாவதியாகிவிடக்கூடிய பொதுக்கட்டமைப்பையும் உருவாக்க தயங்குவது ஏன்?

எல்லாவற்றுக்கும் உள்ள ஒரே காரணம் எதனை உருவாக்கினாலும் அதன்மூலம் தமிழர்கள் தனித்து வாழ்வதற்கான அங்கீகாரத்தை பெற்றுவிடுவார்கள் என்ற அச்சம் தான். இதுவரை காலமும் இணைந்துவாழ்வதற்கும் விரும்பாத - விடாத அரசுகளின் இந்த அச்சம் ஒரு முரண்பாடுதான்.



**ஞாபகன்**

ஆனால், அவ்வப்போது தமிழர்களுக்கான சிலவற்றை வழங்கத்தயாராவதுபோன்ற ஆரவாரத்தை ஒவ்வொரு அரசுகளும் காட்டுகின்றன. அதன் கடைசி ஆரவாரமாக சந்திரிகாவின் கண்டி மாநாட்டையொட்டிய பிரகடனங்கள் இருந்தன.

சர்வதேச நாடுகளின் நிதியைப் பெறுவதற்கான உத்தரவாதம் கிடைக்கும்வரை பொதுக்கட்டமைப்பை உருவாக்கப்போவதாக பேசி வந்தவரின் தொனி, இப்போது குறைந்துவிட்டது. இதற்கான உயிரையும் இழக்கத்தயார் என்று பேசி வந்த அவர், தமிழர்கள் உயிர்களை இழக்கத் தலைப்படும் காலத்துக்காகக் காத்திருந்தாரா என்ற கேள்வியே எழுகின்றது.

அது தொடர்பானவிடயங்கள் ஆரவாரமாக்கப்பட்ட சமயம், சிறிலங்கா இராணுவ பொலிஸ் துணையுடன் புத்தர்சிலை நிறுவல் தொடங்கியது.

அது உண்மையில் நேர்மையானதாக இருக்கவில்லை என்பதை இரவோடிரவாக, இரகசியமாக நிறுவியமையையே எடுத்துக் காட்டுகின்றது. அதனை ஒரு மதக்கலவரமாகவும் பின் இனக் கலவரமாகவும் பரிணாமம் அடையச்செய்யும் சூழ்ச்சிகளையும் படைகளே மேற்கொண்டிருக்கின்றன.

தமிழர் தாயகத்தை சிங்களமயமாக்கும் இந்தச் செயலை முடிவுக்குக் கொண்டுவருமாறு தொடர் போராட்டங்களை மக்கள் நடத்த வேண்டியதாய் உள்ளது. இதுமுடிவற்ற நீண்ட போராட்டமாக்கப்படும் அணுகுமுறைகள் தான் அரசுத் தரப்பால் மேற்கொள்ளப்படுகின்றன.

> **சர்வதேச நாடுகளின் நிதியைப்பெறுவதற்கான உத்தரவாதம் கிடைக்கும்வரை பொதுக் கட்டமைப்பை உருவாக்கப்போவதாக பேசி வந்தவரின் தொனி, இப்போது குறைந்துவிட்டது. இதற்கான உயிரையும் இழக்கத் தயார் என்று பேசி வந்த அவர், தமிழர்கள் உயிர்களை இழக்கத் தலைப்படும் காலத்துக்காகக் காத்திருந்தாரா என்ற கேள்வியே எழுகின்றது.**

ஒரு வாரத்தை தாண்டிவிட்ட இவ்விவகாரத்தில் பல குண்டுகள் வீசப்பட்டுவிட்டன. சிங்களக் காடையர்களால் தமிழர்கள் வெட்டிக் கொல்லப்பட்டும்விட்டனர். பௌத்த பிக்குகள் இரத்த ஆறு பாய்ந்தாலும் புத்தர் சிலையை அகற்றப் போவதில்லை என சூளுரைத்துள்ளனர்.

இந்தத் திசை திருப்பல்களுள் பொதுக் கட்டமைப்பு விவகாரம் அடிபட்டுப் போய்விட்டது. அதனை இன்னும் காலம் கடத்தி மறக்கச் செய்வதற்கு புத்தர் சிலை விவகாரத்துக்கு தீர்வு காண்பதற்கான காலமும் பிற்போடப்படுகின்றது.

புத்தர் சிலையை சட்ட விரோதமாக நிர்மாணிப்பு எனக் கூறி அகற்ற உத்தரவிட்ட நீதிமன்றம், பிக்குகளாலேயே அவமதிக்கப்பட்டுவிட்டது. நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்துக்காக எஸ்.பி திசநாயக்காவை இரண்டு வருடம் சிறையில் அடைத்த அரச இயந்திரம், இதுவிடயத்தில் கை கட்டி நிற்கின்றது. மிகச் சுலபமாகத் தீர்த்துவிடக் கூடிய இந்த விடயத்தையே மேலும் ஒருவாரகால அவகாசத்துக்கு அரசு பின்தள்ளியுள்ளது.

இது பின்தள்ளவேண்டும் என்ற தவிர்க்க முடியாத காரணத்தினால் செய்யப்பட்டது அல்ல: நீதியான தீர்வு இது விடயத்தில் காணப்படக்கூடாது என்பதன் வெளிப்பாடாகவே இதைக் கருதமுடியும்.

இதுவே இவ்வாறெனில் சமரசங்கள் மூலம் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண்பது எப்படிச் சாத்தியம் என்றகேள்வியே தவிர்க்க முடியாமல் எழுகின்றது.




"திருமலையில் திடீரென இரவில் புத்தர்சிலை நிறுவப்பட்டது"
"பகலில் செய்யப்பயம்"

"யாழ்.நகரில் வர்த்தகர் விபரங்களை இராணுவம் திரட்டிவருகிறது"
''இவையும் யாவாரத்தில இறங்கப்போகினம்"

''புத்தளத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் கடத்தமுயன்ற தங்கம் சிறிலங்காப் பொலிசாரால் கைப்பற்றப்பட்டது"
நம் நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குக் கடத்தல்"

வன்னியிலிருந்து வந்த வாகனத்தில் பெருந்தொகைப் பணம் மன்னார் பொலிசார் கைப்பற்றினர்.
"அயல் நாட்டிலிருந்து எங்கள் நாட்டுக்குக் கடத்தல்-"

புத்தளம், மன்னார் வீதியை மீளத்திறப்பது பற்றி ஆராயப் படுகிறது.
"எல்லாந்திறந்து வேலையில்ல-மனந்திறக்கவேணும்"

# 83.. 90.. 2005..?



உயர் விழுமியங்கள் சிங்களப் பேரினவாதத்தினதும் அதனது நிறுவனமயப்பட்ட அமைப்பாகிய சிறிலங்கா அரசினதும் கைகளில் பந்தாடப்படுகின்றமையின் வெளிப்பாடுகளே திருமலையில் இன்று அரங்கேறிக்கொண்டிருக்கின்றன. தர்மத்தையும் அஹிம்சையையும் போதித்த புத்தபகவானின் உருவச்சிலையை இரவோடிரவாகக் கொண்டு வந்து இருத்திவிட்டதிலிருந்து திருமலை பதற்றத்தின் மையமாக விளங்குகிறது. இந்தப் பதற்றம் அயற்பகுதிகளுக்கும் பரவச் செய்யப்படலாமென்பதற்கான அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்டு வருகின்றன.

அரச பதவியைத் துறந்து நள்ளிரவில் அரண்மனையிலிருந்து வெளியேறியவர் கௌதமபுத்தர். இவரது சிலையோ இரவோடிரவாக நகரின் மத்தியிலே தோன்றுகின்ற சூழல் இன்றைய திருமலையில் நிலவுகின்றது. நகரசபையின் காணியிலே எந்தவிதமான முன்னனுமதியுமின்றி புத்தர்சிலை தோன்றிவிட்டது.

இதன் பின்னர் நிகழ்ந்த சம்பவங்களும், ஆற்றப்பட்ட உரைகளும், விடுவிக்கப்பட்ட எச்சரிக்கைகளும், வழங்கப்பட்ட வாக்குமூலங்களும் மிக முக்கியமானவை. இவை சிங்களப் பேரினவாதத்தினதும், சிறிலங்கா அரச இயந்தரத்தினதும் முகத்தையும் அகத்தையும் பட்டவர்த்தன[illegible] வெளிக்காட்டுபவை.

இரவோடிரவாக வைக்கப்ப[illegible] திடீர் புத்தர் சிலையை அகற்றவே[illegible]மென திருமலை தமிழ் மக்கள் [illegible]வை விடுத்த வேண்டுகோளை யடுத்து கூட்டப்பட்ட பலதரப்புக் [illegible]ந்தில் தீர்மானம் எதுவும் எட்டப்ப[illegible] பிரச்சினையை நீதிமன்றுக்கு [illegible]ண்டு செல்வதாக முடிவுசெய்ய[illegible].

மறுநாள் நீதி மன்றி[illegible]சபையால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. சிலையை தற்காலிகமாக அகற்றுமாறு மன்று உத்தரவிட்டது.

ஆனால் சிலை அகற்றப்படுவதற்குப் பதிலாக, அதனை கத்திகள், பொல்லுகளுடன் சூழ்ந்துகொண்டனர் சிங்களக் காடையர்கள். அவர்களைச் சூழ்ந்து சிறிலங்கா பொலிசாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டனர். திருமலையின் பாதுகாப்பு இராணுவத்தினருக்கு பாரப்படுத்தப்பட்டது.

நீதிமன்றத் தீர்ப்பை அமுல்படுத்த வேண்டிய பொலிசார் அதற்குத் தடையாக ஆயுதபாணிகளாக நின்றவர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குகின்ற விசித்திரம் திருமலையில் நடைபெறுகின்றது. இந்த இடத்தில் மட்டக்களப்பு சந்திவெளியில் வீதிமறியலில் ஈடுபட்ட தமிழ் மக்கள் மீது தன்னிச்சையாக துப்பாக்கிச் சூடு நடத்திய சிறிலங்காப் படையினரின் மனநிலையினை ஒப்புநோக்கிப் பாருங்கள். நீதிமன்றக் கட்டளையை பொலிசார் நிறைவேற்ற விடாது ஆயுதபாணியாக நிற்பவர்கள் மீது கண்ணீர்ப்புகையோ, தடியடியோ, குறைந்தபட்சம் "கலைந்து போங்கள்" என்ற எச்சரிக்கை அல்லது அறிவித்தலையோகூட சிறிலங்காப் பொலிசார் விடுக்கவில்லை.

> நீதிமன்றத் தீர்ப்பை அமுல்படுத்தவேண்டிய பொலிசார் அதற்குத்தடையாக ஆயுதபாணிகளாக நின்றவர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குகின்ற விசித்திரம் திருமலையில் நடைபெறுகின்றது. இந்த இடத்தில் மட்டக்களப்பு சந்திவெளியில் வீதிமறியலில் ஈடுபட்ட தமிழ் மக்கள் மீது தன்னிச்சையாக துப்பாக்கிச்சூடு நடத்திய சிறிலங்காப் படையினரின் மனநிலையினை ஒப்புநோக்கிப்பாருங்கள். நீதிமன்றக் கட்டளையை பொலிசார் நிறைவேற்றவிடாது ஆயுதபாணியாக நிற்பவர்கள் மீது கண்ணீர்ப்புகையோ, தடியடியோ, குறைந்த பட்சம் "கலைந்து போங்கள்" என்ற எச்சரிக்கை அல்லது அறிவித்தலையோ கூட சிறிலங்காப் பொலிசார் விடுக்கவில்லை.

மாறாக சிலையை அகற்றினால் அது நாடளாவிய ரீதியில் பௌத்தர்கள் மத்தியிலே கிலேசத்தை ஏற்படுத்தி விபரீதங்களுக்கு அது வழிவகுக்கக் கூடுமென்பதான வியாக்கியானத்தை திருமலை மாவட்டத்துக்கான சிறிலங்காவின் பொலிஸ் உயர் அதிகாரி நீதிமன்றிலே தெரிவிக்கிறார். (சந்திவெளியிலே துப்பாக்கிப் பிரயோகம் செய்த படையினரின் மனநிலையையும் இந்த அதிகாரியின் கருத்தையும் ஒரு சேரப் பார்க்கும்போது என்ன தோன்றுகிறது?) இது நீதிமன்றத் தீர்ப்பை அவமதிப்பது ஆகாதா? நீதிமன்றத் தீர்ப்பை அமுலாக்குவதால் வரக்கூடிய விளைவுகள் பற்றி முன்னுணர்ந்து தெரிவிப்பதா பொலிசாரின் பணி?

திடீர் புத்தர்சிலை விவகாரத்தில் திருமலை நீதவான் நீதிமன்ற நீதவானின் தீர்ப்புக்கு என்ன நடக்கிறது? சிறிலங்காவின் அதியுயர் சபையாகிய நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினராகிய பௌத்த பிக்கு ஒருவர் வானத்துக்கும் பூமிக்குமாகக் குதிக்கிறார். புலிகளின் நிர்ப்பந்தத்தை அடுத்து வழங்கப்பட்ட தீர்ப்பு இது என விமர்சிக்கிறார். சபைக்குத்தலைமை தாங்கிய சபாநாயகர் நீதிமன்றத்தீர்ப்பை விமர்சிக்கக் கூடாதெனக் கூறி குறித்த பிக்கு எம்பியை அமரும்படி பணித்தார்.

நாடாளுமன்றினுள்ளே பேசும் எந்த விடயத்துக்காவும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் தண்டிக்கப்பட முடியாதென்பது சிறப்புரிமை. ஆனால் நீதிமன்றத் தீர்ப்புக்கள் விமர்சிக்கப்படக் கூடாதென்பது சட்டம். அப்படியானால் இந்த இரண்டுக்குமிடையிலான முரண்பாடுகளின்போது எது மேலோங்கி நிற்கிறது. தவறிழைப்பவர் மீது நடவடிக்கை எடுப்பது யார்?

சரி இதுதான் நாடாளுமன்றினுள்ளே நடைபெற்றது. வானொலி நிகழ்ச்சி ஒன்றில் திருமலை மாவட்ட ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் மேற்படி தீர்ப்பை வாங்கு வாங்கென்று வாங்கினார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த நேயர் ஒருவர் தொலைபேசியில் நிகழ்ச்சி அறிவிப்பாளரை கேட்டார்; நீதிமன்றத் தீர்ப்பை இவர் இப்படித் தாக்குகிறாரே இது குற்றமில்லையா? என்று அதற்கு அறிவிப்பாளர் வழங்கிய பதில் உண்மைதான். இது பகிரங்கமாக ஊடகத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. பார்ப்போம் இதற்கு யார் என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள்? எனப் பதிலளித்தார்.

ஆக நீதிமன்றத் தீர்ப்பு அமுலாக்கப்படாதது மட்டுமல்ல அது பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடியது என வியாக்கியானப்படுத்தப்பட்டது மட்டுமல்ல, பகிரங்கமாக கேவலப்படுத்தப்பட்டும்விட்டது. ஆனால் அதற்காக இதுவரையும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதுதான் இங்கு கவனிக்கத்தக்கது.

[illegible] புத்தர் சிலை அகற்றப்பட்டால நாட்டில் இரத்த ஆறு ஓடும் என ஒரு பௌத்த மதகுரு சிங்கநாதம் செய்திருக்கிறார். பாருங்கள் எவ்வளவு தலைகீழாக நடைபெறுகின்றன விடயங்கள்? சட்டவிரோதமாக வைக்கப்பட்ட புத்தர்சிலை நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைய அகற்றப்பட்டால் நாட்டில் இரத்த ஆறு ஓடும் என எச்சரிக்கப்படுகிறது. எச்சரிப்பது ஒரு பௌத்த குரு. ஆகவே இரத்த ஆறை உருவாக்கப்போவது அவரது தரப்புத்தான் என்பதில் சந்தேகமில்லை.

அப்படியாயின் தாக்கப்படப்போவது, கொல்லப்படப்போவது யார்? எங்கு?

இங்குதான் திருமலை நீதிமன்றில் பொலிஸ் அதிகாரி வழங்கிய வாக்குமூலத்தைப் பொருத்திப்பார்க்க வேண்டும். " சிலை அகற்றப்பட்டால் நாடெங்கும் வாழும் பௌத்தர்கள் கிலேசமடைவார்கள் அது விபரீதங்களை உருவாக்கலாம்" - என்ற கூற்றின்படி இலங்கைத்தீவின் தென்பகுதியில் வாழும் தமிழ்மக்கள் மீது தாக்குதல் கட்டவிழ்த்து விடப்படும் என்பதுதான் இங்கு விடப்படுகின்ற மிரட்டலாகும்.

இரவோடிரவாக சண்டித்தனமாக வந்தமர்ந்து கொண்ட புத்தர்சிலையை அகற்றினால் நாடெங்கும் தமிழர்களது இரத்த ஆறு ஓடுமென ஒரு பௌத்த பிக்கு கூறுவதை ஒரு பொலிஸ் அதிகாரி நீதிமன்றில் நீதவானிற்கு தெளிவுபடுத்துவதாக உள்ளது இன்றைய சிறிலங்காவின் நிலை.

திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.எழிலன் தமிழ் மக்கள் மீது இனக்கலவரம் ஒன்றை தொண்ணூறாம் ஆண்டு நிகழ்த்தப்பட்டது போல மீண்டும் நடத்த திட்டமிடப்படுகிறது எனத் தெரிவித்திருந்தது தான் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

மீண்டுமொரு கறுப்பு ஜுலை உருவாகும் என கூட்டணியின் பின்வரிசை உறுப்பினர் ஒருவர் சிறிலங்காவின் நாடாளுமன்றிலே தெரிவித்திருந்தும் இங்கு சேர்த்து வைத்து நோக்கப்படவேண்டியதாகும்.

எனவேதான் உயர் விழுமியங்கள் பந்தாடப்படுகின்றன என முதற்பத்தியிலே குறிப்பிட்டோர் உண்மையில் இங்கு பந்தாடப்படுவது விழுமியங்கள் மட்டுமல்ல. சிறிலங்காவின் எதிர்காலமுந்தான். ஏனெனில் 83 போலோ, 90 போலோ ஒரு இனக்கலவரம் தமிழர்களை இடம்பெயரவைக்கவும் கொன்றொழிக்கவும் வாய்ப்பான கருவியாக 2005 இல் இருக்கப்போவதில்லை.

**பு.சத்தியமூர்த்தி**



## விசுக்விசுக் விசாலாச்சி

அடியாத்தி என்ன? இந்தளவுக்கு விட்டிட்டிய. ஆளாளுக்கு ஒரு நீதி வழங்குறாப் பலயில்ல இருக்கு. சட்டத்திலயே நீதிமன்றத்த அவமதிச்சா குத்தமெண்டுதான் சொல்லிக்கிறாக, அப்பறமென்ன? எடேய் விளக்கெண்ணப் பணியாரந்தின்னி. ஏன் வள வளண்டு பேசிறா...ங அதென்ன திசநாயக்கர். நீதிமன்ற அவமதிச்ச தாமெண்டு செயில்ல போட்டிருக்கினம், திருகோணமலை நீதிபதியின்ர தீர்ப்பை எதிர்க்கிறவைக்கு பொலிசுப்பாதுகாப்பு....


அது கிடக்க அசோகர் சொல்லியிருக்கிறாரடா ஒரு கதை எது திருமலை விவகாரத்தை சனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்து தீர்வொண்டப் பெற்றுத்தரப் போறனெண்டு... ஹெ... ஹெ... அப்ப... இவளவும் நடக்கிறதொண்டும் அவவட கவனத்தில இல்ல... ங... அப்பிடித்தானே... அதென்னடா உலகம் முழுக்க ஓடுறபடம் இவவடதியேட்டருக்கு வரயில்ல. பின்ன ஆரியகுளஞ் சந்தியில பந்தல் போட்டவை திருகோணமலையிலும் போடத்தான் ஏற்பாடாக்கும். எடேய் ஏன்ரா என்ர வயித்தெரிச்சலைக் கிண்டிறியள் எப்ப? ஆயிரத்துத் தொளாயிரத்தி எண்பத்தியொண்டில கடைசியாக் குடிசன மதிப்பீடு செய்தநேரம் திருக்கணாமலையின்ர சிங்களச் சனம் 29 வீதமும், தமிழர் 36 வீதமும் இருக்கினம். எடயப்ப ஆயிரத்தி எண்ணூற்றி இருவத்தியேழில இதே ஊரில இதே சிங்களவர் என்ன வீதம் இருந்தவை தெரியுமே... அ... தசம் 01 வீதந்தான் பிறகு அல்லைக்குளம் குமரேசன் கடவை, பார்வதிபுரம், விளாங்குளம், எண்டு துண்டு துண்டாயும் சேருவாவில போல மாவட்டமாயும் கொள்ளையடிச்ச நிலத்தில சவடாலாக் குந்தியிருக்கினம்.

என்ன வரலாறும் மாத்தி எழுதுப்படுது. அப்பிடியே... இடைக்கிடை புத்தர் சிலையளயும் வச்சுப்போட்டாப் பிறகென்ன புத்தர் நேபாளத்திலயே பிறந்தவர்? ச்சா.... அப்பயென்ன? அன்ராசபுரம் ஆசுப்பத்திரியிலயே பிறந்தவர்? போடா திருக்ணாமலை துறை முகத்துக்குக் கிட்டவாத்தான் பிறந்தவர். அதோட அவர் கிண்ணியாவில குளிச்சவர். கோணேசர் மலையில மேயுற மான்களுக்கு அருள் செய்த வர். அந்த மானில ஒண்டுதான் மிகிந்தலைக்கு அவரைக் கொண்டு வந்தது. அப்பிடியே திருக்குணாமலைய கிரிக்குணாமலை எண்டு சொல்லுறது. அது இதெண்டு எழுதிப்பாடப் புத்தகத்தில அச்சடிச்சுப் போட்டா பிறகு அசைக் கேலுமே. பின்னச் சொல்லுறா.

அ.... என்னவோ குடுக்கமாட்டாதவன் சினையாட்டக் காட்டினமாதிரி,உங்களுக்கு தரத்தான் விருப்பம் எல்லாரும் ஒத்துவரட்டன் எண்டொருகதை. அது கிடக்க உறுமயாக்காறர் பாலுக்கழுத மாதிரி அழுகினம். குடாதையுங்கோ குடாதையுங்கோ எண்டு குடையினம். அவையெண்டாலும் பறவாயில்ல மற்றப்பாட்டியும் கூட இருந்தெல்லே குழிபறிக்கினம். எல்லாத்துக்கும் மேலால அம்மா குடுத்திருக்கிறா ஒரு மறுத்தானடி ஆர் என்ன சொன்னாலும் நான் குடுக்கிறதுதான். கதைக்கிறவை காரணஞ் சொல்லட்டுமெண்டு. நானென்ன விளையாட்டுக்கே இதக் கவனிக்கச் சொல்லுறன். அந்த நாளயில ரணிலார் இடைக்கால வரைவப் போட்டுக் கொண்டர, பதவியளப்புடுங்கி.... அடுக்கினவாவே உடன நாட்டுக்குள்ள எது; எந்த அசுமாத்தமுமில்லாம, அவசர காலத்தைப் போட்டா ரணிலற்ற கையமுறிச்சா, ஆளை ஒண்டுஞ் செய்யேலாமப் போச்சு. ஆனா உவளபப்பரிக்கம் போட்டுப் பதவியள வாங்கி, சமாதானம் வந்திட்டுதே. இப்ப பொதுக்கட்டமைப்புக் கதையத் துவங்கி இந்தா அந்தாண்டு விட்டிட்டு போட்டினமே ஒரு போடு, திருக்கணாமலைக்க புத்தர் சிலைய வச்சிட்டு, அதால இனக்கலவரத்தத் தூண்டி பொதுமக்கள ஆபத்துக்க விடுறதுக்கு என்னபேர்? பாற்றா பாற்றா உந்த அடிப்படை உரிமைக்கு அடியில கிடக்குதெல்லே, பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் அதைவச்சு உந்த கலவரத்தைச் சாட்டி ஒரு சுத்துமாத்துவை போடாட்டி. உப்பிடித்தான்ரா நான் அடிக்கிற மாதிரி அடிக்கிறன் நீ அழுகிறமாதிரி அழு எண்டிவை தாளிக்க எங்கட சனம் நான் போறமாரித்தான் போனநான், பின்ன போயிற்ற னெண்டு நினைச்சியளே எண்டமாரி சண்டையைத்துவக்க இந்தா... இந்தா உதுகள் திருந்தாதுகள் எண்டு தோசையப் பிரட்டிப் போடலாம் எண்டொரு திட்டமும் இருக்கும். ம்... கெடுகுடி சொற்கேளாது சாகப் போறவன் மருந்து குடியான் வேறயென்ன....?

# அபாஸின் பலவீனமும் அப்துல்கலாமின் பலமும்





**உலக** அரசியலின் போக்கில் இசைந்துபோகும் நாடுகள் மட்டுமன்றி எதிர்நீச்சல் போட்டு போராடும் நாடுகளும் இல்லாமலில்லை. ஆனால் அநேகநாடுகளும் அவற்றின் ஆட்சியாளர்களும் உலகத்தின் திசையோடு ஒட்டிசெயல்படுபவர்களாகவே காணப்படுகின்றனர். அதேநேரம் மக்களும் அவர்களின் சுயாதிபத்திய தன்னாதிக்க உணர்வும் முற்றாக குலைந்துவிட்டதென கூறிவிடவும்முடியாது. போலிகளை உரு ஏற்றம்செய்து மக்களை ஏமாற்றும் அரசியல் தலைமைகளே மக்களின் திசைகளை திருப்பமுயலுகின்றார்களே அன்றி, மக்கள் உணர்வுகளோடே வாழுகின்றனர். அந்தவகையில் பலஸ்தீன அரசியலையும், இந்திய சனாதிபதியின் ரஷ்ய விஜயத்தையும் அவதானிப்போம்.

## பலஸ்தீன அரசியல்

பலஸ்தீன விடுதலைப் போராட்டம் பற்றி தமிழர்களாகிய நாம் அதிகம் தெரிந்துவைத்திருக்கவேண்டும். அந்த விடுதலைப் போராட்டத்திற்கு நடந்த துயரம் பற்றியும் யசீர் அரபத்தின் மரணத்திற்கு பின்பு ஆட்சிக்கு வந்த முகமட் அபாஸ் அரசாங்கம் பற்றியும் இப்பத்தியில் பல தடவை குறிப்பிட்டுள்ளது. அதனால்

**ஐங்கரன்**

இன்றைய அரசியலின் நிலையை மட்டும் சுருக்கமாகப் பார்ப்போம்.

பலஸ்தீன மக்கள் தாமே தெரிவுசெய்த ஆட்சியாளரை குறுகிய காலத்துக்குள் நிராகரிக்க ஆரம்பித்துவிட்டனர். பகிரங்கமாக அவரை எதிர்த்த ஹமாஸ் இயக்கங்கூட தேர்தல் காலத்தின் பிற்பகுதியில் அனுமதிப்பதுபோன்று காட்டிக்கொண்டு செயல்பட்டது. அதனால் அபாஸ் வெற்றியை இலகுவாகவும் தனக்குரியதாகவும் ஆக்கிக்கொண்டார். பலஸ்தீன மக்களே தாம் தவறான தலைவரை தெரிவுசெய்துவிட்டோம் என வெறுப்படையும் நிலைக்கு அபாஸின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன என இப்போது கருதுகின்றனர். ஆனால் பலஸ்தீன அதிகாரசபையின் சனாதிபதி அபாஸ் என்பதோடு அடுத்த ஐந்தாண்டு சனாதிபதியும் அவர் என்பதை பலஸ்தீன மக்கள் மறுக்கமுடியாது.

ஒரு நாட்டின் தலைவரை தெரிவுசெய்யும் வலு அந்த மக்களுக்கு உரியதாக இருக்கவேண்டும். அந்த நாட்டு மக்கள் சுயமாகவே தாம் முடிவெடுத்து தலைமையை தெரிவுசெய்யவேண்டும். மேற்குலகம் கூறும் சனநாயக முறைப்படியான தெரிவு அல்ல. அது மேற்கை திருப்திப்படுத்தும் தெரிவாக அமையுமே அன்றி அந்தநாட்டு மக்களின் விருப்பை, தேவையை நிறைவுசெய்யும் தலைமையாக ஒருபோதும் அமையாது. இப்படியான தலைமையை கீழைத்தேசத்தில் தெரிவுசெய்ய சந்தர்ப்பமும் வாய்ப்பும் இல்லாத போதே ஆயுதம் தாங்கிய சர்வாதிகாரப் போக்கையுடைய தலைமைகள் தோன்றக் காரணமாகின்றன. அல்லது சனநாயக முறைப்படி தெரிவுசெய்யப்படும் தலைமைகள் நிராகரிக்கப்படுகின்றன. இந்த வரலாற்றை முழு கீழைத்தேசத்திலும் அமுலாக்குவதே மேற்குலகத்தின் விருப்புக்களில் ஒன்றாக உள்ளது. ஆப்கானிஸ்தான், ஈராக், பலஸ்தீனம் என அமெரிக்க சனநாயக வரிசை நீண்டுகொண்டு செல்கிறது. அமெரிக்காவின் விருப்புகளுக்கு இசைபவர்களை தலைவர்களாக மாற்றிக்கொண்டு அவர்களை பொம்மையாகப் பயன்படுத்தி ஆட்சியில் சாதிக்கவேண்டியவற்றை





சாதிப்பதென்ற முறைமையை மேற்குலகம் பின்பற்றிவருகின்றது.

மேற்கில் அத்தகைய முறைமையில் ஒருவரே முகமட் அபாஸ். பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்தி அதன் தலைமையை (இயற்கையாக?) மரணிக்கும்வரை காத்திருந்து தமக்கு இசைந்துபோகும் தலைமையை கண்டுபிடித்து ஆட்சியாளராக மாற்றியுள்ளனர். உண்மையில் பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை முறியடிப்பதில் மேற்கு ஒருவகை பொறிமுறையை கையாண்டு வெற்றி பெற்றிருக்கிறது. அதன் வெற்றியின் ஒரு வடிவமே அபாஸ். இஸ்ரேலுக்கும், அமெரிக்காவுக்கும் விசுவாசம் மிக்க சனாதிபதியாக அவர் செயற்படுவார். எப்படி மிதவாதம் விடுதலையை மட்டுமல்ல ஒரு மக்கள் கூட்டத்தின் வாழ்வையே காட்டிக்கொடுத்துவிடும் என்பதற்கு பலஸ்தீன சனாதிபதி ஒரு உதாரணமாகும். பலஸ்தீன மக்களின் ஐந்துவருட சனாதிபதி அபாஸ்தான். அதில் மாற்றம் நிகழாது மட்டுமன்றி ஐந்து வருடத்துக்கு பின்பும் மீண்டும் அபாஸ் தேர்ந்தெடுக்கப்படலாம். அதுவே மேற்குலக சனநாயகம். அதில் நெளிவு சுளிவு அதிகமுண்டு. அதற்குள்ளால் அபாஸ் வெளிவரக்கூடியவர். சனாதிபதித் தேர்தலின் போது அரபாத்தையும் அவரது இரண்டு விரல்களையுமே காட்டி வெற்றிபெற்றவர் என்பதை மறந்துவிடமுடியாது.

எனவே ஒரு தலைவரை அந்த நாட்டின் மக்கள் கூட்டம் தெரிவுசெய்யமுன்பு 1000 தடவை சிந்திக்கவேண்டும். தெரிந்த பின்பு நிராகரிப்பதைவிட முன்கூட்டியே தீர்மானம் எடுக்கும் போது சரியாக எடுக்க முயலுதல் வேண்டும். போலிகளை நிராகரித்துவிட்டு உண்மைகளையும், யதார்த்தங்களையும் இனங்காண முயலுதல் அவசியம்.

## கலாமின் ரஷ்ய விஜயம்

இந்தியாவின் அப்துல்கலாம் அரச முறைப் பயணமாக ரஷ்யாவுக்கு சென்றுள்ளார். அவரது விஜயத்தின் முதல் நாடு ரஷ்யா என்றவகையிலும் இந்தியா-ரஷ்ய உறவு நீண்டது என்றவகையிலும் இது முக்கிய மானது. அப்துல்கலாம் அரசியல்வாதியல்ல. ஆனால் அரசியலுக்காகவும், இந்தியாவின் நலனுக்காகவும் பயன்படுத்தப்படக்கூடியவர். அந்தவகையில் அவரது ரஷ்ய விஜயம் ஏன் இடம்பெற்றதென்பதைப் பார்ப்போம்.

முதலில் அப்துல்கலாம் ரஷ்யாவில் பலதரப்பட்ட சம்பிரதாய நிகழ்வுகளிலும், தனக்கே உரிய சிலவிடயங்களிலும் கலந்துகொண்டபோது தெரிவித்த விடயங்களின் சாரத்தை தெரிந்துகொள்வோம்.

ஒன்று, தொழில்நுட்பம் பற்றியும் அதனால் உலகம் எட்டவுள்ள மாற்றங்களைப் பற்றியும் தெரிவித்தமை.

இரண்டு அணுவாயுதப்பரவலை இந்தியா ஒருபோதும் அனுமதியாதது மட்டுமன்றி பரவலைத் தடுக்கவும், அதற்காகப் போராடவும் தயாராக உள்ளது இந்தியா என்று தெரிவித்தமை.

மூன்று அரசுகள் பரஸ்பரம் ஒன்றை ஒன்று மதித்து செயல்படுவதுடன் ஓர் அரசின் இறையாண்மையை ஏனைய அரசுகள் மதித்து செயற்படவேண்டுமெனக் கூறியமை.

இவை மூன்றும் சனாதிபதியின் ரஷ்ய விஜயத்தை ஓரளவு தெளிவுபடுத்த முயலுகின்றன. அதாவது இந்தியாவின் தூரநோக்கில் பொருளாதார விருத்தி என்பது முதலிடத்தில் உள்ளது. அத்தகைய தூரநோக்கை அடையவேண்டுமாயின் தெளிவான தொழில்நுட்ப பலமும் பலமான கூட்டுத்தன்மையும் உருவாக்கப்படவேண்டும். அதன் ஒரு கூறாக ரஷ்யா விளங்குவது இந்தியாவுக்குப் பாதுகாப்பானதும் ஆபத்தற்றதுமென்பது இந்தியர்களுக்கோ, ரஷ்யர்களுக்கோ புரியாத தொன்றல்ல. அந்தவகையில் சீனாவைப் பின்பற்றி பொருளாதார வலயங்களை (Economical zone) உருவாக்கும் முயற்சி பற்றிய சட்டமூலத்தை இந்தியாவின் இராச்சியசபா அண்மையில் விவாதித்தது. அதனால் அத்தகைய பாணியில் வளர்வதோடு மட்டுமல்லாது ஐரோப்பிய பொருளாதார வலயத்தைப்போன்று ஆசியப் பொருளாதார வலயத்தை (?) உருவாக்குவதும் இந்தியாவின் நோக்கமாகும். அதில் ரஷ்யாவை இணைப்பதில் இந்தியா குறியாக உள்ளது. சீனா, ரஷ்யா, இந்தியா பிரதான நாடுகளர்க மிளிர முயற்சிக்கின்றன.

மேலும் தொழில்நுட்பத்தில் அண்டவெளி தொடர்பான அறிவிலும் சாதனையிலும் ரஷ்யர்கள் முன்னணி பெற்றவர்கள். ஏற்கனவே சீனா மனிதனை விண்ணுக்கு அனுப்பியுள்ளது. இதனால் 2020 இல் இந்தியாவும் சந்திரனுக்கு மனிதனை அனுப்புகின்ற இலக்கோடு தொழிற்படுகின்றது. அதற்கு ரஷ்யாவின் உதவி ஒத்துழைப்பு இந்தியாவுக்கு அவசியமானது.

இவற்றைவிட ஐக்கியநாடுகள் சபையில் நிரந்தர உறுப்புரிமைக்கான போட்டியில் இந்தியா முண்டியடித்துத் தொழிற்படுகின்றது. அதனால் ஐ.நாவின் நிரந்தர உறுப்பு நாட்டிடம் ஆதரவு பெறுவதுடன் வீட்டோ அதிகாரத்தையும் சேர்த்தே பெறவேண்டும் என்பதில் இந்தியர்கள் குறியாக உள்ளனர். அந்த வரம்புக்குள் பணியாற்றவிரும்பும் இந்தியாவின் உபாயமாகவே கலாமின் ரஷ்ய விஜயம் அமைந்துள்ளது. அநேகமான அம்சங்களைக் காட்டிலும் ஐ.நாவின் உறுப்புரிமையில் கவனம் செலுத்திவரும் இந்தியா ஆதரவு திரட்டுவதிலும் மீள நினைவுபடுத்துவதிலும் குறியாகவுள்ளது. அதில் அப்துல்கலாம் மிகச் சிறப்பான தலைமையையும் பங்கையும் ஆற்றுபவராகக் காணப்படுகின்றார். அமெரிக்காவின் உபாயங்களுக்குள் இந்தியா எதிர் நீச்சல் போடுவதென்பது கடினமாயினும் அதனை செம்மையாக ஆற்ற இந்தியா தயாராகவே உள்ளது.

எனவே ஒரு நாட்டின் வளர்ச்சியும், எழுச்சியும் அந்த நாட்டின் தலைமையில் தங்கியுள்ளது. அத்தகைய தலைமைகளை இனங்காண்பதுவும், தேர்ந்தெடுப்பதுவும் மக்களின் திறமையால் மட்டுமன்றி அந்நிய சக்திகளின் தலையீட்டினாலும் பாதிப்படையக்கூடியது. தேசத்தின் கட்டுமானத்தில் பலஸ்தீனர்கள் காட்டும் அக்கறை காலாவதியான விடயமாகவே மாறிவிட்டது. அபாஸின் பலவீனமும், அப்துல் கலாமின் பலமும் தமிழர்களாகிய எமக்கு அனுபவமாக அமைதல்வேண்டும்.

# ஜே.வி.பியின் உளறல்கள்

★மக்கள் தமது கடமையைச் சரியான முறையில் மேற்கொள்வார்களேயானால் நாட்டுக்கான தலைமைத்துவத்தை வழங்க ஜே.வி.பி தயாராகவேயுள்ளது.

★பிரிட்டிஷார் எமக்கு பெயரளவில் சுதந்திரத்தை வழங்கிவிட்டு வெளியேறினார்கள். ஆனால் உண்மையான தேசியவிடுதலையை இன்னமும் நாம் பெறவில்லை. அதற்கான போராட்டத்தை முன்னெடுத்துவருகிறோம்..

இவ்வாறு கூறியிருக்கிறார்கள் ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க மற்றும் அதன் பிரச்சாரச்செயலாளர் விமல்வீரவன்ச.

ஜே.வி.பி யின் 40 வருடபூர்த்தியை முன்னிட்டு கடந்த 15 ஆம் திகதி கண்காட்சி ஒன்றை ஆரம்பித்து வைத்து அவர்கள் இவ்வாறு உரையாற்றியிருக்கிறார்கள்.

நாட்டுக்குத் தலைமைத்துவம் வழங்கும் முயற்சியில் ஜே.வி.பி கடந்த 40 வருடங்களாகவே ஈடுபட்டுவருகின்றமை வெளிப்படையான விடயமாகும். அதற்காக இரண்டு முறை அது ஆயுதக்கிளர்ச்சியில் ஈடுபட்டு தோல்வியடைந்தது.

1971 இலும், 1987 சிறிலங்கா இந்திய ஒப்பந்தம் ஏற்பட்ட பின்பும் அது நடத்திய ஆயுதக்கிளர்ச்சிகள் இவ்வாறு தோல்விகண்டன. 1971 ஆம் ஆண்டு தோல்விக்குப் பின்னர் அதற்கு ஜே.ஆர். ஜெயவர்த்தனா மன்னிப்பு வழங்கி "சனநாயக வழிமுறைக்கு" அதனை அழைத்தார். பின்னர் 1983 யூலை இனக்கலவரத்துக்கு அதனைப் பொறுப்பாக்கினார்.

பின்னர் 1987 யூலைக்குப்பின் தீவிரம் பெற்ற ஆயுத நடவடிக்கைகள் 1989 இல் பிறேமதாச ஆட்சியால் ஒடுக்கப்பட்டு அதன் தலைவர் றோகணவிஜயவீர கொல்லப்பட்டதுடன் முறியடிக்கப்பட்டது. பிறேமதாசவின் இறப்பின் பின்னர் இலங்கையின் அரசியலுக்குள் அது பிரவேசித்தது.

இன்று அது மீண்டும் நாட்டுக்குத் தலைமை தாங்கும் கனவுக்கு- அது நனவாகும் என்ற கனவுக்கு-அது கைவசம் வைத்திருக்கும் 39 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதனைக் கொண்டு சந்திரிகா ஆட்சியை அது ஆட்டிப் படைப்பதும் காரணமாக அமைந்திருக்கின்றது.

இன்று அது பிரதான கட்சியாகிய சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு தனக்குக் கிடைத்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆசனத்தைவிட்டுக்கொடுத்த ஒரு "பெருந்தன்மை"யை கொண்ட கட்சியாகத் தன்னைப் பறைசாற்றிவருகிறது.

"குடும்ப பலம், பணபலம், அரசியல் பலத்தைப் பாவித்து இந்த நிலைக்கு எமது கட்சி முன்னேற்றமடையவில்லை. எமக்குள்ள ஒரே பலம் மக்கள் பலமே" என்று கூறுவதன் மூலம் அது கூட்டுச் சேர்ந்துள்ள பிரதான கட்சியாகிய சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியும் சிறிலங்காவின் சனாதிபதியுமாகிய சந்திரிகா குமாரதுங்கவைக் கேலிசெய்து அவரை விட தாம் மேம்பட்டவர்கள் எனக் காட்டமுயல்கின்றது.


அதெல்லாம் சரிதான். ஆனால் தாம் அரசியல் நீரோட்டத்திற்கு வர எவ்வித நிபந்தனையையும் விதிக்கவில்லை. அதற்காக இடைக்கால நிர்வாகசபை வேண்டுமென்றோ நாட்டைப் பிரிக்கவேண்டுமென்றோ நிபந்தனை விதிக்கவில்லை. என்று கூறுகின்றார் அதன் தலைவர் சோமவன்ச அமரசிங்க.

முதலாவதாக அவர்கள் ஆயுதப் புரட்சி நடத்திவிட்டு அரசியல் நீரோட்டத்திற்கு வருவதற்காக நிபந்தனைகள் விதிப்பதற்கான நிலையில் இருக்கவில்லை. அதாவது இரண்டுமுறையும் அவர்களுடைய ஆயுதப்போராட்டம் படுமோசமாக முறியடிக்கப்பட்டதால் அவர்கள் நிபந்தனைகளை அரசாங்கத்துக்கு விதிக்கக் கூடிய நிலையில் இருக்கவில்லை. ஆட்சியாளர்கள் தமது தேவைக்கு இவர்களைப் பயன்படுத்திக்கொள்ளமுடியும் என்ற ரீதியில் மன்னிப்பு வழங்குதல் என்ற ரீதியிலேயே அரசியலில் ஈடுபட இவர்களால் முடிந்தது.

ஆனால் தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டத்திற்குத்தலைமை தாங்கும் விடுதலைப்புலிகள் அவ்வாறான நிலையில் இல்லை. கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக தமிழ் மக்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்துக்கு தலைமை தாங்கி வெற்றிகரமாக அதனை நடத்திவரும் புலிகள் சிறிலங்கா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை மேசையில் சமபங்காளிகளாக அமர்ந்துபேசும் நிலையிலேயே இருக்கிறார்கள்.

ஜே.வி.பி கூறுவதுபோல இடைக்கால நிர்வாகசபை புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு அரசியலில் ஈடுபடுவதற்கான நிபந்தனை அல்ல. தமிழ் மக்கள் சிங்களதேசத்துடன் இணைந்து அவர்களுக்குரிய கௌரவத்துடன் வாழமுடியுமா? என்பதைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கான களமாகவே அதுகொள்ளக் கூடியதாகும்.கடந்த 25 வருடங்களாக இடம்பெற்ற யுத்தத்தினால் கிடைத்த அனுபவத்தைக்கொண்டு சிங்களத் தலைமைகள் தமது ஆக்கிரமிப்பு மனோபாவத்தைக் கைவிட்டு தமிழ் மக்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பார்களா? என்பதைக் கண்டறிவதற்கானதே இதுவாகும்.

கடந்த காலத்தில் பலமுறை சிங்கள ஆட்சியாளர்களால் ஏமாற்றப்பட்ட அனுபவம் தமிழ்மக்களுக்கு உண்டு. அவ்வாறு ஏமாந்துவிட தமிழ் மக்கள் தயாராக இல்லை. அவ்வாறான தேவையும் அவர்களுக்கு இல்லை. தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கி அவர்களை



அரவணைத்து இணங்கிவாழ சிங்கள ஆட்சியாளர்கள் தயாராக இருப்பின் இடைக் கால தன்னாட்சி அதிகாரசபையை ஏற்படுத்தி போரினால் தமிழ் மக்கள் சந்தித்த இழப்பை ஈடு செய்ய வழிசெய்யவேண்டும்.

இதன் மூலமே சிங்கள ஆட்சியாளர்களுடன் தமது உரிமை குறித்து தமிழ் மக்கள் பேசுவதற்கான சூழ்நிலையும் நம்பிக்கையும் பிறக்கமுடியும் என்பதே தமிழ் மக்களின் கருத்தாகும்.

இதனை விடுத்து "சிறிலங்காவின் அரசியலில் இணைய புலிகள் முயற்சிசெய்வது போலவும் அதற்கு இடைக்கால நிர்வாக சபையை நிபந்தனையாக வைப்பது போலவும் ஜே.வி.பி கூறிக் கொள்வது அபத்தமான விடயமாகும்"

தமிழ்மக்களின் இந்த நிலைப்பாட்டைப்புரிந்துகொள்ளாது அல்லது ஏற்றுக் கொள்ளமறுத்து "நாட்டிற்கு" தலைமை தாங்கத்தயாரென அறிவிப்பது அதைவிட அபத்தமானதாகும்.

இதேவேளை ஜே.வி.பி இன்று 39 ஆசனங்களை வைத்துக்கொண்டு சந்திரிகா அம்மையாரின் ஆட்சியை ஆட்டிப்படைக்க முற்படுகிறதெனின் அதற்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே காரணமாகும்.

அத்துடன் ஜே.வி.பி யால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சியை செயற்படவிடமுடியாது தடுக்கமுடிகிறதே தவிர அவர்களைத் தெரிவு செய்த மக்களுக்கு எதுவும் செய்து விடவோ அல்லது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைக் கொண்டு எதுவும் செய்விக்கவோ முடியவில்லை.

கடந்த மூன்றாண்டு காலமாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி என்பவற்றால், சிறிலங்கா ஆட்சி இயந்திரம் சரிவரச் செயற்பட முடியாதநிலையே காணப்படுகின்றது. எவரும் தாம் நினைத்தவாறு தமது தீர்மானத்தை மேற்கொள்ள முடியாது இருக்கின்றனர்.

இது உதவி வழங்கும் நாடுகளும் அமைப்புகளும் உறுதியளித்த 4000 கோடி நிதியுதவியை ஏறத்தாள இல்லாது ஒழித்து விட்டது அல்லது மறக்கடித்து விட்டது.

அதே போல சுனாமியால் பெரும் பாதிப்புக்குள்ளான அப்பாவிமக்களின் புனர்வாழ்வுக்கென உலகமக்கள் வழங்கத் தயாராகவுள்ள பெருமளவு நிதியும் கூட இவர்களின் நடவடிக்கையால் கிடைக்காது போகுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

நாட்டு மக்கள் இவ்வளவு துன்பத்துக்குள் சிக்கியிருக்கையில், இன்றும் இனவாதச் சகதிக்குள் சிக்கியுள்ள இவர்கள் மக்களை கடமையைச் செய்யக் கூறுவதும் நாட்டின் தலைமைத்துவத்துக்கு ஏங்குவதும் பிரிட்டிஷார் பெயரளவில் வழங்கியதாகக் கூறி உண்மையான தேசிய விடுதலைக்காகக் போராடப் போவதாகக் கூறுவதும் கேலிக்குரியவையாகும்.

**வேலவன்**

---

## நேர்நோக்கு

> தமிழ் மக்கள் மீது காலாதிகாலமாக மேற்கொள்ளப்படும் அரச வன்முறை தொடர்பாக, இது தொடர்பாக செயற்படும் அமைப்புகள் கொடுக்கும் குரல்கள் போதாது என்றே கூற வேண்டும்.

# இதுவொரு அரச வன்முறை

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் தமிழ் மக்கள் கொல்லப்படுவதைத்தடுக்க சிறிலங்கா அரசு தவறிவிட்டது என அமெரிக்க மனித உரிமைகள் அமைப்பான ஹியூமன் ரைட்ஸ்வோச் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

இந்த அமைப்பின் குற்றச்சாட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் இருநூறிற்கும் அதிகமான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் அந்த அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

ஹியூமன்ரைட்ஸ்வோச் அமைப்பின் இந்தக் குற்றச்சாட்டை மதிப்பதாகவோ அல்லது இந்தக் குற்றச்சாட்டிலிருக்கும் நியாயத்தன்மையை ஏற்றுக்கொள்வதாகவோ கூட அரச தரப்பு காட்டிக்கொள்ளப்போவதில்லை.

இதனை உறுதிப்படுத்துமாற் போன்றே இந்த அமைப்பின் குற்றச்சாட்டிற்கு வழமை போல நழுவும் வகையிலான நியாயப்படுத்தலை வெளியிட்டுள்ளார். சிறிலங்கா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரியன்சி பெரேரா.

ரியன்சி பெரேரா அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெறும் கொலைச் சம்பவங்கள் தொடர்பாக சாட்சியமளிப்பதற்கு பொதுமக்கள் முன்வருவதில்லையெனவும் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெறும் சம்பவங்களை தங்களால் அங்குசென்று விசாரணைகளை நடத்த முடியாதுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெறுவதையே தடுக்கமுடியாத அரச தரப்பு புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் இடம் பெறும் சம்பவங்களையா விசாரணை செய்வதன் மூலம் தடுக்கப்போகிறது?

உண்மையில் சொல்லப்போனால் அரச கட்டுப்பாட்டுப்பகுதிகளைவிட புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சட்டம், ஒழுங்கு நேர்த்தியாகவேயுள்ளது.

இதையும் மீறி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெறுகின்ற சம்பவங்கள் யாவும் அரச துணையுடன் இயங்கும் புலனாய்வுப் பிரிவு மற்றும் துணைப்படைகளின் கைவரிசைகளே அன்றி வேறொன்றுமில்லை.

இந்த சம்பவங்களுடன் தொடர்புபட்டிருப்பது அரச படைகளும் அரசின் பாதுகாப்பிலிருக்கும் துணைப்படைகளுமேயாகும்.

இந்தச் சம்பவங்களை தடுத்து நிறுத்த வேண்டுமாயின் பாரிய திட்டமெதுவும் தேவையில்லை. அரச பாதுகாப்பிலிருக்கும் இந்த குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தினாலே போதும்.

ஆனால் இத்தகைய காரியங்களை அரச தரப்பு மேற்கொள்ளப்போவதில்லை என்பது மிகவும் தெளிவாகப் புரிந்துகொள்ளக்கூடிய விடயமாகும்.

ஏனெனில் புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கொலைச் சம்பவங்கள் யாவும் அரச பயங்கரவாதத் தாக்குதல் என்பதினாலேயாகும்.

இந்த நிலையில் அரசு திட்டமிட்டு மேற்கொள்ளும் இந்த அரச பயங்கரவாதத் தாக்குதலை நிறுத்தும் என்றோ இதனை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றோ எதிர்பார்க்கத் தேவையில்லை.

தமிழ்மக்கள் மீது புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் ஆயினும் சரி, அல்லது அதற்கு முன்னர் எல்லாக் காலங்களிலும் நடைபெற்ற மனித உரிமைமீறல் என்பது ஒன்றில் அரசோடு நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கும் அல்லது அரசோடு சேர்ந்தியங்கும் குழுக்களோடு சம்பந்தப்பட்டிருக்கும்.

ஆனால், எல்லாக்காலங்களிலும் நடைபெற்ற சம்பவங்களின் பின்னராவது தமிழ் மக்களுக்கு உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டதா எனின் இல்லையென்றே கூறவேண்டும்.

தமிழ் மக்கள் மீது அரசின் மனித உரிமை மீறலை முதலில் நிறுத்தினாலே தமிழ் மக்களுக்கான நிரந்தர பாதுகாப்பைப்பற்றி சிந்திக்கமுடியும்.

ஏனெனில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களோடு நேரடியாக சம்பந்தப்பட்டவர்கள் சிறிலங்காப் பொலிஸ், அல்லது முப்படைகளாகவே உள்ளனர்.

சிவில் நிர்வாக ஒழுங்குகளில் கூட ஆயுதப்படையினரைப்பயன்படுத்துகின்ற வழமையை சிறிலங்கா அரசு கொண்டுள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இந்த நிலையில் ஹியூமன்ரைட்ஸ்வோச் அமைப்பின் குற்றச்சாட்டுக்களை அரச தரப்பு புறங்கையால் தள்ளிவிட்டே செயற்படும்.

இந்த நிலையில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல் சம்ப வங்களுக்கு அரசு ஒருபோதும் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதில்லை.


தமிழ் மக்கள் மீது காலாதிகாலமாக மேற்கொள்ளப்படும் அரச வன்முறை தொடர்பாக, இது தொடர்பாக செயற்படும் அமைப்புகள் கொடுக்கும் குரல்கள் போதாது என்றே கூறவேண்டும்.

இது தொடர்பாக சர்வதேச சமூகமும், அமைப்புகளும் அரசின் மீது காத்திரமான அழுத்தத்தை பிரயோகிக்கவேண்டிய தேவை அதிகமாகவே உள்ளது.

**புகழன்**




இந்தியா இன்று தகவல் தொழில்நுட்பத்தில் மேற்குலகுகளோடு போட்டிக்கு போட்டியாக



# இந்தியாவின் எதுசாட்

# கல்விக்காக செயற்கைக்கோள்

செயற்பட்டு வருகின்றது. அதன் ஒரு படியாகத்தான் கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் 20 ஆம் திகதி கல்விச் செயற்பாட்டிற்கான ஒரு செயற்கைக் கோளினை அனுப்பியுள்ளது. இது கல்விக் கோள் மூலம் பயிற்று விற்பதற்கான தேவை அதிகரிக்கவே கல்விக்கோளின் தேவை உணரப்பட்டு அனுப்பப் பட்டுள்ளது.

தற்போது விண்ணில் சுழன்றுகொண்டிருக்கும் இக் கோள் (Edusat) என தற்போது விண்ணில் வலம் வந்து கொண்டிருக்கின்றது.

பூமிக்கு மேலே 180 கி.மீற்றர் உயரத்தில் கிட்டத்தட்ட இரண்டு தொன் எடையுடன் சுற்றிக்கொண்டிருக்கிறது. இதன் மூலம் நாடு தழுவிய "எல்லோருக்கும் கல்வி" பரப்புச் செயற்றிட்டம், இந்தியாவின் வடக்கு கிழக்கு மாநிலங்களில் ஆசிரியர்களை பயிற்றுவிப்பது, மகளிர் . பயிற்றுவிப்புத்திட்டம் ஊனமுற்றோருக்கான விசேட கல்விப்பயிற்சி என துணைக் கல்விக்கோள் தொழில்நுட்ப ரீதியாக முன்னெப்போதும் இருந்ததைவிட பன்மடங்கு ஆற்றலையும் வசதிகளையும் கொண்டிருப்பதாகக் கூறுகின்றனர். இதில் இரு வழி படவசதி உள்ளிட்ட பல வசதிகள் அடங்கியுள்ளன.

முன்னைய காலங்களில் இல்லாத இந்த இணையத்தளத்திற்கு இருக்கின்ற இருவழி இணைய வசதிகளால் டேட்டா பேஸ்களை அணுகும் வசதி, டியோ இணையத்தளங்கள் மூலம் இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் தகவல்களை அனுப்பும் வசதி மற்றும் 74 தொலைக் காட்சி அலைவரிசைகளை புதிதாக ஆரம்பித்து பயன்படுத்தலாம். ஒவ்வொரு மாநிலமும் தனக்கென ஒரு தனியான அலை உருவாக்கி பயன்படுத்தலாம். தொலை தூரக்கல்விச் சேவை DTH மூலம் பாடசாலைகள் நேரடியாக தகவல்களை பெறும் வசதி, தொலைபேசி மூலமான இணைப்பு, இணையத்தள கமரா உபயோகப் படுத்துதல் போன்ற பல்வேறு வசதிகளை இதிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

இந்நிலையில் இவ் வசதியினை இந்தியா முழுவதுமாக உபயோகப்படுத்திக்கொள்ளுமா என்றால் அது கேள்விக் குறியாகவே உள்ளது என கூறுகின்றனர்.

---

# கழிவு நீர்ப்பாசனம்

இப்போதெல்லாம் உலகம் வித்தியாசமாகவே உள்ளது. எதை எதை பயன்படுத்தி என்னென்ன செய்வது என்ற விவஸ்தையே இல்லாமல் போய்விட்டது. ஆனால் இவற்றிலும் நியாயம் உள்ளது. தற்கால உலக மக்களின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்ல அந்தத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய பொறுப்பு அதிகரிக்கின்றது.

அந்த வகையில்தான் கழிவுகளைப் பயன்படுத்தி பாவனைக்கு ஏற்ற வகையில் பல முடிவுப் பொருட்களை உலகம் உற்பத்தி செய்வதனை அறிந்திருக்கின்றோம். அதன் ஒரு படிதான் கழிவு நீர் விவசாயம். உலகம் இன்று தனது உற்பத்தியில் பத்தில் ஒரு பங்கினை கழிவு நீரினைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்கின்றது என்றால் பாருங்கள் கழிவு நீரின் முக்கியத்துவத்தினை. அண்ணளவாக 20 மில்லியன் ஹெக்டேயர்கள் விவசாயம் கழிவு நீரினை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுவதாகக்கூறுகின்றனர்.

பாகிஸ்தானில் உற்பத்தி செய்யப்படுகின்ற காய்கறி, இலைவகைகளில் நான்கில் ஒரு பகுதி கழிவு நீர் மூலமே பயிரிடப்பட்டு சந்தைக்கு வருகின்றது.

நகரங்களில் இருக்கின்ற உற்பத்தி ஆலைகள், சிறு தொழிற்சாலைகள், ஆடைத் தொழிற்சாலைகள் எனப் பல்வேறுபட்ட உற்பத்திச்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவு நீர்களே இதற்கு பயன்படுத்தப்படுகின்றன.

இருப்பினும் மறுபுறம் உலக சுகாதார நிறுவனத்தின் 2004 ஆம் ஆண்டு அறிக்கையின் படி 180000 மக்கள் வருடம் தோறும் டயேரியாவினால்தான் இறக்கின்றனர் என கூறுகின்றது. எனவே இவ்வாறான பாதகமான தாக்கங்கள் இருந்தாலும் கழிவு நீர் விவசாயம் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. பாகிஸ்தானில் சாதாரண நிலத்தினை விட கழிவு நீர் விவசாய நிலத்தின் விலை அதிகம் என்றால் இதன் முக்கியத்துவத்தினை பாருங்கள். இன்றைய உலகின் அறிவியல் அட்டகாசமாகத்தான் வளர்கிறது.

---




# காதுகள் கவனம்

"பலரும் செய்கின்ற தவறு இருபுறமும் பஞ்சு பொருத்தப்பட்ட 'பட்ஸ்' என்ற குச்சிகளைக் (BUDS) கொண்டு காதுகளைச் சுத்தம் செய்து கொள்வதுதான்." இது ஒரு பாதுகாப்பான முறை என்று பலரும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். பொதுவாக யாருக்குமே தன் காதில் உள்ள அழுக்கின் அளவு எவ்வளவு என்பதைச் சரியாக ஊகிக்க முடியாது. அப்படி இருக்கும் போது எந்த நிலையில் காதுகளைச் சுத்தம் செய்ய வேண்டும் என்பதை அவராகவே தீர்மானிக்க முடியாது.

"பட்ஸ்" குச்சியினால் காதுகளைச் சுத்தம் செய்து கொள்ளும்போது அது கொடுக்கும் தற்காலிக சுகம் கருதி விதவிதமாகக் காதுப்பாதையை வட்டச்சுழற்றியில் அழுந்தச் சுற்றுகிறார்கள். இதனால் செவிப்பாதையில் வலி உண்டாகிறது. மிகவும் மென்மையான தன்மை கொண்டது இந்தப் பாதையிலுள்ள திசுக்கள். எனவே குச்சியால் சுத்தம் செய்யும்போது அதிலுள்ள மேல் தோலின் ஒருபகுதி உரிந்துவிடுகிறது.

உள்ளே இருந்து ஒருவித நீர் வெளியேறுகிறது. இதன் காரணமாக தொற்றுக்கிருமிகள் அந்த இடத்தில் பரவுகின்றன. எனவே இனியாவது "பட்ஸ்" குச்சிகளால் காதுகளைச் சுத்தம் செய்துகொள்ளவேண்டாம்.

பின் எப்படி காதில் உள்ள அழுக்குகளைச் சுத்தம் செய்வது என்கிறீர்களா? நீங்கள் இது குறித்து கவலைப் படத்தேவையில்லை. நம் கீழ்த்தாடையில் பல்வேறு அசைவுகள் தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டேயிருக்கின்றன. தினமும் 600 இலிருந்து 1000 முறை சாப்பிட, கொட்டாவி விட என்று பல காரியங்களுக்காக கீழ்த்தாடையை அசைக்கிறோம். இந்தத் தாடை எலும்பின் மேல்புற முனை காதின் கீழ்தான் அமைந்துள்ளது. எனவே கீழ்த்தாடை அசையும் போது காதில் சேர்ந்துள்ள அழுக்கு தானாக வெளியேறி விடுகிறது. ஆகவே நம் காதுகளை நாமே சுத்தம் செய்துகொள்ளவேண்டியதில்லை.


சிலபேர் மூக்கில் சளி சேர்ந்து கொண்டால் பலமாகவும் வேகமாகவும் மூக்கைச் சிந்திக்கொள்வார்கள். அவர்கள் சிந்திக்க வேண்டியது வேறு ஒரு விஷயத்தை. சில சமயம் சளி வெளியே வராமல் உள்ளுக்குள் சென்றுவிடும். அதாவது காதுப்பகுதிக்குள் செல்லத்தொடங்கும். மேலும் பலமாகச் சிந்தும் போது ஏற்படக்கூடிய அழுத்தத்தின் காரணமாக அந்தச் சளி செவிப்பறையின் உள்பக்கத்திலிருந்து துளையை ஏற்படுத்திக்கொண்டு வெளியேவரும். இதற்குப்பிறகு காது குப்பென்று அடைத்துக்கொள்ளும். காதுவலி ஏற்படும், காய்ச்சல் வரக்கூடும். இவ்வளவும் தேவையா?



'இயர் ட்ராப்ஸ்' என்கிற காதுச் சொட்டு மருந்துகளை எந்தவிதக் காதுவலியானாலும் சிலர் விட்டுக்கொள் கிறார்கள். காதுச் சொட்டுமருந்துகளில் வெவ்வேறு வகைகள் உண்டு. காதில் உள்ள மெழுகை இளக வைக்க, காதில் ஏற்பட்டுள்ள பூஞ்சைக்காளானைக் களைய பக்டீரியாக் கிருமிகளை ஒழிக்க என்று ஒவ்வொன றிற்கும் ஒவ்வொரு விதமான சொட்டு மருந்துகள் உள்ளன. எனவே மருத்துவரை ஒரு வார்த்தை கேட்டுக் கொண்டு சொட்டு மருந்தைப் பயன்படுத்துவது நல்லது.

சிலர் தாங்கள் மிகமிகச் சுத்தமாக இருக்கவேண்டும் என்று கருதுவார்கள். குளிக்கும் போது அவர்கள் காதுகளில் சோப்புத்தண்ணீரை விட்டுக்கொண்டு அது நன்கு உள்ளே செல்லுமாறு தலையைவேறு அசைத்துக் கொள்வார்கள். இதெல்லாம் வேண்டாத விஷயங்கள். தேவையில்லாத சிக்கலில் கொண்டுவிடலாம். நாம் ஏற்கனவே கூறியதுபோல் காது தன்னிடமுள்ள அழுக்குகளைத் தானாகவே நீக்கிக் கொள்ளும் சக்தி படைத்தது.

---



# தொல்லைதரும் பேன்கள்

பேன் பெண்களுடைய தலைப் பிரச்சினை மட்டுமல்ல; தலையாய பிரச்சினையும் கூட. அது அவர்களுடைய எந்த வேலைக்கும் இடையூறு.

சுத்தக்குறையும், சுகாதாரக் குறையும்தான் பேன்கள் ஒருவரைத் தொற்றுவதற்குக் காரணம்.

பெண்களின் தலைமுடி நீளமாகவும் அடர்த்தியாகவும் இருப்பதால் பேன் ஆண்கள் பக்கம் திரும்புவதில்லை.

தலையில் ஏற்படும் அரிப்புதான் பேன் பிடித்திருப்பதை தெரிவிக்கின்ற முதல் அறிகுறி. பேனின் உமிழ் நீரில் ஒரு வித நச்சுப்பொருள் இருக்கும். அது கடித்த இடத்தில் அரிச்சலை விளைவிக்கும்.

பேன் என்கிற இரத்த ஜீவிக்கு வயது வித்தியாசமோ, வசதி வித்தியாசமோ கிடையாது. மண்டைத் தோலில் உள்ள சிறிய துவாரங்களில் பேனினுடைய உமிழ்நீர் (Saliva) நுழைந்து இரத்தத்தை உறிஞ்சும்.

பேன் ஒருமுறை ஒரு தலையைப் பற்றிக்கொண்டால் போதும் தினமும் பத்து முட்டைகள் இடும். சிறியதாக இருக்கும்போது பேனை ஈறு(nit) என்று சொல்வார்கள். வெண்மையாக பொடுகு மாதிரி இருக்கும் பேனை ஒழிக்காவிடில் அது நோய்த் தொற்றுக்குக் காரணமாகிவிடும்.

**சிகிச்சை:-**

பேனைப் பிடித்து நசுக்குவதால் மட்டும் அது ஒழிந்துவிடாது. தலையில் பேன் பிடித்துவிட்ட அறிகுறி தெரிந்தாலே மருத்துவரின் ஆலோசனையுடன் பேன் கொல்லி மருந்தை உபயோகிக்க வேண்டியதுதான் சிறந்தவழி.

பெர்மெத்ரின் (Permethrin) போன்ற மருந்துகள் கடைகளில் கிடைக்கும்.

தலையைச் சுத்தமாக வைத்துக்கொண்டால் பேனுக்கு இடமில்லை. அடிக்கடி ஷாம்பூவினால் தலை முடியைக் கழுவி சுத்தமாக வைத்துக் கொள்ளலாம். ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளும், கர்ப்பிணிகளும் பிரசவித்த பெண்களும் ஷாம்பூ (பேனுக்கென்று பிரத்தியேகமானது) உபயோகிக்கக் கூடாது.

ஷாம்பூவை 10 நிமிடம் வரை தலையில் விட்டு வைத்து கழுவவேண்டும். ஈறுகளின் முட்டை ஓட்டுக்குள் ஷாம்பூவின் கலவைப் பொருள் (Ingredient) நுழைந்து, அவற்றைக் கொல்ல அந்த அளவு நேரம் தேவை. சமையல் அறையில் உள்ள புளித்தகாடி (Vinegar)யை தண்ணீருடன் கலந்து கழுவினால் செத்துப்போன ஈறும், பேனும் தலை முடியை விட்டு நீங்கும்.

அடுத்தவருடைய சீப்பு தலையணை போன்றவற்றை பயன்படுத்தக் கூடாது.

# காரசாரம்

## விழிகளால் தேட இடம் கொடுங்கள்

ஏனைன் வீதியின் திருத்த வேலைகள் ஆரம்பித்து சுமார் ஐந்து வருடங்களை நெருங்கிக்கொண்டிருக்கிறது. இதேபோன்று மின் வழங்கல் சேவையும் தொடங்கப்பெற்று நிழல் தந்துகொண்டிருந்த மரங்களைத் தறித்துவிட்டோம். ஏற்றப்பட்டு புளியங்குளத்திலிருந்து ஒட்டுசுட்டான், ஒட்டுசுட்டானிலிருந்து புதுக்குடியிருப்பு, புதுக்குடியிருப்பிலிருந்து முள்ளியவளை, வன்னேரியிலிருந்து அக்கராயன்வரை, அக்கராயன் முதல் மல்லாவி, பனங்காமம் துணுக்காய்வரை நிழலென்றால் அப்படி நிழல், இருண்டநிழல்,பகலில் மிதிவண்டிப் பயணம் செய்வதே ஒரு சுகமான அனுபவம். ஏதோ தேவைகருதியோ இல்லையோ வீதிகளின் இரு மருங்குகளும் இப்போது வெட்ட வெளியாகிவிட்டன. புதுக்குடியிருப்பு, விசுவமடு, தருமபுரம், கிளிநொச்சி இங்கெல்லாம் பயணிகள் இளைப்பாற ஒரு துண்டுநிழல் கிடையாது. ஓமந்தை முகமாலைச் சோதனைச் சாவடிகளையும் அதை அண்டிய பகுதிகளிலும் கூட ஒரு சொட்டு நிழல் கிடையாது. இதற்காகப் பந்தல்கள் போட்டு நிழல்களை உருவாக்கினாலும் அவை எமது மூச்சுடன் ஒன்றிவிடுவதாயில்லை.

தாவரங்கள் தூயகாற்றைப் பகலில் வெளிவிடுகின்றன. மரங்கள் தூயகாற்றைப் பகலிலும் அசுத்தமான காற்றை இரவிலும் வெளிவிடுகின்றன. புல்;செடி, கொடி இவற்றின் தளிர்கள் கண்ணுக்குக் குளிர்மையையும் சுவாசத்துக்கு நல்ல மணத்தையும் தருவன. மனித நாகரிகம் வளரவளர தாவரங்களை அழிக்கவேண்டிய தேவை தானாகவே வந்துவிடுகிறது. மின்சார விநியோகம், தொலைபேசி போன்றவற்றை இணைக்கவும் பசுமரங்கள் இடைஞ்சலாக இருக்கின்றன. இவைதவிர தொலைக்காட்சி அன்ரனாக்கள் இணைக்க, சூரியசக்தி மின்கலமிணைக்க, காற்றாடி மின்கலமிணைக்க எனவும் தாவரங்கள் தம்மை இழக்கவேண்டியுள்ளன. இவைபோனாலும் எம் சுவாசக்காற்றைத் தூய்மைசெய்ய நாம் புற்தரைகளையாவது பேணவேண்டும். அந்த புற்றரைகளை வெளியே வராதபடி மூடி சாந்திட்டுக் கட்டி முற்றத்தையே மூடி வைத்திருக்கும் பேதமையை என்னென்று சொல்வது. நடைபாதையெங்கும் புல்வளர்த்து வையுங்கள் என்ற சுலோகம் எவ்வளவு பயனுள்ளது. வீதியோரங்களில் புல் வளர்க்கவேண்டும். அது மன எழுச்சியை மட்டுமல்ல, சுத்தமான சுவாசக்காற்றையும் வழங்கிக் கொண்டிருக்கும். தேவையான அளவுக்கு நாள் முழுதும் குளிர்மையை பரப்பும் புல்வெளிகளை அகற்றி அவ்விடத்தில் சீமெந்து கொட்டி மூடுகிறோம். இது தேவை தானா. மர நிழல்களின் அருமையைப் புரிந்துகொண்டு சாலையோரங்களில் புளியமரங்களையும், வாகைமரங்களையும் நட்டுவைத்துப் பராமரித்தனர் பண்டைய ஆட்சியாளர்கள். இன்றும் பாதையோரங்களுக்கு மரக்கன்றுகளை நட்டுவைத்துப் பராமரிக்கும் வனவளப்பகுதியையோ, பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தையோ பாராட்டாமல் இருக்க முடியாதுதான். என்றாலும் வீட்டுக்கு வீடு வேலிகளில் நாலு வேம்பையோ, முதிரை மரத்தையோ, சமண்டலையையோ நட்டு வளர்த்தவர்கள், எல்லை வேலிக்குப் பனை மரத்தால் அரண் செய்தவர்கள், இன்று சுற்று மதில் கட்டி சூழலையே ஒதுக்கி வைக்கிறார்கள். வேலிப் பொருட்களினூடே வளர்ந்த மனித நேயம் சிமெந்துக்கட்டுகளில் சிறைப் பட்டுப்போயுள்ளது. மனிதநேயம் என்பதும் மனித உடல் உள ஆரோக்கியம் என்பதும் நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளால் நிரவப்படக்கூடியவையல்ல. அவை விலை கொடுத்து வாங்கக் கூடியவையும் அல்ல. எதிர்காலச்சந்ததியினராவது ஒருவருடனொருவர் உறவுகொண்டு பகைமை உணர்வுகளைத் துறந்து ஒற்றுமையாக வாழவேண்டும் என்ற கனவு நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உண்டு. அதற்கான முயற்சிகளை இயற்கையைப் பேணுவதால் மட்டுமே அடையமுடியும். புற்களை நேசியுங்கள், தாவரங்களை அதாவது செடிகளை நேசியுங்கள், அயலவனை நேசியுங்கள், அதற்குமப்பால் விழிகளைத்தேடவும், விழிகளால் தேடப்படுவதற்கும் இடம்கொடுங்கள் ஏன், எம்மை மூடிப் புதைக்க வேண்டும். பூமியைத்திறந்து விடுங்கள். புதியகாற்றுக்கு வரவு கூறுவோம்.

## படித்ததில் பிடித்தது

### பார்த்து வாகனம் செலுத்துங்கள்

மணல் மூட்டையல்ல அத்தனையும்
மனித உயிர்கள்
எங்களுக்கெல்லாம் அவசரமில்லை
பயணத்தில் மட்டுமல்ல
மரணத்திலும் தான்
நீங்கள் அறிய வாய்ப்பில்லை
பயணச்சீட்டு
பரலோகச் சீட்டாகி விடக் கூடாது எனும்
பயணிகளின் பிரார்த்தனையை
விளையாட்டு என்று
வினை விதைத்து விடாதீர்கள்
முடமாகிப் போனவன் வாழ்வு
கல்யாணத்திற்கு முதல்நாள்
கல்லறைக்குச் சென்றவன் - எத்தனைபேர்
மண நாளின் மறுநாளே
மஞ்சள் இழந்தவள் - எத்தனை பேர்
மரணித்த தன் தாயை நினைத்து மற்றவனுக்கு
மருந்து கொடுக்க
மறுத்திருக்கிறான் ஒரு மருத்துவன்.

ஊமைப் பிள்ளையை பெற்றதனால்
இன்னுமொரு பிள்ளைக்கு - உச்சரிக்க
கற்றுக் கொடுக்க மறுத்திருக்கிறானா?
ஓர் ஆசிரியன்.

கவலை கடமையை மீறக் கூடாது
மஞ்சள் கோடும் சிவப்பு சமிக்ஞையும்
தடுத்தும் தடையை மறந்ததினால் - தான்
பாடையிலே போனது பலரது வாழ்வு
மாட்டு வண்டிகள் - இரண்டு
எங்காவது மோதியிருக்கிறதா
இயந்திரத்தை கண்டுபிடித்த
மனிதன் - மனிதனை
இயக்கிவிட்டது - தான்
மகாதவறு
இயந்திரமே இயங்கியிருந்தால்
இன்றைக்கு இத்தனை
இழப்பிருக்காது
எச்சரிக்கை
பார்த்து வாகனம் செலுத்துங்கள்.

தமிழாக்கம்-இ.றஜித்
ஆங்கிலத்தில்:- நபி


## எத்தனை நாளைக்கு இந்தத் துயரம்

மாயா

அண்மையில் ஈழநாட்டில் ஒரு செய்தி படித்தேன். கிளிநொச்சி வைத்தியசாலையில் நாற்பது வைத்தியர்கள் பார்க்கவேண்டிய வேலையை ஆக ஏழு வைத்தியர்கள் பார்ப்பதாகவும், அறுபது தாதியர்கள் பார்க்கவேண்டிய வேலையை பதின்மூன்று தாதியர்களே பார்ப்பதாகவும், நூறு சிற்றூழியர்களுக்குப் பதிலாக ஐம்பத்தொரு சிற்றூழியர்கள் சேவையிலுள்ளதாகவும் அந்தச் செய்தி கூறியது. ஆஸ்பத்திரி வளாகத்தினுள்ளும் வெளியே வீதிவரையிலும் பகல் நேரத்தில் நிரம்பிவழியும் மக்கள் தொகையை வைத்துப்பார்த்தால்கூட வைத்தியர்கள் அறவே போதாது. ஒரு வைத்தியரின் கடமைநேரம் ஆறு மணித்தியாலங்கள்தான். அதைவிட மேலதிக நேரமாக நான்கு மணித்தியாலம் மட்டுமே வேலை செய்வதைத் தொழில் முறைச்சட்டம் அங்கீகரிக்கிறது. ஆனால் இந்த வைத்தியசாலையின் வைத்தியர்கள் அதற்கும் மேலாக வேலை செய்யத்தான் செய்கிறார்கள். அன்றாடம் வரும் வெளிநோயாளர்களைச் சமாளிப்பது முதலில் பெரும் கஷ்டமாக இருக்கிறது. அதைவிட இயற்கையிலேயே பற்றைக் காடுகளையும் வயல்நிலங்களையும், நீர்க்கரைகளையும் கொண்ட வன்னியில் பாம்புக்கடி என்பது தினசரிப்பிரச்சினையாகவுள்ளது. பாம்புக்கடியால் பாதிக்கப்பட்டுவரும் ஒவ்வொருவருக்கும் தீவிர சிகிச்சைப் பிரிவில் தொடர்ச்சியான கவனிப்பை மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனினும் இந்தப்பற்றாக்குறையில் தாதியர் வைத்தியர்கள் முதல் சிற்றூழியர்வரை பகல் கடமை முடித்து இரவுக்கடமையைத் தொடர்ந்து செய்யவேண்டிய இக் கட்டான அவசிய நிலை உள்ளது. கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளின் பழையமாணவர்களாகவும் இதேமாவட்ட வாசிகளுமான இந்த வைத்தியசாலை மருத்துவர்கள் தாங்கள் தங்களுடைய மக்களுக்கு இயன்றளவு சேவையாற்றவேண்டும் என்ற மனப்பான்மையைக்கொண்டிருப்பது மிகவும் பாராட்டப்படவேண்டிய விடயம் தான். இத்துடன் இதுவரை காலமும் இல்லாதவகையில் வெளிநாடுகளிலிருந்தும் விசேடமாக வருகைதந்துள்ள வைத்தியர்களையும் நாம் நன்றியுடன் கருத்திற்கொள்வோம். ஜேர்மனியிலிருந்து வந்திருக்கும் "பிளாஸ்டிக் சர்ஜரி" செய்யும் மருத்துவரும் அவரது குழுவினரும் இங்கு மாதக்கணக்கில் வேலை செய்கின்றனர்.

உள்ளக தங்கக நோயாளர்களின் வைத்தியத்திலா கட்டும் வெளியகநோயாளர்களின் வைத்தியத்திலாகட்டும் போதியளவு வைத்தியர் பற்றாக்குறை தெரியாத அளவில் கவனம் செலுத்தப்படுகிறது. புதிதாக அமைக்கப்படும் மருத்துவமனை ஏறக்குறைய அடுத்த ஆண்டு இயங்க ஆரம்பித்துவிடும். ஆனால் இந்த ஆட்பற்றாக்குறை தீருமா?

ஆண்டுதோறும் பட்டப்படிப்பை முடித்து வெளியேறும் தமிழ் வைத்தியர்கள் லண்டனிலோ சுவிஸிலோ, கனடாவிலோ நோயாளருக்காக விளம்பரம் செய்வதைப் பத்திரிகைகளில் பார்க்கின்றோம். அதேவைத்தியர்களின் சொந்த உறவுகளுக்கு இங்கே வைத்தியர்கள் இல்லை. இவர்களுக்கும் வெளிநாடுகளில் சென்று வைத்தியம் பார்க்க ஆசை, தகுதி, வசதி எல்லாம் உண்டுதான். எல்லாவற்றுக்கும் மேலாக தாய்நாடும், தாய்பிள்ளை உறவுகளும் பெரிதென நினைப்பவர்கள் இவர்கள். இப்போதும் தாய்நாட்டின் வளங்களைப் பயன்படுத்தி தம்மை வளர்த்துக்கொள்ளும் வைத்தியர்கள், கொழும்பிலோ, வெளியிலோ தங்குவதைக் காண்கிறோம். இந்தநிலை மாற அரசாங்கம் தான் என்ன செய்கிறது. வேலையற்ற பட்டதாரிகளை உருவாக்கி அவர்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணி உழைக்கிறது. தேசப்பற்றுடன் சேவையாற்றும் கிளிநொச்சி ஆஸ்பத்திரி ஊழியர்களின் வழியைப் பின்பற்ற யார் முன்வருவார்கள். வருடாந்தம் நியமனங்களை வழங்கிவரும் சிங்கள அரசாங்கம் தமிழ் மக்களின் தேவைகளை முற்றாகப் புறக்கணித்தே வருகிறது. குறைந்தளவு என்று குறிப்பிடமுடியாமல் மிக மோசமான ஆட்பற்றாக்குறையில் இயங்குகிறது எனக்குறிப்பிடக்கூடிய கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைக்குப் போதியளவு மருத்துவர்களை, தாதியரை, சிற்றூழியர்களைப் பெற்றுத்தர அரசாங்க அதிகாரிகளோ, அல்லது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களோ ஏன் முயலவில்லை. வன்னியை இதுவரை போர்மேகம் சூழ்ந்திருந் தது. இப்போது வீதிக்கும் வீடுகளுக்கும் கூட பொலிவு ஏறிவருகிறது. வைத்தியசாலைகூட பொலிவாகவுள்ளது. வைத்தியர்கள், ஊழியர்கள் மட்டும் இன்னும் அதிகரிக்கப்படவில்லை. சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களா?




சீசி... முதலாளி பேசியிருந்தாப் பரவாயில்லை. இந்த முந்தநாள் முளைச்ச காளான் வயசுக்கு ஒரு மரியாதை தராமல் பேசிப்போட்டான் என்னை. நான் வேலைக்கு வரேக்க இவன் பிறக்கெல்லை...

எத்தினைநாள் இவனை தூக்கிக்கொண்டு கோயில், குளம், பீச் என்று திரிஞ்சிருப்பன். எனக்கெண்டா இப்பமாதிரிக் கிடக்கு... முதலாளியின் மகன் என்ற காரணத்தால் சின்ன முதலாளி அவன். அவனைக் கடையில வேலைசெய்யிற நாங்கள் சுருக்கமாக "சீனா மூனா" என்று முதல் எழுத்தை மட்டும் சொல்லி எங்களுக்குள் கூப்பிடுறனாங்க. இந்தச் சின்ன முதலாளிதான் நான் இண்டைக்கு கொஞ்சம் சுணங்கி எழும்பீற்ற னாம்... துள்ளுறார். ஐந்து மணிக்கு எழும்பி கடைக்கு வந்த எனக்கு எட்டரைக்கு கடைக்குவந்த இவன் பேசுறான். இண்டைக்கு முப்பது வருசமா வெளி உலகமே தெரியாமல் இரவுபகலா உழைச்சு வியர்வை சிந்தினது அவனுக்கு மறந்துபோயிற்றுது போல.

அப்ப எனக்கு பதினைஞ்சு வயசு இருக்கும். என்ரை ஐயா அந்த முரட்டு மண்ணோடு போராடிப்போராடி உழைச்சும் வீட்டில் வாழ் நாள் பிரச்சினையும் போராட்டமாகவே இருந்தது. எனக்கு பள்ளிக்கூடத்துக்கு போடுறத்துக்கு ஒரு காற்சட்டையும் ஒருசேட்டும் இருந்தது. வீட்டில் நிற்கும்போது பல இடத்தில் கிழிஞ்சு தையல்போட்ட சாரம். இரவில் கடும் குளிரைத் தாக்குப்பிடிக்க அம்மாவின் பழையசாறி இவையே எனது சொத்து. காற்சட்டை பல இடங்களில் மடிப்புகள் தோன்றி நிரந்தர அமைப்பை கொண்டுவிடும். அது 'அயன்' பண்ணுவது என்ற செயற்பாட்டை அறிந்திருக்க வில்லை. தினமும் பாடசாலை புறப்படும்போது அந்தக் காற்சட்டையை சரிசெய்வதே பெரிய விசயம்.

இப்பிடி இருக்கேக்கதான் ஒருநாள் ஐயா என்னைக் கூப்பிட்டு "தம்பி அம்பலவாணர் முதலாளி கொழும்பில்... தன்ர கடைக்கு ஒரு ஆள் தேவையாம் போப்போறியே" எனக்கு வலு சந்தோசம். என் சந்தோசத்துக்கு இரண்டு காரணங்கள் ஒன்று எனது பள்ளிக்கூட வாத்தியார் கொதிகுடலர் ஏரம்பு வாத்தியாரிடம் இருந்து பூரண விடுதலை. மற்றது எனது கிராமத்தை தவிர அடுத்த ஊர் அறியாத எனக்கு கொழும்புக்கு போவதென்றால் விருப்பம் வராதா? உடனே சம்மதிச்சுவிட்டன்.

பள்ளிக்கூட வாழ்க்கை சந்தோசமானது என்றுதான் எல்லாரும் சொல்லுகினம். ஆனால் எனக்கு அது அப்பிடி இருந்ததாய் ஞாபகம் இல்லை. பள்ளிக்கூடம் எண்டால் அந்த கணிதபாட ஏரம்பு வாத்தியார் தான் ஞாபகம் வரும். அந்தாள் நிறைய வீட்டுவேலை தந்துவிடும். பிறகென்ன வீட்ட வந்தால் ஆடுகட்டி, மாடுகட்டி, கோழிஅடைச்சு, பத்தாதுக்கு எனக்கெண்டு சிலவேலை ஒதுக்கப்பட்டிருக்கும். எல்லா வேலையும் முடிச்சுப்போட்டு படிக்கிற இடத்துக்குப்போனா ஏற்கனவே சூனியமாய் இருக்கும் கணித பாடமும் வேலையலுப்பும் சேர்ந்து என்னை நித்திரைக்கு அழைத்துச் சென்றுவிடும் பிறகென்ன.

காலைவேலைகளையும் முடிச்சுக்கொண்டு பள்ளிக்கூடம் போனால் அந்த ஏரம்பு வாத்தியார் வந்தால் எனக்கு யமதூதுவன் வந்தது மாதிரித்தான் இருக்கும். பிறகென்ன வழமைபோல வீட்டுவேலை செய்துகொண்டு வராதாக்களை எழுப்பி விட்டிட்டு... தவில் வாசிப்புத்தான்... நாங்கள் நாதஸ்வரம்... வாசிக்கும் கட்டம் வரும். ஆனால் வெட்கம் காரணமாக அடக்கிக்கொள்ளுவம். எனவே இந்த ஏரம்பு வாத்தியாரிடம் இருந்து விடுதலை என்பது எனக்கு அப்போது பெரும் மகிழ்ச்சியைத் தந்தது.

ஒருநாள் எனக்குக் காய்ச்சல் வந்து வஸ்சில் ஏறி யாழ்ப்பாணம் ரவுணுக்குப் போனனான் அதுதான் நான் சென்ற நீண்டதூரப் பயணம். இப்போ பட்டணம் கொழும்பு போய் அங்கேயே தங்கப்போறன். தடல்புடலாக ஆயத்தமானது பயணம்.

வந்தபோது இருந்த எண்ணங்கள் ஆவல்கள் எல்லாம் அடங்கிப்போயின. அங்கே அதிகாலை நான்கு மணிக்கே எழும்பிவிடவேண்டும். குளித்துக் கிளித்துப்போட்டு கடையைக் கூட்டித் தண்ணி தெளித்து, படத்துக்கு பூ வைச்சுப்போட்டு ஐந்து மணிக்கே கடை திறந்து வைக்கவேணும். முதலாளி வர எட்டரையாகும். அவர் வந்து கைசியர் பட்டடையில் ஏறி அமர்ந்து கொள்வார். நாங்கள் பம்பரமாய் ஓடித்திரிவம். கதிரையில இருக்கும் முதலாளி இடைக்கிடை நாங்கள் யாராவது 'ஐஸ்' அடிக்கிறமா எண்டு நோட்டம் விட்டுக்கொள்வார். கால்கள் ஓய்வுக்கு விண்ணப்பம் கொடுக்கும்! மதியம் சாப்பிடப்போகும் மட்டும் அவ்விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அதுவும் கடையில் ஒவ்வொருவராய் போய் சாப்பிட்டிட்டு வரவேணும். நான்போய் நீண்ட நேரம் தங்கிவிட்டேன் என்றால் பின்னுக்கு சாப்பிட இருப்பவர்கள் பேசுவார்கள் என்பதால் அந்த ஓய்வும் பதினைந்து நிமிடத்துக்குமேல் நீடிப்பதில்லை. சாப்பிட்ட களை ஆருக்குத்தான் இல்லை.

ஆனால் நாங்கள் அதைப் பொருட்படுத்தமுடியாது. இரவு ஒன்பது மணிமட்டும் எங்கட பம்பரச்சுற்றுகை சுற்றிக்கொண்டே இருக்கும். கொஞ்சம் கொஞ்சமாய் ஓய்வுக்குவரும். கடைபூட்ட எப்பிடியும் பத்தாகும். படுக்கைக்குப்போக பதினொரு மணியாகும். விடியப்புறம் நான்கு மணிக்கு எழும்ப வேண்டும். என்ற ஏக்கத்துடன் அரைகுறை நித்திரை எங்களை ஓய்வுக்குக்கொண்டு வரும்.




ஆரம்பத்தில் என்னால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. ஏதோ பல்லைக் கடித்துக்கொண்டு முழுச் சக்தியையும் பயன்படுத்தி சமாளித்துக்கொண்டிருக்கும் போது ஒருநாள் சீனியைக் கொட்டிப்போட்டன் எண்டு முதலாளி கன்னத்தில அடிச்சுப்போட்டார். அவமானம், கோபம், எல்லாம் தலை தூக்க அன்றே விட்டிட்டு வஸ்ஏறி நான் வீட்டை வந்திட்டன். வீட்டைவந்து நடந்ததை எல்லாம் ஐயாட்டை சொல்ல, "வேலை பழகேக்க அடிவாங்கித்தான் பழகவேணும். கொஞ்ச நாளைக்கு நிண்டு வேலைபழகீற்றியெண்டா பிறகு நீ இஞ்ச வந்து ஒருகடையைப் போடலாம்..." ஐயாவின் அறிவுரை உடனே கசத்த போதும் பிறகு ஏற்றுக் கொண்டு விட்டேன். மிக விரை வில் நான் தனியாக ஒருகடை போடவேண்டும் என்ற இலட்சியத்துடன் மீண்டும் அந்தக் கடையில் இணைந்து கொண்டேன். ஒவ்வொரு நாள் வேலையிலும் அனுபவிக்கும் துன்பங்கள் எல்லாம் ஐயா சொன்னதுபோல தனியாக நான் ஒருகடை போடும் இலட்சியத்திற்காகவே என நினைத்து தாங்கிக்கொள்வேன்.

காலங்கள்தான் இப்பத்தைய கிபிர் வேகத்தில போனது. நான் கடைக்கு வந்து முப்பது வருசங்கள் எப்பிடிப் போனது என்று தெரியாமல் போய்விட்டது. ஆரம்பத்தில் கடினமாக இருந்த அத்தனை வேலையும் இன்று பழக்கப்பட்டுப்போய்விட்டது. அவை தினம் நடக்கும் சாதாரண அம்சங்களாகி விட்டன. மனிதன் பழக்கத்துக்கு அடிமையாகிவிடு கிறான். இடையில் எத்தனையோ வேலைகள் என்னைத்தேடி வந்தன. ஆனால் என்னால் அவற்றுக்குப்போக மனம் வரவில்லை. இந்தவேலையே சொர்க்கம். எனது இலட்சியத்திற்கு இதுவே வழி சமைக்கும் என்ற நம்பிக்கையில் இப்படியே காலத்தை ஓட்டிவிட்டேன்.

எனக்கு இருபத்தைஞ்சு வயசில திருமணம் நடந்திச்சு. அடுத்தடுத்து இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். திருமணமாகி எனது மனைவியிடம் ஒன்றாக இருந்தகாலம் மிகக்குறைவு. எப்பாலும் எங்கட அம்மன் கோயில் திருவிழாவுக்கும் மற்றது வருசம், தீபாவளி வந்தால்தான் மனைவி பிள்ளைகளுடன் ஒன்றாக இருந்ததுண்டு.

இப்போது நான் எனது இலட்சியத்தை சற்று பிற்போட்டு விட்டேன். நான் என்ன கஸ்ரப்பட்டாலும், அந்தக் கஸ்ரம் எந்தவிதத் திலும், எனது பிள்ளைகளைத் தாக்கக்கூடாது. அவர்களது சந்தோசத்தில் அவர்களுடைய கல்வியில் எந்தத் தாக்கமும் ஏற்படுத்தக் கூடாது. நான் பிள்ளையாக இருக்கும்போது எதை எல்லாம் ஆசைப்பட்டேனோ அத்தனையும் பிள்ளைகளுக்கு கிடைக்கவேண்டும் என நினைத்தேன்.

நான் பிள்ளையாக இருக்கும்போது எதையெல்லாம் வெறுத்தேனோ. அவற்றை எல்லாம் பிள்ளைகளை நெருங்க விடாது பார்த்துக்கொண்டேன். இதனால் எனது இலட்சியத்திற்காக சேமித்த பணம் எல்லாம் செலவழித்தேன். அத்தோடு புதிதாகச் சேமிக்காமலும் விட்டுவிட்டேன். பிள்ளைகள் நன்கு படிக்கிறார்கள். கெட்டிக்காரர்களாக இருக்கிறார்கள் என்று கேள்விப்படும்போதெல்லாம் நான்பட்ட துன்பங்கள் பறந்தபோதும் எனது குட்டி முதலாளியாகும் இலட்சியம் பிற்போடப்படுவது பற்றி கவலை ஏற்படுவதில்லை.

எனது மகனும் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று வெளியேறிற்றான். எனி எனக்கு படிப்புக்கு செலவழிக்கிற தொகை மிச்சம்தானே. எனவே எனக்கு வீட்டோட போய் ஒரு சின்னக் கடைஒன்று போட்டுக்கொண்டு குடும்பத்தோட சந்தோசமாய் இருக்கவேணும்போல கிடக்கு. மகனும் வேலை கிடைக்கும் மட்டும் சும்மாதானே இருக்கப்போறான். அவனுக்கும் ஒரு பொழுது போக்காய் இருக்கும். ஆனால் இப்ப கையில கொஞ்சமுமில்லை. என்ன செய்யிறது எண்டு யோசிச்சுக் கொண்டிருக்கையில் தான் என்ர மனிசியின்ர தம்பியார்

**சாரங்கன்**

பிரான்சில இருந்து குடும்பத்தோட வாறானாம் எண்ட செய்தி கிடைச்சுது. எனது ஆவலை மனிசியிட்டச்சொன்னனான். "வாறவன் ஏதாவது உதவி செய்வான் தானே..." என்று அவளும் சொல்ல அவர்களின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். "ஒரு ஐம்பதாயிரம் ரூபா தந்தானெண்டா மிச்சத்துக்கு மனிசியின்ர நகையைக் கிகையை வைச்சு ஒரு சின்னக்கடை திறக்கலாம். எனக்குள்ளே நான் போட்ட திட்டம் எவருக்கும்சொல்லவில்லை.

எதிர்பார்த்ததுபோல் வந்திறங்கினார்கள். நீண்ட காலம் சந்திக்காத தவிப்பு எல்லாம் கலந்து உரையாடல்கள் நடந்தன. எனக்கு அந்த ஐம்பதாயிரம் இடைக்கிடை நினைவுக்கு வந்துபோகும். அப்பிடி நினைப்பது சின்னத்தனம் என

(22 ஆம் பக்கம் பார்க்க)

# எதுவரை இந்த ஓய்வு..!

## நாட்டுப்பற்றாளர் செம்பியன் செல்வன்



ஈழத்து இலக்கியத் துறையில் கடந்த நாற்பது வருடங்களிற்கு மேலாக பல்வேறு பரிமாணங்களில் இயங்கிவந்த செம்பியன் செல்வன் (ஆறுமுகம்- இராஜகோபால்) அவர்கள் கடந்த 20.05.2005 அன்று இயற்கை எய்தி யுள்ளார்.

ஒரு கலைஞன் தன்னுடைய வாழும் காலத்தில் தன்னைப் பற்றி சிந்திப்பதைவிட தனது மக்களையும் தனது மண்ணையுமே அதிகம் நேசிக்கிறான். அந்த நேசிப்பின் வடிவமே இலக்கியமாக பரிணமிக்கிறது.

அந்த வகையில் செம்பியன் செல்வன் அவர்களின் படைப்புக்கள் ஈழத்து இலக்கிய பரப்பில் காத்திரமான பங்கை வகிக்கிறது என்பதில் ஐயமில்லை.

நாம் இரண்டு வாரங்களிற்கு முன்னர் தான் செம்பியன் செல்வன் அவர்களை செவ்வி கண்டு எமது பத்திரிகையில் பிரசுரித்திருந்தோம்.

அவர் தன்னுடைய செவ்வியில் **"வாழும் மக்களின் முக்கிய பிரச்சினைகளிற்கு அழுத்தம் கொடுத்து வரையப்படும் எந்த வொரு இலக்கியமும் மக்களிலக்கியங்க ளாகும். மக்களிற்காக மக்களின் நலன் கருதி மக்களில் ஒருவனாக வாழும் கலைஞர் ஒருவரால் பிறப்பிக்கப்படும் எந்த இலக்கியமும் மக்கள் இலக்கியமாகும"** என தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் கடந்த 20.05.2005 அன்று இயற்கை எய்தியிருக்கும் மூத்த படைப்பாளி செம்பியன் செல்வன் அவர்கள் நாட்டுப் பற்றாளராகக் கௌரவப்படுத்தப்பட்டுள்ளமை அவருக்கு இந்த மண் வழங்கிய மரியாதையாகும்.

இலக்கியவாதிகளுக்கு ஓய்வு என்பது மரணம் அல்ல. ஏனெனில் மரணம் அவனின் எழுத்திற்கு வலிமை சேர்க்கிறதேயொழிய சேதத்தை ஏற்படுத்துவதில்லை.

ஆகவே செம்பியன் செல்வன் அவர்கள் இன்று இயற்கை எய்தியிருப்பினும் அவர் ஈழத்து இலக்கியப் பரப்பிலிருந்து ஓய்வு பெற்று விட்டதாக அர்த்தமாகாது.

அவரின் படைப்புகள் ஈழத்து இலக்கியப் பரப்பில் வாழும் வரை அவரது பெயரும் புகழும் வாழ்ந்து கொண்டே இருக்கும் என்பதிலும் சந்தேக மில்லை.

அந்த வகையில் இன்று இயற்கை எய்தி யிருக்கும் செம்பியன் செல்வன் அவர்களுக்கு எமது அஞ்சலியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்கிறோம்.

——சிறி.இந்திரகுமார்——



# நெற்றிக்கண்

முதன் முதல்
அரங்கேறியது.
அமைதித்தேவதை வேடம்.
அட்டகாசமாய் நடித்தாள்
பிள்ளை
அசந்துவிட்டோம்.
அதேமேடையில்.
கணவனை இழந்த
மனைவியாய்!
தந்தையை இழந்த
பிள்ளையாய்!
நெஞ்சுருகிப்பேசுகையில்
நெகிழாமல் இருக்க
முடியவில்லை.
ஒப்பனை கலைத்து
நடிப்பை நிறுத்தி
நரபலிக் காரிதான்
நான் என்று சொன்ன
போது
உச்சமாய்த் தெரிந்தது
நடிப்பின் சிறப்பு.
சந்தேகம் இல்லாமல்
"ஒஸ்கார்" ஒன்று
ஒதுக்கியிருக்கலாம்.
பெண் என்றால்
பேயும் இரங்கும்.
எங்கள் பழமொழி மாற்றி
பெண் பேய்க்கு
உலகமே இரங்கும்
புதுமொழி புகுத்தியது
இவள் நடிப்பு.

மழை தேவையெனில்
குருதியை ஆவியாக்கிப்
பொழியச்செய்வோமெனும்
"சமாதானத்திற்கான
சண்டை"
இந்த நாடகமே
இவள் நடிப்பிற்கு
மேலும் மெருகூட்டியது.

கண்ணை இழந்ததாய்
கண்ணீர்விட்ட நடிப்பே
மீண்டுமொருமுறை
மேடையேற்றியது.
சித்த சுவாதீனம்
அற்றவள் போல் கூட
அக்காச்சி ஒருமுறை
அற்புதமாய்
நடித்தாள்.
இது
கணவன் பழக்கிய
கலை என்று யாரும்
கணக்குப்போடவேண்டாம்.
சிங்களப் பெருங்குலத்தின்
கொள்கையில் வளர்ந்ததால்
சிவாஜியை மேவுகிறாள்
அவ்வளவுதான்.
போருக்கு பிள்ளைகள்
போதல் சம்மதமெனில்
பொதுக்கட்டமைப்பை
எதிர்க்கட்டும் என்றொரு
நாடகம் இப்போது
நடக்கிறது.
ஞானம் பிறந்ததாய்
யாரும் நினைத்தால்
பாவம் நீங்கள் என்பது
பகிடியல்ல.

ஊர்க்கதிரையில் ஏறி
உலுப்பி
எடுக்கும்உபத்திரமே.
உலகக்கதிரையேறும்
நப்பாசை ஒன்று
இருந்ததாய்
நாமறிந்தோம்.
நல்லது
"நாம் பெற்ற இன்பம்
பெறுக இவ்வையகம்"
அப்படியெனில்
உயிர்த்துடிப்படங்கும்வரை
உன் நடிப்படங்காது
என்பதே
எங்கள் நம்பிக்கை.

சிறிலங்கா நாயகியே
சிரிப்பதா? அழுவதா?
உனைப்பார்த்து
சிக்கலில் நாங்கள்.

முக்கண்ணன்

# என் மண் எனக்காய்

ஊருக்குள் வகிடெடுத்து
ஊருகின்ற ஊர்தியொன்றில்
நேற்று நான் பயணித்தேன்.
நெஞ்சு கனத்தது.
நினைவு சுழன்றாடியது.
உன்னைப் புதைத்த செம்மணிவெளியில்
சேற்று நீர் தெரிந்தது.
புற்களை மேய்ந்தபடி சில ஆடுகள் நின்றன.
வெளிதாண்டி வந்து
மோதிவிட்டுப்போன காற்றில் உன் வேதனை ஒலி.
குழந்தை ஒன்றின் வீரிட்ட அழுகையாய்
என் மனம் துடித்தது.
ஆருமற்ற வெளியில்...
நட்சத்திரங்கள் பதைபதைக்க
இப்படித்தான் நீயும் அழுதிருப்பாய்.
அம்மணமாக்கி உன்னை
அணுவணுவாய்த்தின்ற பேய்கள்
இன்னமும் தெருக்களில் நிற்கின்றன,
இளித்த வாய்களுடன்.
இரவில் மட்டுமல்ல...
பகலிலும் இருண்டு கிடக்கிறது என்பூமி.
விழிகளை மூடிக்கொண்டு
இருளில் திரிகின்றனர் என் மக்கள்.
செம்மணிவெளிச் சேற்று மணத்துடன்
சேர்ந்துவரும் தம் புத்திரரின் புத்திரியரின்
அந்தரிக்கும் ஆத்மாக்களை
இவர்கள் அறிந்திலர் போலும்!
எனினும்... என்னவளே,
இந்த வெளி கடக்கும் வேளையெல்லாம்
வேகிறது என்மனது.
எப்போதும் நீட்டத் தயாராய்
பேய்களின் கரங்களில் குண்டு நிரப்பிய
சுடுகலன்கள்.
யாரையோ ஏமாற்றுவதற்காக
பூசப்பட்டிருக்கிறது சமாதானச் சாயம்.
தெருவெல்லாம் இறைந்து கிடக்கின்றன
சலுகை எலும்புகள்...
எல்லாவற்றையும் ஏறி மிதித்துக்கொண்டு
என்விழிகள் தேடுகின்றன உண்மை முகங்களை.
அந்த முகங்கள்-
சேற்று வெளிக்குள் சிதைக்கப்பட்டுவிட்டன.
நான் அழவில்லை.
என் வெளியெல்லாம் குவிந்திருக்கும்
மண்டையோடுகளின் மீதும் எலும்புத்துண்டுகளின் மீதும்
தொட்டு நிமிர்கிறேன்
என் மண்... எனக்காய் ஆகும்.

ஆதிலட்சுமி சிவகுமார்






## நகைச்சுவை




# கடற் சிங்கம்

கடற் சிங்கமும் காதுடைய சீல்கள் குடும்பத்தைச் சேர்ந்ததுதான். இதிலே கலிபோர்னியா கடற் சிங்கம், ஸ்டெல்லர் கடற்சிங்கம் எனப்படும் வடகடல் கடற்சிங்கம், தென் அமெரிக்கா கடற்சிங்கம், அவுஸ்திரேலியா கடற்சிங்கம் என்று நான்கு இனங்கள் உள்ளன. சிங்கத்திற்கு இருப்பதுபோல் கழுத்தில் பிடரி மயிர் இருப்பதால் இதற்கு இப்பெயர் வந்தது.

கலிபோர்னியா கடற்சிங்கம் என்ற இனம் பொதுவாக அனைவருக்கும் தெரிந்த ஒன்று. விலங்குகள் காட்சியகத்திலும் சர்க்கஸ்களிலும் இதைப்பலர் பார்த்திருக்கலாம். இதை நன்கு பழக்கமுடியும். இதன் சமநிலை பேணும் திறனும் விளையாட்டுத்திறனும் சாகசங்களும் வியப்பிற்குரியன.

இதன் உடல் சொர சொரப்பாக சொக்லேட் நிறத்தில் இருக்கும். கம்பளரோம சீல்கள் போல் கனத்த ரோமங்கள் உள்ள அடி உறை இதற்குக் கிடையாது.

ஆண் கடற் சிங்கம் சுமார் 2.4மீற்றர் நீளமும் பெண் கடற் சிங்கம் 1.8 மீற்றர் நீளமும் உடையது. நீண்ட முகமும் வாயைச் சுற்றி முடிகளும் இருக்கும்.

வழுவழுப்பான தரையில் வேகமாகச் செல்லக்கூடியது. கடற்கரையோரமுள்ள பாதைகளில் தாவித் தாவிச் செல்லும். இனப்பெருக்கத்தில் ஆண் சிங்கம் முதலில் தரையின் எல்லை வகுத்துக்கொள்கிறது. பின்னர் பெண் இனம் கரைக்கு வந்து குட்டி ஈனுகின்றது. குட்டி போட்டதும் அந்த எல்லைக்குரிய ஆண் கடற் சிங்கத்துடன் இனச்சேர்க்கை புரிகிறது. குட்டிக்குத் தாய் பால் கொடுக்கிறது.

வட கலிபோர்னியாவிலிருந்து தெற்கு மெக்ஸிக்கோ வரையுள்ள பசுபிக் கடல் பகுதியிலும் ஜப்பானில் தென் கடலிலும் பரவலாக இவை உள்ளன.

காதுள்ள சீல்களில் மிகப் பெரியது பசுபிக் மாகடலின் வடபகுதியில் வாழும் ஸ்டெல்லர் கடற்சிங்கம் எனப்படும் வடகடல் கடற்சிங்கம். இதில் ஆண் இனம்3.3மீற்றர் நீளமும் ஏறக்குறைய 685 கிலோ எடையும் கொண்டது. பெண் கடற்சிங்கம்2.4மீற்றர் நீளமும் சுமார் 320கிலோ எடையுமுடையதாக இருக்கும். இதன் உடல் மஞ்சள் பழுப்பு நிறத்திலிருக்கும். இதன் இனப்பெருக்கக்களம் வட அமெரிக்காவின்



பாறைகள் நிறைந்த மேற்குக்கடற்கரைப்பகுதியும் ஜப்பானைச்சூழவுள்ள தீவுகளும்.

இதன் உணவு சாலமன்மீன், ஹெர்ரிங், ஆக்டோபஸ் முதலியன. வலையில் விழுந்த மீன்களையும் அபகரித்துத் தின்றுவிடும்.

அவுஸ்திரேலியாவின் தென்மேற்குக் கடலோரங்களில் காணப்படும் இனம் அவுஸ்திரேலிய கடற்சிங்கம். இது சுமார் 2.4மீற்றர் நீளம்வரை வளரக்கூடியது. ஆண்டு முழுவதும் சிறு சிறு கூட்டமாக கடலோரம் வாழ்பவை. உணவிற்காகவே கடலுக்குள் செல்லும். சிலசமயங்களில் பெங்குவின் பறவையையும் பிடித்து உண்ணும்.

தென் அமெரிக்கக் கடற்சிங்கத்தின் தாயகம் அட்லாண்டிக் கடற்கரையும், தென் அமெரிக்க தென் பகுதியில் பசுபிக் கடற்கரைப் பகுதியும். இது சுமார் 2.5 மீற்றர் முதல் 2.8 மீற்றர் நீளம்வரை இருக்கும். ஆண் கடற் சிங்கத்தின் கழுத்து குட்டையாக இருக்கும். இதன் பிடரி மயிர் தோள் வரை நீண்டிருக்கும்.

## சொற்சிலம்பம் - 88

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| த | ப் | வு | ம் | ன் | னை | ம் |
| டு | கு | நீ | பா | ந் | மி | பு |
| தி | லா | தி | கோ | னி | ணி | ஸ் |
| ம் | அ | பி | ரி | டோ | சீ | ர |
| மே | ட் | தா | ஷ் | ர் | ரி | னை |
| ரா | ப | யா | சா | ஸ் | ரு | நு |
| டி | ல் | மோ | ரோ | கி | த் | அ |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் -86 இன் விடைகள்

01. அவுஸ்திரேலியா.

02. யானை.

## சொற்சிலம்பம் - 86 இன் பரிசுக்குரியவர்

ம.நிரோஜன், தரம்-04
யா/தாளையடி றோ.க,
வித்தியாலயம்.

## சொற்சிலம்பம் - 86 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. செ.மேனகா, தரம் -05C, கிளி/மத்தியகல்லூரி.
02. தி.டிலக்ஸ்சிகா, முத்துஐயன்கட்டு, வலதுகரை.
03. ஜெ.ஜெயரூபன், பண்டாரவன்னியன் வீதி, கனகராயன்குளம்.
04. கு.கௌசிகன், வற்றாப்பளை, முள்ளியவளை.
05. யு.நிரோசி, ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
06. க.தருபன், தரம்-05C, மு/ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை.
07. P.ஜெகன், இல:-600/43, பிரமந்தனாறு.
08. தி.லோஜினி, தரம்-08, கிளி/இராமநாதபுரம் கிழக்கு, அ.த.க பாடசாலை.

01. இலங்கையின் மிகப்பெரிய நிர்வாக மாவட்டம்?
01) ........................................

02. சிறிலங்கா கிரிக்கெட் அணியின் தற்போதைய பயிற்றுவிப்பாளரின் பெயர்?
01) ........................................


சொற்சிலம்பம்-88
ஈழநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.


பெயர் :- ........................................

முகவரி :- ........................................
........................................
........................................

# இட்டப்பந்தயம்...

## பகுதி-06






தற்கால கல்விச் சமூகத்தினரிடையே நட்பு என்பது வெறும் புரிதல்களுக்கு அப்பாற்பட்ட ஓர் சொல்லாகக் கருதப்படுகிறது. அதாவது உண்மையான, புரிந்துணர்வான நட்பு என்பது தற்பொழுது அரிதாகவே காணப்படுகிறது. இவற்றிலும் கல்விச் சமூகத்தினரிடமே இக்குறை அதிகமாகக் காணப்படுகின்றது. முன்னைய காலங்களில் ஆண்-பெண் இருபாலாருக்கிடையில் நட்பின் மூலம் காணப்பட்ட புரிந்துணர்வு, சோசலிசத்தன்மை போன்றவை தற்போது காணப்படுவதில்லை.

இன்று நாகரிகம் வளர்ந்ததாலோ என்னவோ நட்பும் நாகரிகமாக மாறிவருகிறது.

உதாரணமாக ஒரு பாடசாலையிலோ அல்லது ஏனைய, கல்விக்கூடங்களிலோ பெண்பிள்ளைகள் கொஞ்சம் அதிகமாகக் கதைத்தால் ஏனைய பெண்பிள்ளைகளாலும் ஆண்பிள்ளைகளாலும் விமர்சிக்கப்படுகின்றனர். அது போன்றே ஒரு ஆண் எல்லோரிடமும் சகஜமாக பழகினால் தவறாக விமர்சிக்கப்படுகின்றான். இன்றைய காலத்தில் சமூக விழிப்புணர்வுடன் சமூக பயமின்றி செயற்படும் காலத்தில் இன்னும் புரிதல்கள் முழுமை பெறாத விடயம் கவலைக்குரியது.

இந்த விடயத்தில் மாணவர்களுக்கு நட்பு என்பது பல நன்மை அளிக்கக்கூடியது. எனவே மாணவர்கள் தங்களுக்கிடையிலான தொடர்பை புரிந்துணர்வுடனும் நட்புணர்வுடனும் செயற்படவேண்டியது அவசியம். அது போலவே இடைச் சமூகம், வயோதிபச் சமூகம் அனைவரும் தாமும் தமது சுற்றத்திடமும் புரிதல்களுடன் தொடர்பை ஏற்படுத்தி நட்பாக இருக்க வேண்டும்.

இரு நட்பியலாளர்களுக்கிடையில் பிணக்குகள் ஏற்படும் போது அதை சம்பந்தப்பட்ட இருவரும் மனந்திறந்து உரையாடுவதன் மூலம் தீர்த்துக்கொள்ளலாம்.

இதே போன்று பல நல்வழி காட்டும் இடங்களில் கூறப்படும் நல்வழிகளை ஏற்று நடப்பதன் மூலம் எம்மை நாம் நல்லவர்களாக ஆக்கிக் கொள்ளலாம்.

உதாரணமாக தற்பொழுது பத்திரிகை வாசிப்பவர்கள் சிறுகதை, கவிதை, சினிமா பகுதி மற்றும் படங்கள் என்பவற்றை பார்த்துவிட்டு வைத்து விடுவார்கள். அங்கு கூறப்பட்டு இருக்கும் வழிகாட்டல்கள் ஏதோ தமக்கு முன்பே தெரியும் என கர்வத்துடனோ அல்லது அலட்சியத்துடனோ பார்ப்பதில்லை. எனவே நல்வழிப்படுத்தும் பக்கங்களை வாசித்து ஏற்றுக்கொள்வதன் மூலம் அன்பு, பாசம், புரிந்துணர்வு, நட்பு ஆகியன எம்மை நல்லமுறையில் வந்தடைகின்றன. எந்தவொரு வழிகாட்டலும் இறுதியில் புரிந்துணர்வுடனே சம்பந்தப்புட்டு இருக்கும்.

எனவே இன்றைய கல்விச் சமூகமே நாளை நம் நாட்டின் சிற்பிகள். எனவே கல்விச் சமூகமும் ஏனைய அனைத்து மக்கள் சமூகமும் வழிகாட்டல்களை



## நட்பு நன்மையளிக்கும்

வாசித்தோ அன்றி கேட்பதன் மூலமோ எமது புரிந்துணர்வுகளை செம்மையாக்கி ஒருவரோடு ஒருவர் நட்பை ஏற்படுத்தி சமூகத்தில் மட மைக் கருத்துக்களை தவிர்த்து நலமாக வாழ்வோம்.

**ந.கங்கா**

## பூசணிக்காய் மஸ்கட்




தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| பூசணிக்காய் | -500கிராம் |
| சீனி | -500கிராம் |
| நெய் | -100கிராம் |
| ரவை | -50கிராம் |
| தே.பால் | -1கப் |
| ஏலம் | -5 |
| உப்பு | -தேவையானஅளவு |

செய்முறை:-

முதலில் பூசணிக்காயை துருவி எடுத்து சாறு பிழிந்து துருவலை உதிர்த்து வைக்கவும். சீனியை அடுப்பில் வைத்துப் பாகுப் பதத்திற்கு வரும்போது ரவையையும், பூசணித்துருவலையும் அதில் சேர்த்துக் கிளற வேண்டும். பின் சிறிது சிறிதாக நெய்யையும் விட்டுக்கிளறி ஏலப்பொடி தேங்காய்ப்பால் சேர்த்து கிளறி நெய் பூசிய தட்டில் கொட்டிப் பரவி ஆறியதும் வெட்டிப் பரிமாறலாம்.

**P.மகிழ்மணி**

## நாமும் மகிழ்ந்து — பிறரையும் மகிழ்விப்போம்

இன்றைய ஆண் பெண்கள் தாம் சிரிக்கவேண்டும் என்பதற்காக பலபேருடைய மனங்களை நோகடித்து பகிடிவிட்டு சிரிக்கின்றனர். உண்மையில் இவ்விடயமானது நல்ல மனித நேயமாகாது. நாமும் சிரித்து மற்றவரையும் சிரிக்க வைப்பதே சிறப்பாகும். எப்போதும் நாம் அடுத்தவரின் மனதைப் புண்படுத்தக்கூடாது. மற்றவரின் துன்பத்தில் இன்பம் காண முற்படுவது எம்முடைய மனச்சாட்சிக்கு விரோதமான செயலாகும்.

நாம் நண்பர்களோடு சேர்ந்து பழகும்போது அதில் இருக்கும் ஒருவரை கிண்டலடித்து சிரிக்கக் கூடாது. நாம் சிரிப்பதற்கு பலவழிகள் இருக்கின்றபோது ஏன் இவற்றை மேற்கொள்ளவேண்டும். நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயலையும் எம் ஆழ் மனதுக்கு அனுப்பி பரிசீலித்த பின்பே அதனை மேற்கொள்ளவேண்டும்.

வார்த்தைகளை வாயில் இருந்து கொட்டினால் திரும்ப அதனை அள்ள முடியாது. இதனை ஆண், பெண் இருபாலாரும் சிந்திக்கவேண்டும். அப்படி நாம் சிந்தித்து நடப்போமாயின் நிறைய நண்பர்கள் எம்மோடு இருப் பார்கள். வாழ்க்கையில் நாம் நல்ல நண்பர்களை அடைய முயற்சிக்க வேண்டும். எம்முடைய நற்பண்புகளை அவர்களுக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டும். அவர்களிடம் இருக்கும் நல்ல பண்புகளையும் பாராட்டப் பழக வேண்டும்.

இன்று ஒரு சில அலுவலகங்களில் பார்த்தால் அடுத்தவரை கேலிபண்ணி சிரிப்பதைத் தான் அங்குள்ள ஆண், பெண்கள் வழமையான விடயமாகவும் அதுவேதான் தம்முடைய தொழில் என்ற ரீதியிலும் செயல்பட்டு வருகின்றனர். இது உண்மையில் வேதனைக்குரிய விடயமாகும். இதனை ஒவ்வொரு ஆண் பெண்களும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அப்படி நாம் எம்மிடமுள்ள குறைகளைக் களைய முற்பட்டால் புதிய திருத்தம் எமக்குள் ஏற்படும். அடுத்தவரின் கதைகள் எமக்குத் தேவையற்றவை. நாம் செய்வதைச் சரியாகச் செய்தால் நாம் அடுத்தவருக்குப் பயப்பட வேண்டிய அவசியமில்லை. "மடியிலே கனம் இருந்தால் தான் வழியிலே பயம்" என்பது போல். நாம் நல்லமுறையில் நடந்தால் எம்மை யாராலும் ஒன்றும் செய்ய முடியாது. இவ்வுலகில் வாழும் மனிதர்கள் யாவரும் பலதரப்பட்ட குணவியல்பைக் கொண்டே வாழ்கின்றனர். என்பதை நாம் யாவரும் உணர்ந்து நடப்போமேயானால் வரும் தேவையற்ற பிரச்சினைகளைத் தவிர்த்து மற்றவரையும் மகிழ்விக்கலாம்.

**சு.சிவாஜினி**

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் ஒவ்வொருவிதமான சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. அந்த வகையிலே ஒரு கவலைக்குரிய சம்பவம் ஒன்று நடந்து விட்டால் எம்மை நாமே காயப்படுத்தி விடுகிறோம். வாழ்க்கைச் சூழலில் இருந்து ஒதுங்கிவிடுகிறோம். விரக்தியடைந்த நிலைக்குள்ளாகிறோம். இந்நிலையில் ஏதாவது ஒரு கவலைக்குட்பட்டு இருக்கும் போது உள்மன மானது பல எண்ணங் களைச் சிந்தனைகளைத் தூண்டிவிடுகிறது. யாருடனாவது நன்கு நெருக்கமானவர்களுடன் கவலையைப் பகிர்ந்து கொள்ளத்தோன்றும். ஆனால் சூழ்நிலை சாத்தியப்படுவதில்லை. சிலவேளைகளில் தவிர் க்கமுடியாமல் போய்விடு கின்றது.



## கவலைகள் வேண்டாம்

எந்தவொரு மனிதனும் பொதுவாக விரும்புவது மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதைத்தான். ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி எல்லோரும் மனிதர்தானே. ஆனால் இங்கு ஒவ்வொருவரிடமும் அவரவர் மன இயல்புகள், ஏற்றுக்கொள்கின்ற தன்மைகளைப் பொறுத்து இந்த மகிழ்ச்சியைத் தேடிக்கொள்ள முடிகிறது. ஒரு சம்பவம் ஏற்பட்டுவிட்டது என்றால் அதைப் பற்றிச் சிந்திப்பதால் நல்ல எண்ணங்கள் உருவாகும். இன்னொரு தடவை அப்படியான ஒரு சம்பவம் ஏற்படாமல் இருக்கலாம் என்பதைவிட அதனை எப்படி எதிர் கொள்ளலாம் என்ற உணர்வு தானாகவே வந்துவிடும். எப்படியிருந்தாலும் கவலைக்குரிய சம்பவம் ஒன்று ஏற்பட்டுவிட்டால் எல்லாவற்றிலும் ஒரு பதட்டம் ஏற்படும். எமது கடமைகளைச் செய்யமுடியாமல் இருக்கும். இங்கு என்ன பிரச்சினை என்று பார்த்தால் சம்பவம் சிறிய பிரச்சினையாக இருக்கும். ஆனால் அதனைப் பற்றிப் பெரிதாகக் கற்பனை செய்து கொள்வதுதான் மிகப்பெரிய பிரச்சினையை ஏற்படுத்துகிறது. இதைத் தான் சொல்லுகிறோம் எம்மை நாமே காயப்படுத்திக் கொள்வது என்று.

நண்பர்களை எப்படிப்பட்ட வர்களாக இருக்கவேண்டும் என்பதைத் தீர்மானிப்பது நாங்கள் ஒவ்வொருவரும்தான். இன்னொருவர் உங்களிடம் நீ அப்படியிரு, இதைச்செய் என்று சொல்லும்போது உங்களால் முழுமையாக ஏற்கமுடிகிறதா? ஏனெனில் அவரவர் இயல்புகள், விருப்பு, வெறுப்புகளிற் கேற்ப மாறுபடும். அதைப்போல் நாம் ஒவ்வொருவரும் மகிழ்ச்சியாக இருக்க நாமே சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்ளவேண்டும். அதைவிட்டு நாம் கவலை கவலை என்று சொல்லிக்கொண்டு இரு ளோடு வாழ்வதில் அர்த்தமில்லை. வாழ்க்கை வாழ்வதற்கானது. மனிதனாகப் பிறந்ததே குற்றம். என்ற தெளிவற்ற சிந்தனையைவிட வாழ்க்கை என்பது சக்கரம். எந்த நேரத்தில் எது ஏற்படப்போகிறது என்பதை யாராலும் சொல்லிவிட முடியாத சூழல் சூழலுக்கேற்ப வாழப் பழகவேண்டும் என்று சிந்திப்பதே சிறந்தது.

நாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று எண்ணுவதோடு அதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கிக்கொள்ளும்போது எமது கவலைகள் மகிழ்ச்சியால் இழக்கப்படுகின்றன. கோகே காப்ரியல் நூனல் என்பவருடைய சிந்தனை ஒன்றைப் பாருங்கள். "நான் ஏதாவது ஒன்றாக இருப்பதற்கு மாறாக நான் இப்படித் தான் இருப்பேன் என்று ஒரு மனிதன் எண்ணும் போது அவன் எத்தனை கவலைகளை இழக்கிறான்" ஆம் நாம் கவலைகளைத் துரத்திவிட்டு மகிழ்ச்சியாய் வாழ்வோம். வாழும் வாழ்க்கைக்காலம் சிறிதாயினும் மகிழ்ச்சியாய் வாழ முயற்சிப்போம்.

**ஈழவிழி**




## குமரகுரு புடவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம் — 49**

பெயர்:......................................................

முகவரி:...................................................

...................................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

மனிதர்கள் வாழ்ந்தபின்னர் இறக்கிறார்கள். ஆனால் சிலர் இறந்தபின் வாழ்கின்றார்கள். இசை நாடக உலகில் மாமேதையாக மங்காப் புகழுடன் வலம்வந்த சந்திரமதி இரத்தினம் இம்மாத நடுப்பகுதியில் இசை உலகைவிட்டு மறைந்தார். கலைஞர்கள் புகழ் அவர்களது வாழ்க்கையுடன் முடிந்துபோன

நடித்துள்ளனர். சந்திரமதியாக பெண் பாத்திரமேற்ற கலைஞர் இரத்தினத்தின் அசைவுகள், நளினங்கள் இசையாற்றல், நடிப்புத்திறமை உண்மையிலேயே சந்திரமதியை நேராகக் காணும் நிலையை நமக்கு தோற்றிவித்துள்ளது'' கரவெட்டி நாவலடிப் பகுதியில் வி.வி.வைரமுத்து வின் நடிகமணி விருது



# வி.கே.இரத்தினம் —

நாடகங்களில் பெண் பாத்திரமேற்று நடித்த சிறப்பிற்குரியவர். அரிச்சந்திர மயான காண்டம் சந்திரமதி, சத்தியவான், சாவித்திரி-சாவித்திரி- கோவலன் கண்ணகி-கண்ணகி, மாதவி, ஞானசௌந்தரி-ஞானசௌந்தரி லேனாஸ்,பவளக்கொடி-பவளக்கொடி, பூதத்தம்பி-அழகவல்லி, அல்லி அருச்சுனாவில்-அல்லி, சாரங்காதாரா-சித்திராங்கி,ஆரியமாலா-ஆரியமாலா, சதிநந்தாவதி-நந்தாவதி போன்ற நடகங்களைக் குறிப்பிடமுடியும்.

தனியே பெண் பாத்திரத்தில் தான் நடிக்க தெரிந்தவன் என்பதை பொய்ப்பிக்கும் வகையில் நாரதராகவும், விருத்தன், நந்தனார் போன்ற பாத்திரங்களாலும் அரங்கை அலங்கரித்தவர். இலங்கையின் பல பாகங்களிலும் தான் சார்ந்த குழுவினருடன் நாடகம் நடித்து தன் மண்ணிற்கு பெருமைசேர்த்த கலைஞர் நடிகமணி வி.வி.வைரமுத்து, வி.என்-செல்வராசா, இணுவில் கனகரத்தினம். கலாவினோதன் அண்ணாசாமி, அரியாலையூர் கவிஞர் கே.வி.ஐயாத்துரை, சி.சிவநேசன், நடிககலாமணி சி.செல்வரத்தினம், கலைவேந்தன் ம.பொ.தைரியநாதன் என்று திறன் வாய்ந்த நடிகர்களுடன் பாத்திரமேற்ற பெருமைக்குரியவர்.

பிறரது பாராட்டுகளையும் கௌரவங்களையும் பெற்றுள்ள கலைஞர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை ஏராளம் என்றே கூறமுடியும். அரியாலையைச் சேர்ந்த சந்திரபோஸ் என்பவர் கலைஞரைப்

தன்னையும் ஞாபகப்படுத்துவதாக மேற்படி இருவரையும் கலைஞர் குறிப்பிட்டுள்ளமை இங்கு நினைவு கூரத்தக்க காலத்தால் அழியாத கலைவடிவங்களை காலமாற்றத்திற்கமைவாக அதன் தனித்துவத்தை இழக்காது மேடையேற்றவேண்டும். ஆர்வமுள்ளவர்களை இனம்கண்டு அவர்களை அவர்களுக்குரிய பாணியில் பயிற்றுவிக்கும்போது நல்ல கலைஞர்களை உருவாக்க முடியும். மேற்படி இருபெரும் பொறுப்புக்களையும் தன்னால் இயன்றவரை செய்துள்ளார் என்பது கலைஞருடன் உரையாடிய போதும் கலைஞர் உருவாக்கியவர்களுடன் உரையாடும்போதும் தெளிவாக உணர்ந்துகொள்ள முடிந்தது. பாரம்பரிய கலைவடிவங்கள் தமக்கென வகுத்துக்கொண்ட அடையாளங்களிற்கு அமைவாகவே செயற்பட்டன. தொடர்ந்தும் செயலாற்றி வருகின்றன. இவற்றின் புனிதத்தை பெறும் வகையில் உழைத்த கலைஞர்களில் கலைஞர் மிக முக்கியமானவர். கலைக்காகவே பிறந்து கலைப்பணியாற்றியே இறக்கவேண்டுமென்ற மனநிலையில் இசைநாடகத்துறைக்கு நடிகராக, நெறியாளராக, இராக, தாள சொற்கட்டுக்கலைப் பேணும் காப்பாளராக பணியாற்றிய கலைஞர் நல்ல மனிதர் என்பதற்கு பல சான்றாதாரங்கள் உள்ளன.

மனிதர்கள் வாழும்போது இறக்கவேண்டும். இறந்த பின்னரும் வாழ வேண்டும். ஆனால் இது எல்லோரிற்கும் கிடைப்பதில்லை.

குரலிலான ஒலி வடிவங்கள் இல்லை என்பதே. இக் கவலையும் குறையும் நியாயமானதாகவே உள்ளது.

கலைஞர் வி.கே.இரத்தினத்தின் நாடக அனுபவத்தில் இடம்பெற்ற சுவையான சம்பவங்கள் பல திருகோணமலை கணேசன் தியேட்டரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நாடகத்திற்கான விளம்பரப் பதாகையில் "அரியாலை ஸ்ரீகலை மகள் நாடகசபை பெருமையுடன் வழங்கும் ஐம்பெரும் நாடகங்கள், முதன் முதலாக பெண் பாத்திரத்தில் வி.கே.இரத்தினேஸ்வரி'' என்று குறிப்பிட்டிருந்தது. இறுதிவரை இரத்தினேஸ்வரியாக (ஐந்து நாடகங்கள் முடியும்வரை) நடித்து பெண்களையே மிஞ்சும் அளவிற்கு தன் நடிப்பாற்றலை வெளிப்படுத்தினார்.

யாழ்ப்பாணத்தில் தென்னிந்திய சிரிப்பு நடிகர் மல்லியம் இராஜகோபாலை மயக்கியபெண். அரிச்சந்திர மயான காண்ட நாடக முடிவில் தலைமையுரையாற்றிய மல்லியம் இராஜகோபால் இவ் நாடகத்தில் சந்திரமதியாக பாத்திரத்தையேற்ற பெண்ணை என்னால் மறக்கமுடியவில்லை. மிகத் திறமையாக தன் பங்களிப்பை இந் நாடகத்திற்கு வழங்கியுள்ளார். தென்னிந்திய சினிமா நடிகையான கண்ணாம்பாளின் நடிப்பிற்கிணையாக இவ் நடிகை உள்ளார் என தனது புகழ் மாலையை தொடர்ந்து அணிவித்துக்கொண்டே போனார்.

பெண்களிற்கான நளினம், லயம், குரல்வளம், நடிப்பாற்றல், ஒப்பனைப்பொருத்தம் என அனைத்தையும் இயற்கையாகக் கொண்ட கலைஞர் அரங்குகளில்

# இசைநாடகத் துறையின் 'இரத்தினம்'

தில்லை. கலையுலகம் உள்ளவரை கலைஞர்கள் புகழ் அழிவதில்லை. இது வரலாற்று ரீதியான உண்மை. இசைநாடக இமயம் அரியாலையூர் (வி.கே.இரத்தினம்) கதிர்காமு-இரத்தினம் இசை நாடகத்தின் இரு சக்கரங்களில் ஒன்று.

ஒரு ஆணின் வெற்றிக்குப் பின் ஒரு பெண் இருப்பாள் என்பது அரிச்சந்திரனின் புகழ், வெற்றி, பாராட்டுதல்களிற்கு சந்திரமதி பங்காற்றியுள்ளார் என்பதனால் நிரூபனமாகிறது. ஈழத்து இசை நாடக சக்கரவர்த்தி நடிகமணி வி.வி.வைரமுத்து அரிச்சந்திர மயானகாண்டத்தில் அரிச்சந்திரனாக புகழ்பெறுவதற்கு வி.கே. இரத்தினம் சந்திரமதியாக பெரும் பங்காற்றினார் என்பது உண்மை.

வி.கே.இரத்தினம் பெண் பாத்திரமேற்று அரங்கை அலங்கரித்த போதிலிருந்து பார்வையாளரை பெரும் சங்கடத்தில் உள்ளாக்கியது. பெண் பாத்திரமேற்றது பெண்ணா-ஆணா என்ற கேள்வி. பெரும்பாலானோரின் பதில் பெண்ணாகவே அமைந்தது. அந்தளவிற்கு பெண்களிற்கான உடல்வாகும், அங்க அசைவுகளுடனான நளினத்தன்மையும் வி.கே.இரத்தினத்திற்குக் கிடைத்த கொடை என்றே கூற வேண்டும். கலைஞரின் சிறப்பை நிரூபிப்பதற்கு பின்வரும் கூற்றுக்களே போது மானவை.

தமிழ் நாடக உலகின் தந்தையெனப் போற்றப்படும் கலையரசு சொர்ணலிங்கம். "இவ் நாடகத்தில் பங்கேற்ற கலைஞர்கள் அனைவரும் மிகச் சிறப்பாக பாத்திரமுணர்ந்து

வழங்கும் நிகழ்வில் கலையரசர் சொர்ணலிங்கம் மேற்படி கருத்தை முன்வைத்தார்.

துறைசார்ந்த கலைஞரால் அத்துறையில் பிரகாசிக்கும் ஒருவரை மனம் திறந்து வாழ்த்துவது மிக மிக அரிதானது. இசையில், நடிப்பில் உயர்ந்த கவிஞர் கிருஸ்ண ஆழ்வார் பழம்பெரும் இசைநாடக நடிகரான கிருஸ்ண ஆழ்வார் சுபத்திரையாக பாத்திரமேற்று நடித்த பின்னர் இன்று வரை (மறைந்தும் கூட) சுபத்திரை

**இரா-வின்**

ஆழ்வாராகவே அழைக்கப்படுகின்றார். இத்தகைய சிறப்புப்பெற்ற அற்புதக் கலைஞர் மிக அடக்கமாகத் தனக்கே உரித்தான நிதானத்துடன் கீழ் கண்டவாறு குறிப்பிடுகின்றார்.

"தம்பி நீ நன்றாக நடிக்கிறாய் முன்பு நானும் உன்னைப்போல் பெண் வேடமிட்டு நடித்தவன். அதனால் தான் என்னை இன்றும் என் பாத்திரப்பெயரான சுபத்திரை என அழைக்கின்றனர். பெண் பாத்திரத்திற்கான சகல பொருத்தங்களும் உனக்குண்டு. நீ ஒரு நிறைவான கலைஞன். உன்னைப்போல் பெண் பாத்திரத்திற்கு சகலதும் பொருந்திய கலைஞன். உன் மூலமாகத்தான் தோன்றமுடியும். உனக்கு நிகர் நீயே தான் என திறமையுணர்ந்து வி.கே.இரத்தினத்தின் தரம் கண்டு தரச்சான்றிதழ் வழங்கினார்.

இருபதிற்கு மேற்பட்ட இசை நாடகங்களை நெறியாள்கை செய்த பெருமைக்குரிய கலைஞர் பதினைந்திற்கு மேற்பட்ட மரபுவழி இசை

பாராட்டி தங்கச் சங்கிலி அணிவித்து கௌரவித்தார். 1960ஆம் ஆண்டளவில் இசைநாடகக் குயில் இரத்தினம் சோகச் சோபிதசொர்ணக் கவிக் குயில், கலாபூசணம் என பல விருதுகளை வாழும் போதே பெற்ற பெருமகன். பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தினால் வழங்கப்படும் பொன் முடியுடன் மரபுக் கலைச்சுடர் பட்டத்தினையும் பெற்றுள்ளார்.



தன் வாழ் நாள் முழுவதும் கலைப்பணியாற்றி இசைநாடக விழுமியங்களை தவறவிடாது பேணிக்காத்ததுடன் அதன் இராக தாளங்களை இறுதிவரை சரிவரப் புகட்டி வந்தவர். பல இசைநாடகக் கலைஞர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். கலைஞரால் புடம் போடப்பட்டவர்களில் நடிக கலாமணி அரியாலையூர் செல்வரத்தினம், தமிழினத்தின் சிறந்த புரட்சிப்பாடகரான சாந்தன் இவர்கள் இருவருமே கலைஞரை கவர்ந்தவர்களில் முதன்மையானவர்.

பாடகராக இருந்த சாந்தனை நாடக நடிகராக அதுவும் அரிச்சந்திரனாக பயிற்றுவித்து யாழ்ப்பாணம், வன்னியின் பல பாகங்களிலும் செல்வரத்தினத்துடன் அரிச்சந்திர மயானகாண்டத்தை மேடையேற்றிய பெருமைக்குரியவர். வி.வி.வைரமுத்துவையும்

கலைஞர் தனியே கலைத்துறையுடன் நின்றுவிடவில்லை. சமய சமூகப்பணிகளை முன்னின்று செயலாற்றியவர் என்பது குறிப்பிடப்படவேண்டிய ஒன்று. இதனை நிரூபிக்கும்வகையில் சனசமூக நிலையக்கொடி அரக்கம்பத்தில் பறந்ததுடன் நிலைய செயற்பாடுகளை மூன்று தினங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தியமையை குறிப்பிடமுடியும்.

கலைஞரின் சமய, சமூக, கலைப்பணிகளை கருத்தில் கொண்டு அவரது ஞாபகார்த்தமாக அரியாலை காந்தி சனசமூக நிலையப் பகுதியில் கலாச்சார மண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளமை கலையுலகம் நன்றியுடன் நினைவு கூரத்தக்கது. வாழும் இளம் கலைஞர்களின் பெரும் கவலை கலைஞரது இனிமையான கனீர் என்ற

பாத்திரமாக மாறி வலம்வரும் சிறப்புடன் சிறந்த நடன நடிகையாகவும் தன்னை வளர்த்துக்கொண்டவர்.

வரலாறுகள் வெற்றிடங்களை விட்டு வைப்பதில்லை. ஆனால் இவ் இமயங்களின் வெற்றிடங்களை நிரப்ப முடியுமா? அர்ப்பண சிந்தையுடன் கலைக்காகவே இறுதிவரை வாழ்ந்த கலைஞரைத் தந்த அரியாலையூர் (அரிய கலை ஊர்) பெரும் நன்றிக்குரியது. கலைஞரின் கலைப் பயணத்திற்கு இயலுமான சகல வழிகளிலும் பேருதவியாக செயற்பட்ட குடும்பத்தவர்கள் ஒவ்வொருவருமே கலைப்பணியாற்றியவர்கள் என்றே கூற வேண்டும்.

வி.கே.இரத்தினம் என்ற ஒப்பற்ற இசைநாடகக் கலைஞர் இசைநாடகத் துறைக்குக் கிடைத்த "இரத்தினம்'' என்றால் மிகையாகாது.

# இழப்பின் விலை உணர்த்தப்படவேணும்..!




'வணக்கம் வணக்கம் எல்லாருக்கும்! என்னமாதிரி நிலைமையள் உங்க போகுது ? சாதாரணமா சைவ சமயத்திலதான் சுயம்பு-லிங்கம் தன்ரை பாட்டிலேயே வாறதாய் புராணங்களில அறியிறனாங்கள். இப்ப என்னடாவெண்டால் சுயம்பு-புத்தரும் எல்லோ இரவோட இரவாய் வந்திட்டார். எங்கையிருந்துதானோ ஜே.வி.பிக்கு உப்பிடியொரு கடவுள் பக்தி வந்திச்சோ தெரியேல்லை. என்ன இருந்தாலும் ஜே.வி.பியின்ரை கடும் பக்தியை நாங்கள் மதிப்போம். ஒரு சிக்கலும் படாமல் அதே புத்தர் சிலைகளுக்குப் பக்கத்தில இரண்டடி உயரம் அதிகமாய் 14 அடியில ஒரு முருகன் சிலை, யேசு சிலை, இளம்பிறை வடிவம் எண்டு எல்லாத்தையும் பிரதிஷ்டை செய்தால், சர்வமதத்துக்குமான புனிதமையமாய் இருக்குமெல்லோ. மற்றது பாருங்கோ! பிரித்தானியத்தேர்தல் முடிவுகளையும் அவதானிச்சிருப்பியள். ஏதோ கொஞ்சம் ஆதரவு குறைஞ்சிருந்தாலும், ரொனி பிளேயரை திரும்பவும் ஆட்சியில அமர்த்தியிருக்கினம் அங்கத்தைய மக்கள். அமெரிக்க சனாதிபதி தேர்தலியையும் திரும்பவும் தேர்ந்தெடுத்தவை. ஆக மொத்தத்தில ஈராக் பற்றி ஆரம்பகாலத்தில விட்ட புலுடாக்கள் எல்லாம் நல்லாய் வெளிச்சாப்பிறகும், அதைப்பற்றி பெரீசாய் அவையள் கவனிக்கேல்லை. எங்கை தலையறுபட்டாலும், தங்களுக்கு அதில லாபம் கிடைச்சால் அது போதும் எண்ட அவையின்ரை போக்கைத்தான்2 தேர்தல் முடிவுகளும் காட்டிச்சிது. அப்படியான ஒரு போக்கைத்தான் இப்ப நாட்டின்ரை தெற்கிலையும் காணிறம். ஏதோ பார்ப்பம், இன்னும் எத்தினை நாளுக்கு அவையின்ரை கூத்தெல்லாம் எண்டு!

சரி அதுகளை விட்டிட்டு நாங்கள் யேர்மனிப் புதினங்களுக்கு வருவோம். போனகிழமை நான் இஞ்சை சரியா மாட்டுப்பட்டிட்டன். எல்லாம் இவன் பேரனால வந்ததுதான்! சும்மா வாயை வைச்சுக் கொண்டிருக்கேலாமல் பள்ளிக்கூடத்தில போய் 'தாத்தா வந்திருக்கிறார்! தாத்தா வந்திருக்கிறார்!' எண்டு எல்லாருக்கும் பறைதட்டிக்கொண்டு திரிஞ்சிருக்கிறான். அது ஒண்டுமில்லைப் பாருங்கோ! அவனோட கூடப் படிக்கிற யேர்மன்காரர் எல்லாருக்கும் பாட்டா, பாட்டி எல்லாம் இருக்கினம். எங்கட சனம் 1980களுக்குப் பிறகு வெளிக்கிட்டதால, தாய்-தகப்பனைத் தாண்டி மூத்த சந்ததியெண்டு ஒருத்தரும் பெரீசாய் இஞ்சை இல்லை. என்ன இருந்தாலும் தாய்-தகப்பன் வைக்கிற அன்பில இருந்து பாட்டா-பாட்டிமார் வைக்கிற அன்பு கொஞ்சம் வித்தியாசமானது. அது கிடைக்காமல் இருந்ததுக்கு இப்ப நான் போய் நிண்டஉடன, அவையளுக்கு தலைகால் தெரியாத சந்தோசம். அதுதான் வகுப்பிலையும் தம்பியர் என்னட்டைக் கேட்டறிஞ்ச சுனாமிச்சம்பவங்கள் உட்பட எல்லாத்தையும் வெடிச்சுத்தள்ளியிருக்கிறார். போன ஞாயிற்றுக்கிழமை பேரன்ரை வகுப்பு ரீச்சர் என்னைக் கேட்டு, வீட்டுக்கு ரெலிபோன் எடுத்தா. என்னை ஒருநாள் வகுப்புக்கு வந்து சுனாமி அனுபவங்கள் பற்றிப் பிள்ளையளுக்குச் சொல்லச்சொல்லிக்கேட்டா. மொழிப்பிரச்சினையைப் பற்றி நான் சொன்னதுக்கு, பேரன் தமிழுக்கும், டொச்சுக்கும் மொழிபெயர்க்கலாம் தானே! அப்பிடி இயலாத கட்டமெண்டால் தான் இங்கிலிஷில மொழிபெயர்க்கலாம் எண்டும் சொன்னா. ஆ.. இந்த இடத்தில ஒண்டு சொல்லோணும். யேர்மனியில தமிழாலயம் எண்ட பேரில கிழமையில ஒருநாள் தாய்மொழி வகுப்புகள் நடத்தினம். தமிழாக்கள் அதிகமாய் இருக்கிற 110 நகரங்களில இருக்கிற ஆக்களை வைச்சு, 10ஆம் வகுப்பு வரை தமிழ் படிக்க, இவையள் செய்யிற ஒழுங்குகளால, 6500 தமிழ்ப் பிள்ளையள் வரை பிரயோசனம் பெறுகினம். சரி! நல்ல விசயத்துக்குத்தானே ரீச்சர் கேக்கிறா, என்னண்டு மறுக்கிறது, வாறதாய் ஒப்புக்கொண்டன். ஓம் எண்டாப்பிறகு மனசுக்கிளை 1008 சந்தேகங்கள் வந்து, பயப்பீதியை உண்டாக்கிக் கொண்டிருந்திச்சு. இல்லை, 3ஆம் வகுப்புத்தான் எண்டாலும் எடக்குமுடக்காய் ஏதாவது தெரியாத விசயத்தைப் பற்றி சின்னனுகள் கேட்டாலும், முழுசிக்கொண்டிருக்க வேண்டி வந்திடும். சடக்கெண்டு வந்த யோசனையின் படி உங்கையிருந்து வரேக்கிள்ளை வாங்கிக்கொண்டு வந்த செங்கை ஆழியான் கலாநிதி குணராசா எழுதின சுனாமி பற்றி விலாவாரியா விளங்கப்படுத்திற அருமையான நூலொண்டு இருந்திச்சிது. அண்டைக்கு முழுக்க மினைக்கெட்டு அதை வாசிச்சு முடிச்சன்.

அடுத்தநாள் பேரனோட சேர்ந்து நானும் பள்ளிக்கூடம் போனன். அங்கை ரெலிபோனில கதைச்ச ரீச்சரும், வேற மாஸ்ரர் ஒராளும் கைதந்து, வரவேற்று இருத்திச்சினம். சுனாமி வந்தநேரம் நேரடியாய் நான் அலையளைப் பார்க்கேல்லை எண்டதை முதல்லையே அவையளுக்குச் சொல்லிட்டன். 'சுனாமி எப்பிடி வந்ததெண்டு ஏற்கெனவே நாங்கள் வகுப்பில பார்த்திட்டம். அதை எதிர்கொண்ட மக்களின்ரை வாழ்க்கை எப்பிடியிருக்கிது எண்டதைப் பற்றி அறியிறதுக்காகத்தான் உங்களின்ரை உதவி தேவைப்படுகிது', எண்டந்த மாஸ்ரர் சொன்னார். அப்பிடியே ஆசிரியர் அறையில இருந்து, வகுப்பறைக்குப் போனோம். முதல்லை பேர், ஊருகளை ஒவ்வொருத்தராய் அறிமுகப்படுத்திச்சினம். என்ரை பேர் அவையின்ரை வாய்க்கிளால வர சரியாய் கஷ்டப்பட்டிச்சிது. அது ஏதோ 'ஏய் ரம்பு' மாதிரி இருந்திச்சிது. கடைசியில சுனாமித்தாத்தா எண்டு எல்லாரும் என்னைக் கூப்பிட்டிச்சினம். மகள் செய்து தந்த பலகாரங்களையும் அவையளுக்குக் குடுத்திட்டு, சுனாமி எங்களைத் தாக்கினதைப் பற்றிச் சொன்னன். வகுப்பறையின்ரை ஒரு பக்கச்சுவர் முழுக்க யேர்மனியின்ரை வரைபடமும், மற்றப்பக்கத்தில உலகப்படமும் வரையப்பட்டிருந்திச்சு. 3ஆம் வகுப்பிலையே உள்நாடு, வெளிநாடு எங்கையெண்டாலும் நல்ல பூகோள அறிவு அவையளுக்கு இருந்ததுக்கு அதுதான் காரணமாக இருக்கோணும். நாள் முழுக்க உந்தப்பெரிய அளவில படங்களைப் பார்த்துக்கொண்டிருந்தால் மனசில சுலபமாய் பதிஞ்சிடும் தானே! சே! எங்கட பள்ளிக்கூடங்களிலையும் உப்பிடிச்செய்தால் எவ்வளவு பிரயோசனமாய் இருக்கும். சுவர் முழுக்க நிறைஞ்சிருக்கிற வண்ணங்கள் அடிச்ச உலக/தாயக வரை படம், பாடப்புத்தகத்தில ஒரு மூலையில இருக்கிற கறுப்பு-வெள்ளைப்படம் மாதிரி இல்லை. அடிச்சு, தோல் உரிச்சுப் பாடமாக்க விடுகிறதுக்குப் பதிலாய், பார்வையில படிறமாதிரி பெரிசாய் கீறி வைச்சால் மனசில பதியுமெல்லே! கடையளோ இல்லாட்டி தங்கட ஏதாவது நினைவாய் தனிநபரோ விரும்பி வந்து எங்கட நாட்டிலையும் ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும் செய்தால் எவ்வளவு நல்லாயிருக்கும்! அப்பிடி.. அந்தப் படத்தில இடங்கள் எல்லாத்தையும் காட்டினன். ஒவ்வொண்டையும் பற்றி சந்தேகங்கள், கேள்வியள் எண்டு நேரம் போனதே தெரியேல்லை. பேந்து ஒவ்வொரு குழுக்குழுவாய் பிரிஞ்சு தாங்களே எழுத்தில கேள்வியள் தயார் செய்து கொண்டு வந்து என்னைக் கேட்டிச்சினம். இடையில பேரன்தான் மொழிபெயர்ப்பாளர். மத்தியானம் ஆகிற நேரத்தில இன்னுமொரு மாஸ்ரர் வந்து தன்ரை வகுப்பில ஒருநாள் சமய பாடத்துக்கு என்னை வரமுடியுமோ எண்டு கேட்டார். இதென்னடா கரைச்சல்! எனக்கு பாடமாக்கின தேவாரங்களே ஞாபகம் இல்லை. அப்பிடியிருக்க பைபிளைப் பற்றி நான் என்னத்தைச் சொல்ல! பேரன்ரை வகுப்பு ரீச்சரும் 2 நாள் கழிச்சொருக்கால் வரச்சொன்னதால ஒருநாளில இரண்டு அலுவலையும் பார்க்கக்கூடினதாய் சம்மதிச்சன்.

அண்டைக்கு வீட்டை வந்து, 2 நாள் கழிச்சுத் திரும்பப் போன நேரம்தான் கனவிசயங்கள் விளங்கிச்சிது. குழுக்குழுவாய் பிரிஞ்சு என்னைக் கேள்வியள் கேட்டவையெண்டு . சொன்னனானல்லோ! அவையள் மட்டையளில படங்கள் எல்லாம் கீறி வகுப்பறைக்குள்ளை சின்னதொரு கண்காட்சியையே ஒழுங்குசெய்திருந்திச்சினம். அது என்னண்டால் சுனாமியால பாதிக்கப்பட்ட சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள், பிள்ளைகளை இழந்த பெற்றோர் எண்டு ஒவ்வொரு தரப்பாரின்ரை கவலையள், அவையின்ரை துக்கத்தைத் தீர்க்கிறதுக்கு நாங்கள் என்ன செய்யலாம், எண்டெல்லாம் தாங்கள் யோசிச்சதை படங்களோடை கீறி வைச்சிருந்திச்சினம்.


மற்ற வகுப்பில நடந்த சமய வகுப்பில 'சுனாமியும், சமூகத்தாக்கங்களும்- எங்களின் பங்களிப்பென்ன ? எண்ட தலைப்பில கலந்துரையாடல் நடந்திச்சிது. அது எட்டாம் வகுப்பெண்டதால நானே முதல் யோசிக்காத பிரச்சினையள் பற்றியதாய் இருந்திச்சிது. அதில மொழிபெயர்ப்பு செய்யிறதுக்கு பத்தாம் வகுப்பில படிச்ச ஒரு தமிழ்ப்பிள்ளையொண்டை மாஸ்ரர் கேட்டு, ஒழுங்கு செய்திருந்தார். அப்பதான் அந்தப் பிள்ளை மூலமாய் அவையின்ரை சமயப்புத்தக பாடத்திட்டம் பற்றி விசாரிச்சன். குடி, போதைமருந்து போன்ற பழக்கங்களால ஏற்படுகிற பிரச்சினையள்,குடும்பம் பாதிக்கப்படல், ஏழ்மை, குழந்தை வளர்ப்பு எண்டு பல பொதுவான அவசியங்களை அந்தப் பாடத்திட்டம் கொண்டிருந்திச்சிது. இப்பை சுனாமியால மக்கள் எதிர்கொண்ட குறுகிய- மற்றும் நீண்ட காலப்பாதிப்புகள் பற்றிப் பார்க்கினம். இடைக்கிடை அன்பு, பண்பு, கடமை போன்ற நல்ல விசயங்களைப் பற்றி மதங்கள் கூறுகிற கருத்துகளையும் அலசுகினம். உதாலதானோ என்னவோ அந்த நாட்டுப்பிள்ளையளின்ரை பார்வை வித்தியாசமாய் இருக்கிது. நாங்களும் எங்கட பாடத்திட்டங்களைக் கொஞ்சம் யதார்த்தத்துக்கும், அறிவியலுக்கும் ஏற்ப மாற்றோணும். இல்லை இப்பிடித்தான் இருப்போம் எண்டு அடம் பிடிச்சால் நாங்கள் வளர்ச்சி அடையிறதுக்கு வாய்ப்பேயில்லை. எங்கட நாட்டில இன்ரர்நசனல் ஸ்கூல் எண்டு யாழ்ப்பாணத்தில தொடங்கி காலி வரைக்கும் இப்ப ஏராளம். இங்கிலாந்தில எத்தினை மில்லிலீற்றர் மழை பெய்ஞ்சது? மகாராணியின்ரை வரலாறு அதுஇதெண்டு அவையின்ரை பாடத்திட்டம் எங்கட நாட்டையோ, மக்களின்ரை தேவையளையோ கவனத்தில எடுக்காமல், கோட்சூட் போட்ட நவீனகாலக் கொத்தடிமையளை மேற்குலக நிறுவனங்களுக்கு உருவாக்கிக் குடுக்கிற மாதிரித்தான் அமைஞ்சிருக்கு. ஆனால் இஞ்சை இருக்கிறது சூழல் சார்ந்த நடைமுறைக் கல்வி.

இல்லாட்டிப் பாருங்கோ, சுவிஸ் நிறுவனம் ஒண்டு யாழ்ப்பாணத்தில குடிக்கிற தண்ணியை போத்திலில அடைச்சு வித்தால், நல்லாய் லாபம் சம்பாதிக்கலாம் எண்டு முதலிட்டிருக்கு. ஆனால் வன்னி உட்பட எங்கட பல பகுதியளிலையும் பால் கறந்து விற்கிறது நட்டமெண்டு அதைக் கைவிடினம். இந்தளவுக்கும் பாலை விட தண்ணி 3மடங்கு விலை. கேட்டால் சொல்லுவினம் பால் குளிர், சளி பிடிக்கும், ஒத்துக் கொள்ளாதெண்டு. ஆனால் அங்கர் ஒத்துவரும். சிலவேளையில அவுஸ்திரேலியப்பசுக்களின்ரை பால்தான் ஒத்துவருமாக்கும். என்ன நாசமறுப்போ ஒவ்வொருத்தரும் சொல்லிற சில விளக்கங்கள் எனக்கு விளங்கிறேல்லை. உப்பிடித்தான் சொந்தக்காரப்பொடியன் ஒருத்தனுக்கு சம்பந்தம் ஒண்டு பேசி வந்தது. இரண்டு தரப்பும் எனக்கு நெருக்கம் எண்டதால என்னைத்தான் போய்க்கேட்டுப் பார்க்கச்சொல்லி பெண்தரப்பு கேட்டிச்சினம். நானும் போய் அந்தப் பொடியனிட்டை கதையை விட்டன். 'ஆர் அந்தக் கறுப்பியை நான் செய்யோணுமோ! உந்தக் கதையளை விட்டிட்டு, வேற ஏதாவது வேலையிருந்தால் போய்ப்பாருங்கோ!', எண்டு பதில் வந்திச்சிது. பிடிக்கிறது, பிடிக்காதது ஒவ்வொருத்தற்றையும் தனிப்பட்ட அபிப்பிராயம். ஆனாலும் அவர் விமர்சிச்ச போக்கெனக்கு பிடிக்கேல, சத்தம் போடாமல் வந்திட்டன். பேந்தொரு 2 வருசம் இருக்குமெண்டு நினைக்கிறன். குறிப்பிட்ட அந்தத் தம்பியின்ரை தங்கச்சிக்கு ஒரு இடமும் சரிவராமல் இழுபட்டுக் கொண்டிருந்திச்சிது. கடைசியாய் ஒரு தரப்பில போட்டோ பார்த்து எல்லாம் சரியெண்டு இருந்தவை, நேர வந்து பார்த்திட்டு படத்தில இருக்கிறதை விட நிறம் குறைவெண்டு மாட்டம் எண்டிட்டினம். ஒருக்கால் அந்தத் தம்பி வீட்டை போனநேரம் அவர், வேண்டாமெண்டு சொன்ன தரப்பைக் கண்டபாட்டுக்குத் திட்டினார்: 'அவையளுக்கு வெள்ளைப்பொம்பிளை தான் வேணுமாம்! எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு...', எண்டு திட்டித்தீர்த்துக் கொண்டே போனார். உதுக்கு நான் சிரிக்கிறதோ, அழுகிறதோ?.. நீங்களே சொல்லுங்கோ! ஏன் சுனாமி பற்றிச் சொல்லிறதுக்கு நான் பேரன்ரை வகுப்புக்குப் போயிருந்த நேரம், இருந்தாப்போல ஒரு சின்ன டொச் பொடியன் கேட்டான், ஏன் நான் இவ்வளவு கறுப்பாய் இருக்கிறன் எண்டு. கேட்டதுதான் எனக்கு தலை சுத்தத்தொடங்கீட்டிது. எட அந்தக்காலத்தில இருந்தே நான் எவ்வளவு சிவப்பு! வட்டுக்கோட்டைத் தேர்தல் தொகுதியிலையே என்னை விட்டால் ஆர் நல்ல நிறம் எண்டெல்லே இருந்தனான். அதைச் சொல்ல வெளிக்கிட்டனான், தொண்டையைத் துக்கம் அடைக்க, கதைக் கேலாமல் விட்டிட்டன். அப்பதான் சிரிச்சுக்கொண்டு அவையின்ரை ரீச்சர் விளக்கம் கொடுத்தா:

(18ஆம் பக்கம் பார்க்க)

# இலக்கியப்பகிர்வு

## “செம்பியன் செல்வன்”



“பார்வையாளர்கள் வேண்டாம் பங்காளிப்போரே வேண்டும் என்ற எழுச்சியொலி மரணத்துள்ளும், நெருப்பினுள்ளும் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழீழ மண்ணின் இன்றைய ஜீவநாதமாக எழுந்து கொண்டிருக்கிறது. இவ்வேளையில் ஈழத்து எழுத்தாளரினதும், பத்திரிகைத் துறையினரினதும் பங்கும், பணியும் என்ன என்ற கேள்வியும் அதற்கான விடைகளும், சுயவிமர்சனங்களும், சமூக விமர்சனங்களுக்குமாளாகிக் கொண்டிருக்கின்றன”

“நம் தமிழ் எழுத்தாளர்கள் எல்லாம் எங்கே? அமைதியான (!) காலங்களில் மாக்ஸியச் சிந்தனைகளை மக்கள் முன்வைத்து விழிப்பூட்டியும் உணர்வூட்டியும் கொண்டிருந்தவர்கள் எங்கே போய் தலைமறைவாகிவிட்டார்கள்? போராட்டத்திற்குத் தயாராகின்றார்களா? அல்லது ‘உடோப்பியா’ கற்பனா சோசலிசக் கனவுகளைக்கண்டு ‘மெய்மறந்து’ கிடந்தவர்கள். போராட்டகாலம் வந்த போது-அவர்கள் எழுத்துக்கள் யாவும் என்னவாயின, எங்கே சென்றோடின. வாய்புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்பதுபோல் மாக்ஸிசத் தத்துவங்களினடியாக ‘யதார்த்தப் படைப்புகள்’ பலவற்றை-கதை, கவிதை, கட்டுரை படைத்து ‘யாவும் கற்பனையே’ என முடித்துத் தம் மானிட நேசிப்பினை விளம்பரம் செய்து ‘இலக்கிய அந்தஸ்து’வை இலகுவாகத் தேடிக் கொண்டவர்கள். எழுதிய பிரச்சினையே ‘உயிரும் உடலுமாக’ வந்த போது எழுதுகோல்களைத் தூரவைத் துவிட்டார்”

“எரியும் பிரச்சினையிலிருந்து எவரும் தப்பிவிடமுடியாது. நிச்சயமாக பேனா பிடித்தவர்கள் தப்பிவிடமுடியாது. இவர்களின் அறிவும், ஆற்றலும் நிச்சயமாக அமைதியை, தீர்வை வழங்க உறுதுணையாக அமையும். கடமையும், உற்சாகம் குன்றாத உழைப்பும், பிரச்சினைக்கான தீர்ப்பு வழங்கும் வழிகாட்டலும் அறிவுபூர்வமான அணுகல்களைப் பொறுப்புவாய்ந்த இடம் நோக்கி உரத்த குரலில் கூறும் துணிச்சலும் தேவைப்படும் கட்டத்தில் மக்கள் இருக்கிறார்கள். எழுத்தாளர்கள் புதுப்பலம் பெற வேண்டும். உலக அபிப்பிராயத்தைத் திரட்ட எழுத்தாளர்கள் பாடுபடவேண்டும்”

“இலக்கியம் என்பது போராட்ட வாழ்க்கைகளினூடாக அவற்றைத் தழுவி வருவனவே. வாழும் கால சமூக அசைவினை புலப்படுத்துவனவாகவும் பலப்படுத்துவனவாகவுமிருக்கவேண்டும். எழுத்தாளன் மக்களை அநீதிக்கு எதிரான புரட்சிக்கு அழைத்துச்செல்லவேண்டும். அதற்கான வழிமுறைகளையும் தேவையான ஆயுதங்களையும் வழங்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக போராளியாகிய மக்களுடன் இணைந்து தோளோடுதோள் பொருந்தப் போராடவேண்டும்.

எழுத்திலும்; பேச்சிலும் இருக்கின்ற தைரியம் செயலிலும் இருக்கவேண்டும். இத்தகைய மனவுணர்வு கொண்ட கலைஞனின் எழுத்தில்தான் உண்மையொலி துலங்கும். வாழ்வின் அடிநாதமாக கலை இலக்கியங்கள் இருக்கவேண்டுமென்றால் இன்றைய வாழ்க்கை முறையைப் புறக்கணித்து எந்த இலக்கியமும் எழுதமுடியாது.

‘நீங்கள் வரும்போது உங்கள் கையில் பைபிள் இருந்தது. போகும்போது உங்களிடம் எங்கள் செல்வமும் எங்கள் கையில் பைபிளும் இருக்கின்றன’ என்ற ஆபிரிக்க கவிதை ஒன்றின் வரிகள் எப்படி அவர்களின் இருண்ட சோக மயமான சூறையாடலை இன்றும் புலப்படுத்துகின்றதோ, அது போன்று நம் ஈழ கறுப்பு இலக்கியத்தின் வரிகள், சாட்சிகள் நிகழ்கால வாழ்விற்கு உற்சாகமூட்டும். எதிர்கால வாரிசுகளுக்கு முந்தையர் போராட்ட சான்றாக அமையும்”

அண்மையில் மறைந்த செம்பியன் செல்வன் அவர்கள் ஆசிரியராக இருந்த அமிர்தகங்கையின் இரண்டாவது இதழின் (மாசி 1986) ஆசிரியர் கருத்தின் ஒரு பகுதியாகும்.

கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக எங்கள் இலக்கிய உலகில் தனித்துவமாக விளங்கிய செம்பியன் செல்வன் அவர்களை அறியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. கருத்து வேறுபாடுகளைக் கொண்டவர்களையும் பழகும் விதத்தினால் ஈர்த்துக்கொள்ளும் மென்மையான சுபாவம் கொண்டவர்.

எங்கள் தலைமுறை இலக்கிய உலகில் பிரவேசித்தபோது எங்களுக்கு நேரடியான மூத்த படைப்பாளிகளான செம்பியன் செல்வன் போன்றவர்களே இருந்தார்கள். ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் உருவாகிவரும் புதிய படைப்பாளிகளை கருவறுக்கும் ஒரு வகைச சூழலில் புதியவர்களை ஊக்குவித்தவர்கள். செங்கை ஆழியான், செம்பியன் செல்வன் போன்றவர்கள். இளைய தலைமுறையினரை ஊக்குவித்தவர்களில் முதன்மையானவர்கள் என்பதை அனுபவபூர்வமாகக் கண்டுள்ளேன்.

எனக்கு அடுத்த கட்டத்தில் இலக்கிய உலகில் பிரவேசித்த எனது சகோதரன் சி.கதிர்காமநாதன் அவர்களின் சிறுகதைத் தொகுப்புக்கான சிறுகதைத் தெரிவுகளுக்கு ஆக்கபூர்வமான உதவிகளை செய்தவர் செம்பியன் செல்வன் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

இவ்வாறான அவரது குணாம்சம் காரணமாக நாங்கள் எழுதத்தொடங்கிய காலத்தில் இருந்து செம்பியன் செல்வன் அவர்களுடன் உறவும், நெருக்கமும் அதிகமாக இருந்தது. அது பல பயனுள்ள கருத்துப்பகிர்வுகளுக்கு உதவியது.

தமிழீழ விடுதலைப்போராட்ட எழுச்சியின் பின்னர் 1984களில் விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட யாழ்.கலாச்சாரக்குழு- தமிழர் கலாச்சார அவை. விடுதலைப்புலிகளின்

இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன

கலைபண்பாட்டுக்கழகம் என்ற வளர்ச்சியின் இணைப்பில் ஒரு கட்டத்தில் செம்பியன் செல்வனும் இணைந்து கொண்டார்.

கலை பண்பாட்டுக்கழகம், நிதர்சனம் நிறுவனம், புலிகளின் குரல் என சகல கலை இலக்கியச் செயற்பாடுகளிலும் அவர் பங்கு கொண்டவர்- கருத்துரைகள்- பயிற்சிப்பட்டறைகள்-விமர்சனங்கள் என அவர் தன்னாலான பங்களிப்பாகச் செய்தார்.

அதிலும் குறிப்பாக பல படைப்பாளிகள் விடுதலைப் போராட்டச் செயற்பாடுகளில் இணைய பின்தங்கிய காலத்தில் செம்பியன் துணிந்து முன் நின்றார்.


கலை பண்பாட்டுக்கழகம், புலிகளின் குரல் போன்ற நிறுவனங்கள் நடத்திய பல்வேறு இலக்கியப் போட்டிகளில் நடுவராக அவர் பணி புரிந்தார். அவ்வேளையில் அவரோடு இணைந்து பணிபுரிவது சிறப்பான அனுபவமாகும்.

சிறுகதை, நாவல், குறுங்கதை, கட்டுரை, நாடகம், சினிமா எனப் பல்வேறு பட்ட தளங்களில் தலை நிமிர்ந்த படைப்பாளியாக இருந்த செம்பியன் செல்வன் அவர்கள் சிறப்பான சிறுகதைகளால் தனித்துவம் பெற்றவர். தனித்துவமான ஓர் இலக்கியச் செல்நெறியைத் தனக்கென அமைத்துக்கொண்டவர் என்று சிறப்பித்துக் கூறப்பட்டவர்.

இலக்கியம் என்பது ஒரு கலை சார்ந்த சமூகச்சீர்திருத்தமாகும். கலை சமூகமாற்றத்தை உருவாக்கும். சமூகமாற்றம் கலை வடிவங்களை மாற்றி அமைக்கும் என எழுத்துக் காலத்தை உணர்த்தி நிற்கவேண்டும் என்றவர் அவர்.

கலைச்செல்வி நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரிசினை இதயக்குமுறல் என்ற அவரது சிறுகதை பெற்றது. அதன்பின் செம்பியன் செல்வன் ஈழத்தின் சிறுகதையாளர்களில் ஒருவராக அடையாளம் காணப்பட்டார்.

“ஈழத்துச் சிறுகதை இலக்கியத்திற்கு 1960-1983 காலகட்டத்தில் அவர் அளித்த முதற்கட்டப்பங்களிப்பு அதிகம். யதார்த்தபூர்வமான மண்ணோடிணைந்த தமிழ்த்



தேசியத்தை நேசித்த மக்களிலக்கிய படைப்புக்கள் அவை” என ஈழத்துச் சிறுகதை வரலாறு நூலில் செங்கை ஆழியான் குறிப்பிடுகின்றார். (விமர்சகர் ஒருவரின் கருத்தாக)

படைப்பாளிகள் சமூகத்திற்கு என்ன செய்துள்ளார்கள் என்றால் அது அவர்களால் படைக்கப்பட்ட கலைவடிவங்களால் சமூகத்திற்கு என்ன சொல்லியுள்ளார்கள் என்பதே முக்கியம். அவ்வாறான படைப்பாளிகளே ஈழத்து கலைஇலக்கிய உலகத்திற்குத் தேவை. இவ்வாறானவர்களின் உழைப்பே கலை இலக்கிய வளர்ச்சிக்கு உரமூட்டுமென அண்மையில் வெள்ளிநாதத்திற்கு வழங்கிய பேட்டியில் செம்பியன் செல்வன் அவர்கள் தெரிவித்திருப்பது புதியவர்களுக்கு வேண்டிய அவசியமான கருத்துரையாகும்.

“தமிழ்த் தேசியத்தை தமிழீழ விடு[illegible]லைப்போராட்டத்தை உள்[illegible]மாக நேசித்த ஒரு முன்னணிப் [illegible]டப்பாளியை நாங்கள் இழந்துள்ளோம்.

விஞ்ஞானப் பட்டதாரியான அவர் ஒரு கல்வி சார் விற்பன்னராக அந்தத்தளத்திலும் பல்வேறுபட்ட சாதனைகளைச் செய்தவர்.

ஆனால் விடுதலையை நேசிக்கும் ஒரு படைப்பாளியாக அவர் இருந்தபடியால் அவரது கல்விசார் நடவடிக்கைகளும் மண் விடுதலையோடு தொடர்புபட்டதாக அமைந்திருந்தது.

அவ்வாறான உணர்வு இல்லாத கல்விசார் நிபுணர்கள் பலர் எம்மத்தியில் உள்ளனர். அந்த வகையிலும் செம்பியன் செல்வன் அவர்களின் இழப்பு பாரதூரமானது தான்.

---

(17ஆம் பக்கம் தொடர்ச்சி)

‘உலகத்தில இருக்கிற எல்லா மக்களின்ரை வெளி யுருவமும் ஒரேமாதிரி இருக்கிறேல்லை. அவையவையள் வாழிற சூழ்நிலையளுக்கு ஏற்றமாதிரி அவையின்ரை உடலமைப்பும் இருக்கும். சுனாமித்தாத்தா வெக்கையான பிரதேசத்தில இருந்து வாறார். அவர் சார்ந்த தமிழ் இனம் கறுப்புத்தோலைக் கொண்டதொரு இனம்...’, எண்டு விளங்கப்படுத்திக் கொண்டே போனா. என்ரை பேரன் அங்கை பிறந்தவன், பிஞ்சுத்தோல் எண்டதால கருமை குறைஞ்சிருக்கிறதாவும் சொன்னா. அவாவின்ரை விளக்கத்தில எதுவுமே தாழ்த்தியோ, உயர்த்தியோ இருக்கேல்லை. எனக்கு என்னை நினைக்க வெட்கமாய் கிடந்திச்சிது. கரிப்பானை கரிச்சட்டியைப் பார்த்துக் குறை சொல்லிற கணக்கில எங்களின்ரை இயல்பான வெளித் தோற்றத்தை ஏற்றுக்கொள்ளிற பக்குவம் இல்லாமல், சும்மா ஆளுக்காள் உசத்தியாய் நினைச்சு விசர்க்கதையெல்லே கதைச்சுக்கொண்டு இருக்கிறம். எங்கட சினிமாக்கதை தொடக்கம் சீதனப் பேச்சு வரைக்கும் தென்னாபிரிக்காவில ஒருகாலத்தில இருந்து வந்த நிறவாதம் மாதிரி ஒண்டுக்கெல்லே ஆதரவு கொடுத்துக்கொண்டுவாறம். சே! வெட்கமாய் கிடக்கிது, நினைச்சுப்பார்க்க!

மற்றது பிள்ளையள் அண்டைக்கு நான் அந்த வகுப்புக்குப் போனநேரம் யேர்மன் ஆசிரியர்மாரோட கதைச்சதில நாட்டைப் பற்றியும் கன விசயங்களை அறிஞ்சுகொள்ளக் கூடியதாய் இருந்திச்சிது.


2ஆம் உலகயுத்தம் முடிவுக்கு வந்தநேரம் சோவியத், பிரித்தானியா, பிரான்ஸ், அமெரிக்கா எண்டு எல்லாரும் சேர்ந்து நொருக்கித்தள்ளி சாம்பலாய்க் கிடந்த நாடுதான் இண்டைக்கு உப்பிடி வளர்ந்திருக்கு. அதுவும் திரும்ப ஒருக்கால் அது பலமடைஞ்சுவிடக்கூடாதெண்டு உள்ள தொழிற்சாலையள் எல்லாத்தையும் எதிரிநாடுகள் குண்டு போட்டழிச்ச காலகட்டம். அப்போதைய அமெரிக்க சனாதிபதி றூஸ்.:.பெல்ற் ஆட்சியில நிதியமைச்சராய் இருந்த ஹென்றி மோர்கன்தௌ, யேர்மனியை விவசாயத்தை மட்டுமே தொழிலாய் கொண்டதொரு நாடாய் மாத்தோணும் எண்டு, ‘யேர்மனிதான் எங்கள் தலையாய பிரச்சினை’ எண்ட தன்ரை புத்தகத்தில தெரிவிச்சிருக்கிறார். இருந்தும் மிஞ்சி இருந்த யேர்மனிய மக்களின்ரை முயற்சியால, பத்துவருசத்திலையே யுத்தத்துக்கு முன்னைய நிலைக்கு வந்திட்டினமாம். சாப்பிடக்கூட தங்களுக்கு [illegible]யான கஷ்டமாம். தலைமயிர் வெட்ட சலூனுக்கு காசு குடுக்க வசதியி[illegible]மல், தலையில சட்டியைக் கவிட்டு வைச்சு பாட்டி தன்ரை தகப்பனுக்கு மயிர்வெட்டின கதையை ஒரு ஆசிரியர் சொன்னார். நாட்டைத் திரும்பக் கட்டியெழுப்பிறதுக்கான கல்விச்சமூகத்தை உருவாக்கிறதிலையும் சரியான நெருக்கடியைச் சந்திச்சவையாம். போர் மற்ற இடப்பெயர்வுகளால பெருமளவில ஆசிரியர்மாரை இழந்து நிண்டதொரு சந்தர்ப்பத்தில, ஆசிரியராய் இருந்து ஓய்வு பெற்ற ஆக்கள், ஆசிரியப்பயிற்சி இல்லாட்டியும் ஓரளவுக்கு அந்தத் திறமை இருந்தாக்கள் எண்டு எல்லாரையும் ஒன்றிணைச்சு மாணவர் சமூகத்தை உருவாக்கித்தானாம் இந்த நிலைமையை எட்டினவை. என்ரை மனம் சரியாய் கனத்திச்சிது. எங்கட நாட்டிலையும் எத்தினை பள்ளிக்கூடங்களில ஒண்டிரண்டு ஆசிரியர்மார் இருந்துகொண்டு பெரியதொரு மாணவர் கூட்டத்தைச் சமாளிக்கினம். முல்லைத்தீவு வீதியில எனக்குத் தெரிஞ்சதொரு பள்ளிக்கூடத்தில 100 பேருக்குக் குறையாத இரண்டு வகுப்பை2 ரீச்சர்மார் பார்க்கினம். ஒரு வகுப்பெண்டால் 20 பேருக்கு மேல இருக்கக்கூடாது. அப்பதான் படிப்பிக்கிற ஆட்களும் விருப்பமாய் கவனமெடுத்துப் படிப்பிக்கலாம், பிள்ளையளும் விருப்பமாய் அதிகளவு பயன் பெறலாம். வெள்ளை உடுப் புகளைப் போட்டுக்கொண்டு அதுகள் எத்தினை கனவுகளோட பள்ளிக்கூடம் போகுதுகள். அதுக்கான பயனை அந்தப் பிள்ளையளும், எங்கட தேசமும் பெற்றுக்கொள்ளோணும் எல்லோ! யுத்தநிறுத்த(?) காலத்தில கன பள்ளிக் கூடத்துக்கு புதுக்கட்டட வசதியள் கிடைக்கிற[illegible]த அறியக்கூடியதாய் இருக் கிது, சந்தோசம். ஆனாலும் கட்டடம் மட்டுமே கல்வித்தளம் இல்லை. போதிய ஆசிரியர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படோணும். அரசாங்கத்தை நம்பி ஆவெண்டு கொண்டிருந்து பயனில்லை. நாலு பாடத்தைச் சொல்லிக் கொடுக்கக் கூடிய பென்சனியர்மார் (நான் உட்பட), குடும்பவேலையோட ஒதுங்கியிருக்கிற குடும்பப்பெண்கள் எண்டு எல்லாரும் தாங்களாகவே முன்வந்து பகுதிநேர ஆசிரியராய் பணிசெய்ய முன்வந்தால் எவ்வளவு நல்லது. சுமை குறைஞ்ச நிலையில ஒவ்வொரு பிள்ளையின்ரை பலத்தையும், பலவீனத்தையும் பிரத்தியேகமாக இனங்கண்டு ஊக்குவிக்கலாமெல்லோ ! அப்பிடிச் செய்யிறதால ஏற்படக்கூடிய சமூக முன்னேற்றத்தை நினைச்சுப் பார்க்கவே மெய்சிலிர்க்கிது. அதேநேரம் தாங்களும் செய்யாமல், மற்ற வனையும் மறிக்கிற வேறசோலி இல்லாததுகள் ‘இலவச வாத்திமார்’ எண்டு விசர்க்கதை கதைச்சால், பிடிச்சு பொதுவேலை செய்ய விடோணும் (இஞ்சை சில சில்லறைக்குற்றங்களுக்கும், குற்றவாளி 18 வயசுக்குக் கீழ இருந்தாலும் குற்றத்தைப் பொறுத்து குறிப்பிட்ட மணித்தியாலம் வீதியள் சுத்தமாக்கிறது, வைத்தியசாலை சுத்தமாக்கிறது எண்டு பொதுவேலை செய்யக் காவல்துறை விட்டிடும்).

தயவுசெய்து ஒருக்கால் சொன்னதை எல்லாரும் யோசிச்சுப் பாருங்கோ ! முக்கியமாய் மனசுக்கிளை கிடந்தொரு விசயம் நெருக்கிது. சுனாமிக்கு முழுஉலகமும் 2 லட்சம் பேரையும், நாங்கள் மட்டும் 26 500 பேருக்குக் குறையாமல் குடுத்திருக்கிறம். ஆனாலும், முல்லைத்தீவில சுனாமியில அருந்தப்பு தப்பி வந்ததொரு பிள்ளை பள்ளிக்கூடத்தில ரீச்சர் சுனாமியைப் பற்றி வசனம் எழுதச்சொல்லி விட, என்ன எழுதினதெண்டு நினைக்கிறீங்கள்? ‘நானும், அப்பாவும் சுனாமி பார்க்கச் சென்றிருந்தோம். சுனாமி மிகவும் அழகாகக் காட்சியளித்தது.’ கூப்பிட்டு விசாரிச்சதில சுனாமி எண்டால் ‘கடற்கரை’ எண்டு நினைச்சுக்கொண்டு இருந்திருக்குது அந்தப் பிள்ளை. இந்த விசயம் மட்டுமில்லை, எவ்வளவை இழந்திருந்தும், விலை கொடுத்தும் அந்த இழப்பின்ரை விலை மதிப்பை உணரத்தலைப்படாமல் நாங்கள் இருக்கலாமோ ? எங்கட வாழ்க்கையைப் பாதிக்கிற ஒவ்வொண்டையும் பற்றித் தெளிவடையிறதுக்கு ஆளுமைக்கல்வி அத்தியாவசியமானது. வாறகிழமை சந்திப்பம், சூஸ்! (இது யேர்மன் மொழியில விடைபெறுதலைக் குறிக்கும்).




# முன்னேறும் சானியா மிர்சா

கிராண்டஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டி பரிசில் நடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவில் 2 ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் 11-ஆம் நிலை வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா) கொலம்பியா வீராங்கனை பாபிலா சுலுகாவை எதிர்கொண்டார்.



இதில் வீனஸ் வில்லியம்ஸ் 6-3, 3-6, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று 3- ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

எலீனா டெமெண்டிவா (ரஷ்யா), கிம் கிலிஸ்டர்ஸ் (பெல்ஜியம்), டானிலா ஹன்ட்சோவா (ரஷ்யா), மேரி பியர்ஸ் (பிரான்ஸ்) ஆகியோர் 2ஆவது சுற்றில் வெற்றி பெற்றனர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் டேவிட் நல்பாண்டியன் (அர்ஜென்டினா) 6-3, 6-2, 6-1 என்ற நேர் செட்டில் தாமஸ் பெட்ரிச்சை தோற்கடித்து 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

7 ஆம் நிலை வீரர் டிம் ஹென்மன் (இங்கிலாந்து) லூயிஸ் ஹர்டாவிடம் தோல்வி கண்டார். மற்றும் செபாஸ்டியன் குரோஜென், பெலிக்மஸ் மான்டிலா, பெர்னாண்டோ விசென்ட், மரியோ அன்சிக், ராடெக் ஸ்டீ பெங் ஆகியோர் 2ஆவது சுற்றில் வெற்றி பெற்றனர்.

பெண்கள் இரட்டையர் முதல் சுற்று ஆட்டத்தில் சானியா மிர்சா (இந்தியா)- அன்னா சக்வெடா (ரஷ்யா) ஜோடி கிறிஸ்டினா (புயர்டோரிகோ)- நானா மியாஜி (ஜப்பான்) ஜோடியுடன் மோதியது. இதில் சானியா மிர்சா ஜோடி 6-2, 6-3 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறியது.




துருக்கி இஸ்தான் புல்லில் லிவர்பூல்-ஏசிமிலன் அணிகளுக்கிடையே உய்பா சம்பியன்ஸ் லீக் கால்பந்து இறுதிப் போட்டி நடந்தது. போட்டிக்கு முன்பாக தன்னை செவ்விகாணும் முன்னால் சகவீரர் சல்வடேலர் பக்னியின் கேள்விக்கு பந்தை காலில் வைத்த வாறே பதில் அளிக்கிறார். ஆர்ஜன்டினாவின் கால்பந்து ஜாம்பவான் டீகோ மரடோனா.



இங்கிலாந்து பங்களாதேஷ் அணிகளுக்கிடையே முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் இன்று துவங்குகிறது. லண்டன் லார்ட்ஸ மைதானத்தில் இங்கிலாந்தின் ஹெகார்டு பந்து வீச்சு பயிற்சியில் ஈடுபட்டதையும் துடுப்பாட்டம் தொடர்பான பயிற்சியினை வழங்கும் கப்டன் மைக்கல் வோனையும் அதனை பார்வையிடும் பயிற்சியாளர் டங்கன் பிளட்கர், அன்ருஸ்ரோஸ் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# கவுண்டிப் போட்டிகளில் கங்குலி...?



கங்குலி கவுண்டி போட்டிகளில் விளையாடுவது தொடர்பாக எதுவும் தெரியாது என இந்திய கிரிக்கெட் சபை நழுவியுள்ளது.

இந்திய அணி வரும் ஆகஸ்டில் தான் சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்கிறது. இந்த இடைவெளியில் இங்கிலாந்தின் கிளாமோர் கன் கவுண்டி அணிக்காக அணித் தலைவர் கங்குலி விளையாடப்போவதாக செய்திகள் வெளியாகின. 6ஒருநாள் போட்டிகளில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டுள்ள இவர், இழந்த நிலையை மீட்கும் பொருட்டு இரண்டு மாதங்களுக்கு கவுண்டியில் விளையாடுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

"ஜுலை வரை அணியில் நீடிக்க வாய்ப்புள்ளது. எழுத்துப் பூர்வமாக விரைவில் கங்குலி உறுதிசெய்வார். நீண்டகால அடிப்படையிலும் விளையாட வாய்ப்புள்ளது'' என்று கிளாமோர்கன் அணியில் தலைமை நிர்வாகி மைக்பாட்கின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து இந்திய கிரிக்கெட் சபை தலைவர் ரன்பீர் சிங் மகேந்திரா கூறுகையில், "கவுண்டியில் விளையாடுவது தொடர்பாக கங்குலியிடம் இருந்து எந்த விண்ணப்பமும் வரவில்லை. சம்பந்தப்பட்ட கிளாமோர்கன் அணியில் இருந்தும் யாரும் அணுகவில்லை. இந்த விசயம் பற்றி எதுவும் தெரியாது'' என்றிருக்கின்றார்.

# வசிம் அக்ரத்துக்கு கொலை அச்சுறுத்தல்?



கடந்த ஆண்டு இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடியது. அப்போது அங்கு பாகிஸ்தான் முன்னாள் முன்னணி வீரரான வசிம் அக்ரம் தொலைக்காட்சி வர்ணனையாளராக சென்றிருந்தார்.

அப்போது இந்திய பந்து வீச்சாளர் இர்பான் பதான் வசிம் அக்ரமை சந்தித்து பந்து வீச்சு தொடர்பாக ஆலோசனை கேட்டார். அவரும் பதானுக்கு சொல்லிக் கொடுத்தார்.

ஆனால் இதற்கு பாகிஸ்தானில் கடும் எதிர்ப்பு கிளம்பியது பாகிஸ்தான் வீரர் இந்திய வீரருக்கு பயிற்சி அளிப்பதா? என்று கேட்டு கடும் கண்டனத்தை வெளிப்படுத்தினர். இதுபற்றி கராச்சியில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட வசிம் அக்ரமிடம் நிருபர்கள் பேட்டி கண்டனர்.

அப்போது அவர் இர்பான் பதான் தானாக முன்வந்து என்னை சந்தித்து உதவி கேட்டார். சில நுணுக்கங்களை கேட்டார். நான் சொல்லிக்கொடுத்தேன் அதே நேரத்தில் பாகிஸ்தானின் சமி,அக்தர் போன்ற வீரர்கள் இதுவரை என் உதவியை நாடியது இல்லை.

தற்போது இங்கிலாந்து கிளப்பில் விளையாடும் பதான் சமீபத்தில் கூட என்னிடம் வந்து இங்கிலாந்து மைதான சூழ்நிலைகள் குறித்தும் அவர் சமீப காலமாக சரியாக விளையாடாதது குறித்தும் ஆலோசனை கேட்டார்.

ஆனால் அவருக்கு உதவியதற்கு பாகிஸ்தானில் கடும் எதிர்ப்பு கிளம்பியது.எனவே இனி இந்தியர் யாருக்கும் பயிற்சி அளிக்கமாட்டேன். மீறி பயிற்சி அளித்தால் பாகிஸ்தான் மக்கள் என்னை கொன்று விடுவார்கள்.

எனக்கு வருங்காலத்தில் கிரிக்கெட் பயிற்சியாளர் ஆக வேண்டும் என்ற விரும்பம் எதுவும் கிடையாது. ஏனென்றால் ஜோன்ரைட், பாப் ஊல்மர், தேவ்வாட் மோர் போன்று எனக்கு வீரர்களை ஒருங்கிணைக்கும் திறன் கிடையாது.

அப்படியே பயிற்சியாளர் வாய்ப்பு வந்தாலும் பாகிஸ்தான வீரர்களுக்குத் தான் பயிற்சியாளராக இருப்பேனே தவிர இந்தியர்களுக்கு அல்ல. அதே நேரத்தில் ஒரு நாட்டு வீரர் மற்ற நாட்டு வீரரிடம் ஆலோசனை கேட்பது, பயிற்சி பெறுவது வழக்கமான ஒன்றுதான். சில நேரங்களில் கிரிக்கெட் சபை நியமிக்கும் பயிற்சியாளர் உடற்பயிற்சி நிபுணர் போன்றவர்கள் சிறப்பாக செயல்படுவது இல்லை.

அந்த நேரத்தில் மற்றவர்கள் உதவியை நாடுவது உண்டு. 2001 இல் நியூசிலாந்தில் பாகிஸ்தான் சுற்றுப் பயணம் செய்தபோது நியமிக்கப்பட்ட உடற்பயிற்சி நிபுணர் பொருத்தமான ஆளாக இல்லை. எனவே பல வீரர்கள் வேறு ஒருவரின் உதவியை நாடினோம். இவ்வாறு அவர் கூறினார்.



# பொருண்மிய வாசல்

விவசாயத்தில் அதிக விளைச்சலைப்பெற்றுக்கொள்ளும் நோக்கில் இரசாயன உரங்களை பாவிப்பது நீண்டகால வழக்கமாக உள்ளது. அதி உச்ச விளைச்சலைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற பேராசை காரணமாக அளவுக்கு மிஞ்சிய உரப்பாவனையும் எங்களது விவசாயிகள் சிலரால் மேற்கொள்ளப்பட்டு வருகினறது.

பொதுவாகவே இரசாயன உரப்பாவனை எமது மண்வளத்தை பாதிப்பு

## எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

அடையச் செய்கின்றது என்றால் அளவுக்கு மிஞ்சிய பாவனை எவ்வாறான பாதிப்பினை உண்டாக்கும் என்பதை விவசாயிகள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இது தொடர்பாக இந்தப் பகுதியில் பலதடவை கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. எனினும் மீண்டும் மீண்டும் அளவுக்கு மிஞ்சிய உரப்பாவனை தொடர்பாகக் கருத்துக்களை முன் வைப்பது தேவையான காரணமாகிறது.

மண்வளத்தை, சூழல், நீர்வளத்தை கருத்திற் கொள்ளாது விளைச்சல் ஒன்றையே குறியாகக் கொண்டு இந்த உரப்பாவனை மேற்கொள்ளப்படுகிறது. உரப்பாவனையுடன் களை கொல்லிகள், பீடைநாசினிகள் எனத் தொடரும் இந்த செயற்கைச் சாதனங்கள் உடன் இருந்து கொல்லும் வியாதியைப் போல சூழலையும் இயற்கை வளங்களையும் நாசமாக்குகின்றன.

மண்ணின் இயல்புநிலை மாற்றம் அடைவதுடன் மண் நஞ்சாவதால் நீர் மாசடைவதும் பயிருக்கு துணைபுரியும் நுண் அங்கிகள் அழிந்து போவதும் எம் முன்னால் உள்ள பிரச்சினைகளாகும்.

நீர் மாசடைவதும் நுண் அங்கிகள் அழிவதும் சாதாரண விடயங்கள் அல்ல. இதன் மறுவழமாகப் பயிர் வளர்ச்சிக்கு துணையில்லாத களைகள், நுண் அங்கிகளின் உற்பத்தி அதிகரித்து மண்ணுக்கும், நீருக்கும் மோசமான பாதிப்பை ஏற்படுத்துகிறது.

நீண்ட கால நோக்கில் இவை நேரடியாக மண்ணையும், நீரையும் மாத்திரம் பாதிப்பதாக அமையாது. காரணம் இவற்றினால் பாதிக்கப்படப் போகின்றவர்கள் நாங்கள்தான்.

"கண்கெட்ட பிறகு சூரிய வணக்கம் " என்று எங்கள் மத்தியில் பொதுவாகக் கூறப்படும் ஒரு கருத்தாகும். இந்தக் கருத்து இதற்கும் பொருந்தும்.

ஏற்கனவே பல்வேறு தேவைகளுக்காக நாம் இறக்குமதிகளையே நம்பி இருக்கும் சூழல் நிலவுகிறது. இந்த நிலையை நாம் வளர்ச்சி பெறச் செய்ய வேண்டுமா? என சிந்திப்பது பொருத்தமாக இருக்கும்.

# எலுமிச்சையில் கூடிய பயன் பெற பராமரிப்பு முக்கியம்

வன்னிப் பிரதேசத்திலே மாங்குளம், அம்பகாமம், கொல்ல புளியம் குளம் ஆகிய இடங்களில் எலுமிச்சை உற்பத்தி செய்யப்படுவதைக் காணலாம். எனினும் அநேகமான வீடுகளில் காணப்படும் மரங்களில் எலுமிச்சையும் ஒன்றாகும். தங்களது சுய தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக சராசரி 2-4 தேசிமரங்கள் வீடுகளில் உண்டாக்கப்படுவது வழக்கம். பெருமளவில் எலுமிச்சைச் செய்கையில் ஈடுபடுவது குறைவு. இந்த எலுமிச்சையிலிருந்து கூடுதல் வருமானம் கிடைக்கிறதா என்றால் இல்லை.

இதற்குக் காரணம் ஏனைய பயிர்களைப் போல் பராமரிப்பு முறை சரியாக இல்லை என்பதே. இதனால் இவற்றில் இருந்து போதிய பயனைப் பெற முடியாமல் உள்ளது. விசுவமடுப்பகுதியில் ஒரு உற்பத்தியாளர் 3 ஏக்கரில் எலுமிச்சை நாட்டியுள்ளார். இங்கேயும் அதிக விளைச்சலைப் பெறவில்லை. இதற்குக் காரணம் முறையான பராமரிப்பின்மையே ஆகும்.

**பராமரிப்பு:-**

முக்கியமாக நீர்ப்பாசனம் அவசியமாகும். எலுமிச்சையின் வேர்கள் மரத்தின் அடியிலிருந்து பரந்து காணப்படும். மரத்தைச் சுற்றி நீர்பாய்ச்சும் பாத்திகளை அமைக்கும் போது அடிமரத்தில் இருந்து தோண்டி பாத்தி அமைக்கக் கூடாது. வேர்கள் மண்ணின் மேற்பரப்பிலேயே காணப்படுகின்றன . பாத்தியமைக்க மண்ணை வெட்டும்போது மரத்தின் வேர்கள் பாதிப்படையும்.

மரத்தைச் சுற்றி நீர்பாய்ச்சும் பாத்திகளை அமைக்கும்போது மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும். நீர் ஊற்றும்போது மரத்தின் அடிப்பகுதியில் அதிக நீரை ஊற்ற வேண்டாம். வேர்கள் பரந்துள்ள பகுதிக்கு நீர்ப்பாசனம் செய்யவும், சில விவசாயிகள் மரத்தின் அடிப்பகுதியில் மண் அணைத்து நீர்ப்பாசனம் செய்கின்றனர். இப்படிச் செய்வதால் காறை அழுகல் நோய் ஏற்படலாம். கோடை காலத்தில் 5-7 நாட்களுக்கொரு தடவை நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். ஏனைய பராமரிப்பு முறைகளைச் சரியாக மேற்கொண்டாலும் கோடை காலத்தில் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். இல்லையேல் போதிய பலனைப் பெறமுடியாது.

**பூக்கத்தூண்டுதல்:-**

அநேகமான எலுமிச்சை மரங்கள் நன்கு கிளைகள் பரவி வளர்ந்தும் அவை பூக்காமல் இருப்பதைக் காணலாம். இவ் வகை மரங்களுக்கு வரட்சியான காலத்தில் 3-4 கிழமைகளுக்கு நீர்ப்பாசனம் செய்வதை நிறுத்தி அதன் பின் நாளாந்தம் நீர்ப்பாசனம் செய்தால் அவை பூக்கும். அதாவது மரத்திற்கு அதிர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலம் அவற்றைப் பூக்கச் செய்யலாம். எனவேதான் சில மரங்கள் வரட்சியான காலத்தில் வாடி வருவதையும் பின் மழை பெய்யும் போது அவை பூப்பதையும் அவதானிக்கலாம்.

புதிய வளர்ச்சி அதிகமாகக் காணப்படும் மரங்களில் அடர்த்தியான கொப்புக்களையும் கத்தரித்து மரத்தின் மத்திய பகுதியில் போதியளவு காற்றோட்டம் இருக்கத்தக்கவாறும் சூரிய ஒளி நன்கு படக் கூடியதாகவும் வசதியேற்படுத்த வேண்டும். கிளைகள் பரவுவதற்கு வசதியாக அவற்றில் பச்சை உரிமட்டைகளைக் கட்டித் தொங்கவிடவேண்டும். இவற்றை செய்வதால் மரத்தில் காபன், நைதரசன் விகிதத்தில் மாற்றம் ஏற்பட்டு அவற்றில் பூக்கள் உருவாகும்.

எலுமிச்சை மரங்களிற்கு நுண்போசனைச் சத்துக்கள் அத்தியாவசியமானவை ஆகும். எனவே சிபாரிசு செய்யப்பட்ட இரசாயன, சேதன உரப்பசளைகளை இடுவதுடன் நுண் போசனைத் திரவப்பசளைகளை. இவைகளுக்கு விசுறுவதன் மூலம் சிறந்த பயனைப் பெறலாம்.

சேதனப்பசளைகளை மரத்திற்கு இட்டு மண்ணுடன் கலந்து விட வேண்டும். இவ்வாறு சேதனப் பசளைகளை இடும் போது வேர்கள் பாதிக்கப்படாமல் இருப்பது முக்கியமாகும்.

**வருடம் முழுவதும் எலுமிச்சம் பழங்கள் பெற்றுக் கொள்ள கையாள வேண்டிய நடைமுறைகள்.**

எலுமிச்சை பருவ காலத்திலேயே அதிகமாக பூத்துக் காய்க்கின்றது. அத்துடன் வரட்சியாலும் பாதிப்படையக் கூடியது. ஆனால் கொடி எலுமிச்சை வரட்சியைத் தாங்கி வளர்வதுடன் வருடம் முழுவதும் பூத்துக் காய்க்கும் இயல் புடையது. கொடி எலுமிச்சை ஒட்டுக் கட்டையில் எலுமிச்சை அரும்புகள் ஒட்டிய கன்றுகளைத் தெரிவு செய்து நாட்டினால் எல்லாப் போகத்திலும் தொடர்ந்து காய்களைப் பெறலாம். கொடி எலுமிச்சை, விளாத்தி போன்ற மரங்களில் எலுமிச்சை, தோடை போன்ற கிளைகளை ஒட்டுவதன் மூலம் பெறப்படுகின்ற கன்றுகளை விவசாயிகள் வாங்கி நட்டால் வருடம் முழுவதும் காய்களைப் பெற்றுக் கொள்ளலாம். இதே நேரம் குறைந்த நிலத்தில் கூடுதலான பயிர்களைச் செய்கை பண்ணலாம். அறுவடை செய்த பழங்களை பழுதுபடாமல் பாதுகாக்க.

1.ஈரமண்ணில் மூடிவைப்பதால் ஒரு மாத கால வரை பழுதடையாமல் சேமிக்கலாம்.

2. காற்றுப் புகாதவாறு பொலித்தீன் பைகளில் சீல் செய்து குளிர் சாதனப் பெட்டியில் நீண்டகாலம் வைத்தால் 3 மாத காலம் வரை சேமிக்கலாம்.

எனவே விவசாயிகளாகிய நீங்கள் ஒட்டு கன்று எலுமிச்சைகளைப் பெற்று உங்கள் தோட்டங்களில் நாட்டி அதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். எலுமிச்சம் பழங்களுக்கு சந்தையில் நல்ல கிராக்கி உண்டு.

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)


இருந்தும் அவர்கள் இங்குள்ள கட்டுப்பாடுகளுக்கு கட்டுப்படுகின்றனர். இதற்கு ஒரு காரணமாக அவர்களது பொருளாதார நிலைமைகளை கூறலாம். ஆனால் வசதியான குடும்பங்களை பணத்தின் மூலமும் செல்வாக்கினைப் பயன்படுத்தியும் தாங்கள் விரும்பிய நேரங்களில் விரும்பியபடி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

இவ்வாறான நிலைமைகள் எதிர்கால எமது இன, பொருளாதார, அரசியல் ரீதியான பல தாக்கங்களை ஏற்படுத்தப் போகின்றன. எதிர்கால நலன்களை கவனத்தில் எடுத்து வறிய குடும்பங்களைச்சேர்ந்தவர்களுக்கு குறிப்பிட்ட எண்ணிக்கையான பிள்ளைகளுக்கு மேலதிகமாக உள்ள பிள்ளைகளுக்கு மானியம் வழங்கலாம். உதாரணமாக ஒரு குடும்பத்தில் மூன்று பிள்ளைகளுக்கு மேல் இருக்குமாயின் மூன்றாவது பிள்ளையிலிருந்து மாதாந்தம் அவர்களது அடிப்படைச் செலவுகளுக்கு ஒரு குறிப்பிட்ட காலம் வரை மானியம் வழங்குவதன் மூலம் இவ்வாறான பிரச்சினைகளை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்ளலாம். அத்தோடு ஏனையவர்களுக்கு இது. தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவேண்டும் எனவே இதுபோன்ற பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கின்ற சந்தர்ப்பத்தில் எதிர் காலத்தில் ஏற்படப்போகின்ற பல பிரச்சினைகளை தவிர்க்கலாம். வெள்ளம் வரும் முன் அணைகட்டுவது நல்ல தல்லவா...?


(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இடத்தில் சுருக்கமாக இன்னுமொன்றையும் கவனத்தில் கொள்வது பொருத்தமானதாக அமையும். ஒவ்வொரு பிராந்தியத்திலும் அமெரிக்காவிற்கு ஒவ்வொரு செல்லப்பிள்ளை உண்டு (எ-டு: யப்பான், தென் கொரியா, சிங்கப்பூர், இஸ்ரேல், யேர்மனி. ஆபிரிக்காவின் ஸ்திரமற்ற சூழ்நிலை காரணமாக விதிவிலக்காக அங்கு சற்றே நிலை மாறுபடுகிறது). இடையிலே எங்கள் தென்னாசியப் பிராந்தியத்தில் மட்டும் ஒரு இடைவெளி தென்படுகிறதல்லவா ! பாகிஸ்தான் போன்ற இஸ்லாமிய அடிப்படைவாதம் நிலவும் நாடுகளை அமெரிக்கா மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பயன்படுத்திக்கொள்ளும். சவுதி அரேபியாவைச்சேர்ந்தவர்களே செப்.11 தாக்குதலில் அதிகமாகப் பங்குபற்றியிருந்தார்கள் என்னும் யதார்த்தமே இங்கு குறிப்பிடப்படுகிறது. யு.என்.பி அரசு கவிழ்க்கப்பட்ட போது ஆட்சி பீடம் ஏறிய சந்திரிகா அரசு (ஜேவிபி ஐத் தவிர்த்து நோக்கும் பட்சத்திலும் கூட) நம்பிக்கை வைத்து எதிலும் இறங்க முடியாத அளவிற்கு பச்சோந்தித்தனத்தை கடந்த காலங்களில் நிருபித்து வருகிறது. அப்படியான களிமண் குதிரையை நம்பி இறங்காத அமெரிக்கா ஒருபுறமும், அக் குதிரையில் நம்பிப் பந்தயம் கட்டிவிட்டு, கௌரவப்பிரச்சினை காரணமாக அதை மீளப்பெறாமல், கரையும் குதிரையைக் கட்டிப்பிடித்தவாறு இந்தியாவென மறுபுறமும்! இந்தியா இதுவரை தான் கடைப்பிடித்து வந்த வரட்டுத்தனமான வெளியுறவுக் கொள்கையிலிருந்து விடுபடுமா? அல்லது மிகவும் மோசமான பிராந்திய நெருக்கடிக்குத் தானே தன்னை இட்டுச்செல்லுமா? வெறுமனே சுனாமி நிவாரணம் குறித்தே ஒரு பொதுக்கட்டமைப்புக்குள் வரமுடியாது நிற்கும் சந்திரிகா அரசைத் தூக்கி விடுவதுபோல, உத்தேசப் பொதுக்கட்டமைப்புக்கு எதிரான தன் நிலைப்பாட்டை இந்தியா வெளிப்படுத்தியுள்ளது. பொறுத்துப் போகும் தமிழர் தரப்பு மேற்கு-நாடுகளுக்குச் சார்பான நிலைப்பாட்டை எடுக்க இந்தியாவின் இத்தகைய போக்கு சிலவேளை நிர்ப்பந்திக்கக்கூடும். அவ்வாறான சந்தர்ப்பம் ஏற்பட்ட பின்னர் இந்தியாவின் பிராந்தியக்கனவுகள் வெறும் கனவுகளாகவே இருக்கும் என்பது வெளிப்படை!

நமக்கு வசதியான இக்கால கட்டத்தில் விழிப்புடன் அவதானித்திருப்போம்! சார்ள்ஸ் டார்வின் இன் பரிணாம வளர்ச்சிக் கொள்கையின்படி 'தற்காத்துக் கொள்ளும் இனமே தப்பும் ; தலைநிமிரும்'. மிருகங்களுக்கு மட்டுமல்ல, மனிதர்களுக்கும் அது பொருந்தும்!



# குறுக்கீடுகள்..!



மனித மேம்பாட்டிற்கும் ஒருமைப்பாட்டிற்கும், அதன் சமூக வாழ்வியலுக்கும் உள நலம் இன்றியமையாத ஒன்று என்பதுடன் உள நலத்தின் ஆரோக்கியமான முன்ன கர்வ களே உடல் நலத்தின் அடிப்படையும், உறுதியானதுமான ஒன்று திரண்ட வலுவாகும்.

இத்தகைய ஒன்று கூட்டிய வலுவே சிறந்த உடல்வலுவையும் அதற்கான மிடுக்கான அழகிய தோற்றத்தினையும் மனிதனுக்குக் கொடுக்கும்போது அது அவன் வாழ்வில் புறக் கவர்ச்சியினை உருவாக்குகின்றது.

இத்தகைய புறக்கவர்ச்சி கொண்ட ஒருவனுக்கு அகக்கவர்ச்சியினைக் கொடுக்கக்கூடிய அன்புள்ளம் கொண்ட புரிந்துணர்வுமிக்க, மனிதநேயம் நிறைந்த மனநிலை தேவைப்படுகின்றது.

ஆனால் அகம்-புறம் என்ற இரு கவர்ச்சிகளும் ஒருவரிடம் இணைந்திருப்பது அரிதாகவே காணப்படுவதோடு, இவ்விரு பண்புகளும் ஒன்றுடன் ஒன்று இணையும்போது, அல்லது ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிநிலை அடையும்போது குறுக்கீடுகள் தோன்றுகின்றன.

இலங்கையைப் பொறுத்தமட்டில் அதன் வாழ்வியல் சூழலைப் பொறுத்தமட்டில் உடல், உளவளப் பயன்பாட்டில் அதன் ஆரோக்கியத்தில் பல்வேறு குறுக்கீடுகளும், அதில் காணப்படக்கூடிய இயல்பு ஒவ்வாமையுமே அதிகமாகத் தென்படுகின்றன. இதற்கு பல்வேறு காரணங்கள் பின்புலமாகத் தெரிந்தபோதும் பின்வருவனவற்றை முதன்மைப்படுத்தலாம்.

I. நாட்டில் தோன்றிய தொடர்ச்சியான யுத்த நடவடிக்கைகளும் அமைதி இன்மையும்.

II. நாட்டில் உள்ள பொருளாதார கோட்பாடுகளும் அதன் அரசியல் தளமாற்றமும்.

III.நாட்டில் இனங்காணப்பட்டுள்ள பொருத்தமற்ற கல்விக் கொள்கையும் நாட்டுப்பற்றின்மையும்.

IV.சுனாமிப் பேரழிவும் இயற்கை அனர்த்தங்களும்.

V.சிறந்த உளநிலை (அகநிலை) ஆய்வுகளும் அதன் தீர்வுகளும் உறுதிப்படுத்தப்படாமை.

இத்தகைய நிலையிலும் சிறந்த உளவலுக்கொண்ட சமூகம் ஒன்று உருப்பெற பல்வேறு காரணிகள் பக்கபலமாக இருந்தபோதும் அண்மைக் காலத்தில் சுனாமியால் ஏற்பட்ட இயற்கைப் பேரழிவே எல்லோரையும் ஒட்டுமொத்தமாக உளநலம் பற்றிச் சிந்திக்கத் தூண்டியுள்ளது போல் தெரிகின்றது.

இயற்கை (சுனாமி) அழிவுகளால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் கரையோரவாழ் மக்களாக இருப்பதனால் உளநலப் பணிகளும் அவர்களை மையமாகவைத்தே நகர்த்தப்படுகின்றன. ஆனால் இப்பாதிப்பானது இலங்கை வாழ் மக்கள் அனைவரையும் உளநிலை சார்பாகப் பாதித்துள்ளது என்பதே உண்மையானதாகும்.

இதனால் உளநல பணிகள் நாட்டின் கரையோரப்பகுதிகளிலிருந்து படிப்படியாக ஏனைய பகுதிகள் நோக்கி நகர்த்தப்படுவதே சிறந்ததும் பொருத்தமானதுமான முடிவாகும். இதனால்தான் உளநலம் என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்கு மட்டும் உரியதல்ல. அவை தொடர்ச்சியாக நீட்சியடைந்து சமூகங்களிடையே பரவல் அடைய வேண்டியதேவை ஒன்று ஏற்பட்டுள்ளது.

இத்தகைய பணிகளின் போது பல்வேறு குறுக்கீடுகளைச் சந்திக்க வேண்டிய இடர்பாடுகளும் உண்டு. அத்தோடு மனித வாழ்வியலில் தோன்றுகின்ற குறுக்கீடுகளே பல்வேறு பரிமாணங்களில் வளர்ச்சிகண்டு உளநிலைத் தடுமாற்றங்களை உண்டு பண்ணி விடுகின்றன.

இவை பணம், பொருள், அழிவு, அமைதியின்மை, வெற்றி, தோல்வி, பாலியல்தேவை என நீண்டுகொண்டே செல்கின்றன. இத்தகைய தேவைகளில், மனிதனுக்கு வேண்டிய ஒவ்வொரு தேவைகளும் அவனுக்கு ஆளுக்கு ஆள் வேறுபடலாம். இத்தகைய வேறுபாட்டு விகிதங்கள் அவனுக்கு நிறைவு செய்யப்படாதபோது அவை இழப்பாகக் கருதி உளநிலை மாற்றத்திற்கு ஆட்படுகின்றான்.

இத்தகைய பிரச்சினைகளால் குடும்பங்களிடையே ஏற்படும் விரிசலானது படிப்படியாக விரிவுகண்டு சமூகத்தினைச் சென்றடைகின்றது. இவை காலப்போக்கில் குழுக்கள், அல்லது கட்சிகளாக மாற்றங்காண்பதோடு சமூக அமைதியின்மையை ஏற்படுத்தி வன்முறைக்களங்களை உருவாக்கி விடுகின்றன.

இவை காலப்போக்கில் ஒரு நாட்டின் எதிர்காலத்தினையே கேள்விக்குறியாக்கிவிடலாம். இதற்கு சிறந்த உதாரணமாக ஈராக் நாட்டினைக் குறிப்பிடலாம். இதேபோன்றே இலங்கையும் ஒரு பொறிநிலைக்குள் அகப்பட்டுக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இப்படிப்பட்ட ஒருநிலை தோன்ற என்ன காரணம்? இதன் உளநிலைக்குறுக்கீடுகள்தான் என்ன? இவை அதிகாரவலுப் போட்டியால் ஏற்பட்ட பின் விளைவுகளா? என்பவை திருத்தமாக விடை காணப்படவேண்டிய வினாக்களாகும். இது முடியுமா? என்பதே அடுத்த வினாவாகும்.

ஏனெனில் இவை காலங்காலமாக ஈடு செய்யப்படாது வளர்ந்து விட்ட பிரச்சினை என்பதுடன் பொருளாதார ரீதியான உளத்தேவையுடன் முக்கியமாகப் போட்டியிட வேண்டியதொன்றாகும். இத்தகைய பிரச்சினைகளை மூளைச் சலவை மூலம் அரும்பிலே கிள்ளி எறிவது உளப்பணிகள் மூலமே முடியும்.

ஆனால், இவை இன்று அறுகமபுல் போல் பல இடமும் பற்றிப்படர்ந்து ஆலமரம் போன்று உறுதியாக வளர்ந்து விட்டது போல் தெரிகிறது. இவை இனவாதம், படுகொலை, வன்முறை, களவு... எனத்தொடர்ந்த வண்ணமே உள்ளன. ஆனால் இவற்றினை இப்படியே விட்டு விட முடியாதது ஒன்றாகும்.

இதற்காக இவர்களை முதலில் பின்வருமாறு வகைப்படுத்தி உளப் பணி ஆய்வுகளையும் அதன் முடிவுகளையும் தெரிந்து சிகிச்சை அளித்தல் வேண்டும்.

i. சிறுவர்கள்.

ii. இளைஞர்கள்.

iii. முதியவர்கள்.

இவ்வாறு பெரும்படியாக்கம் செய்யப்பட்ட இவ்வகுதியினரிடையே குறுக்கீடுகளை ஆராய்ந்து மேலும் அவர்களின் தேவை, தெரிவு என்பவற்றுக்கு ஏற்ப சிறுபடியாக்கம் மேற்கொள்ளப் படவேண்டும். இவ்வாறு மேற்கொண்டு போகையில், இவர்கள் சிறு குழுக்களாக ஒன்று சேர்த்து அவர்களின் தேவைகளை இலகுவில் இனங்கண்டு கொள்ளமுடியும். இன்று கொலைக் குற்றவாளிகளும் பாதாள உலகக் கும்பல்களும், திருடர்களும் பெருக வழி அமைத்துக்கொடுத்தது உளநிலைக்குறுக்கீடுகளே ஆகும். இதனை உரியகாலத்தில் இனங்கண்டு தகுந்த சிகிச்சை முறைகள் மேற்கொண்டிருந்தால் அத்தகைய நிலை நாட்டில் ஏற்படுவதை பெரிதும் குறைந்திருக்கலாம்.

நாட்டில் ஏற்பட்ட தொடர்ச்சியான யுத்தம், அதனால் வீழ்ச்சி கண்ட பொருளாதாரம், இந் நிலைமையால் வேலையற்றோர் படை கிடுகிடுவென அதிகரித்தமை போன்றவையும் சுய தொழிலை ஊக்குவிக்கக்கூடிய கல்வி மேம்பாடோ அல்லது பொருத்தமான கல்விக்கொள்கையோ இடம் பெறாமை என்பனவும் ஒன்று கூடி நாட்டு மக்களின் வாழ்வில் பல்நிலைக்குறுக்கீடுகளாகத் தோற்றம் பெறலாயின.

இவை காலப்போக்கில் குடும்ப உறவுகள் மற்றும் உறுப்பினர்களிடையே விரிசல் போக்கினை ஏற்படுத்தி தவறான வழிநடத்தலுக்கு இட்டுச்சென்றன. இவையே காலப்போக்கில் வளர்ச்சி கண்டு இன்றைய நாட்டு நிலைமையினை உருவாக்கியுள்ளன.

அதாவது ஒரு குடும்பம் சார்பாக பின்வரும் நிலைகள் அதன் வாழ்வியல் சூழலில் குறுக்கீடுகளை ஏற்படுத்தியுள்ளன.

i. யுத்த அல்லது இயற்கை அனர்த்த நிலைமையால் இடம் பெயர்ந்தமை அல்லது உயிர் இழப்புகளை சந்தித்தமை.

ii. பொருளாதார வறுமை, வேலை வாய்ப்பின்மை இதனால் இளைஞர்களிடையே தோன்றிய வெறுப்புணர்வு.

iii. வெளிநாட்டு மோகமும் அதன் வருவாயும், இழப்புகளும்.

iv. கிராம, நகர வாழ்வியலுக்கிடையிலான முரண்பாடுகளும் ஈடுசெய்யமுடியாத்த ன்மையும்.

v. நவீன தகவல் தொழில்நுட்ப உலகோடு போட்டியிடவேண்டிய ஒரு கட்டாய தேவை ஏற்பட்டமை.

இவைகள் எல்லாவற்றினையும் எல்லாக்குடும்பங்களாலும் உள்வாங்கவோ அல்லது நிராகரிக்கவோ முடியாத் தன்மை ஒன்று தோன்றியமை. இதன் தாக்க விளைவுகள் படிப்படியாக குடும்பங்கள் மத்தியில் தென்படத் தொடங்கி அவை பின் தவறான பாதைகளில் நகர்ந்துசெல்ல முற்பட்டன.

இவை காலத்தின் தேவையும் அதனால் எழுந்த தேடலுமாக காரணம் தெரியாது நகர்த்தப்பட்டமையால் இதன் புரிதலில் தவறுகள் நியாயப்பாடுகளாக பின்பற்றுவோர் அணியில் வலுவாக்கப்பட்டன. எனவேதான் இன்று ஏற்பட்ட பாதிப்பு நாளை எமது சமூகத்தினை ''பதர்கள்'' போன்று ஆக்கிவிடக்கூடாது. இதற்காக நாம் எல்லோரும் "முடியும்" என்ற முனைப்புடன் செயல்பட வேண்டும்.

வீட்டில்விளக்கு அணைந்தால்

வீடே இருண்டுவிடும்.

வீதியில் விளக்கு அணைந்தால்

வீதியே இருண்டுவிடும்.

**எஸ். ஜெயா**

வானத்தில் சூரியன் மறைந்தால் நாடே இருண்டுவிடும்.

இது ரசித்துப்படித்த கவிதை. ஆனால் இது சிறந்த உளத்தத்துவம், இதன் மூலம் கட்டாயமாக உங்கள் உளநலத்தினை ஆற்றுப்படுத்த முடியும்.

## வந்ததா சமாதானம்?

வீட்டுக்கு மின்சாரம்
கலர் கலர் வாகனங்கள்
மின்னிடும் பாத்திரங்கள்
இன்னுமின்னும்...
சம்சாரம் விரும்பும் சிலசாமான்கள்
வந்ததன்றி எமக்கு...
வந்ததுவா சமாதானம்?
அடிக்கடி பறப்புக்கள்
பல சுற்றுப் பேச்சுக்கள்.
விடுபட்டுப் போகாத
நோர்வேயின் உழைப்புக்கள்.
கைலாகு கொடுத்துக் கொடுத்தே
கைசிவந்து போனதன்றி
மெய்வாழ்வைக் கொண்டிங்கே
வந்ததுவா சமாதானம்?
வெறும் குப்பைச் சினிமாக்கள்
வந்தடையும் பேரவலம்.
ஆளுக்கொரு தொலைபேசி
அடிதடிக் கலாச்சாரம்
குழுமோதல் கொலைகளவு
குடிகெட்டுப் போனதையோ!
உருப்படியாய் வாழ்வதற்கு
வந்ததுவா சமாதானம்?

விண்ணுரசும் கட்டடங்கள்
வடிவூறும் பட்டிணங்கள்
என்னென்னவோ கற்பனைகள்
கைக்கெட்டா நினைப்புகளில்
இறக்கை கட்டும் நெஞ்சங்களே,
முந்நகர முடியாமல்
முடங்கிற்றே சமாதானம்?

கொடுத்தோமே உச்சவிலை
கொடுப்போமே இன்னும்விலை
கொடுத்ததற்கு தக்கநிறை
கொண்டுதா விடுதலை
சுடுகுழல்கள் பேசித்தான்
சுதந்திரமும் வருமென்றால்
படுகளமே பேச்சுமேடை
பேசிடலாம் வா நாளை.

**வேலணையூர் சுரேஸ்**



# உளவியல் நவீனம்...

அத்தியாயம்- 10

பகுதி -48

மணல் பெட்டிக்குள் நின்றுகொண்டிருந்த சிறிய உலோக வீட்டினுள் ஒவ்வொரு வீரனாக அணிவகுத்துச் செல்லும்படி செய்தான்.

"இண்டைக்கு உச்சிக்குப்போக அவையளால ஏலவில்ல" என்றவன். தொடர்ந்து "அவை எல்லோரும் தங்கட வீட்டுக்க போகப் போகினம். திரும்பிப் பார்த்து கையை அசைக் கினம். மிகவும் சோகமாக கையை அசைக் கினம். அவையள் உச்சிக்குப் போகத்தான் விரும் பினவை. ஆனா இண்டைக்கு ஒருதரா லையும் உச்சிக்குப் போக முடியேல்ல" என்றான். "அவையள் செய்ய மிகவும் விரும்பினத செய்ய ஏலாமல் போனதால அவைக்கு சரியானதுக் கமா இருக்குது அல்லவா?" என்று சொன்னேன்.

"ஓம்" என்ற டிப்ஸ் பெருமூச்செறிந் தான். "அவை போகத்தான் விரும்பினவை. அவையள் முயற்சி செய்தவை. ஆனால் அத முழுமையா செய்ய முடியேல்ல. ஆனா அவை தங்கட மலைய கண்டு பிடிச்சிட்டினம். அதில ஏறியும் போனவை மேலே...மேல....மேல.... கன தூரம் ஏறிப் போனவை. அந்த நேரத்தில தாங்கள் உச்சிக்குப் போய்விடலாம் எண்டுதான் நினைச்சவை. அப்பிடிப் போய்விடலாம் எண்டு நினைச்ச நேரத்தில அவையள் சரியான சந்தோசப் பட்டினம்"

"உச்சிக்கு ஏறிப்போக முயற்சி செய்யுறது மட்டும் சந்தோசத்தை தருமா?" நான் கேட்டேன்.

"ஓம்" என்றான் டிப்ஸ். "மலைகள பொறுத்த வரை அப்பிடித்தான். நீங்கள் எப்பவாவது மலையில ஏறியிருக்கிறீங்களா?"

" ஓம்.... நீங்கள் எப்பவாவது மலை யில ஏறியிருக்கிறீங்களா டிப்ஸ்?" கேட்டேன் நான்.

"ஓம் " என்ற டிப்ஸ்,


"ஒருக்கா ஏறியிருக்கிறன். ஆனா உச்சிக்குப் போக என்னால முடியேல்ல" என்று வருத்தந் தோய்ந்த குரலில் சொன்னான். பின்பு, "ஆனா நான் அதின்ர அடிவாரத்தில நிண்டு உச்சிய நிமிர்ந்து பார்த்தனான். ஒவ்வொரு பிள்ளைக்கும் அவை மட்டும் ஏறுறதுக்கெண்டு ஒவ்வொரு மலை இருக்கவேணும்.அதோட ஒவ் வொரு பிள்ளைக்கும், அவைக்கு மட்டும் சொந் தமான ஒரு நட்சத்திரம் வானத்தில இருக்க வேணும் எண்டு நான் நினைக்கிறன்.அதோட, ஒவ்வொரு பிள்ளைக்கும் அவைக்கு மட்டும் சொந்தமானதெண்டு ஒவ்வொரு மரமும் இருக்க வேணுமெண்டு நான் நினைக்கிறன்" இப்படித் தான் இருக்கவேணும் எண்டு நான் நினைக் கிறன் என்று என்னைப் பார்த்தபடி சொன்னான். அப்படிச் சொல்லும்போது தன் கருத்தை வலி யுறுத்துவது போல் தலையையும் ஆட்டிக் கொண்டிருந்தான்.

"இந்த விஷயங்கள் உங்களுக்கு மிகவும் முக்கியமானவை அல்லவா?" என்று கேட்டேன்.

"ஓம்" என்று அவன் பதில் சொன் னான். "மிக முக்கியமானவை"

அவன் உலோகச் சவளை எடுத்து அமைதி யாகவும் கருத்தூன்றிய விதத்திலும் மணலில் ஆழமான ஒரு குழியைத் தோண்டினான். அதற்குப் பின்புதான்,போர் வீரர்களில் ஒரு பொம் மையை மட்டும் எடுத்து தனியாக அவன் வைத் திருப்பதைக் கவனித்தேன். குழியைத் தோண்டி முடித்ததும் அதன் அடியில் அந்தப் போர் வீரனை அவதானமாக வைத்துவிட்டு, மணலை சொரிந்து அவனை மூடிவிட்டான். அந்தப் புதைகுழி நிறைந்துபோனதும் புறச் சவளால் அதை அடித்து இறுக்கி விட்டான். "இந்த ஆள் இப்போது புதைக்கப்பட்டான்" அறிவிப்பது போல் ஒலித்தது அவன் குரல். "மலையில் ஏற முயற்சி செய்வதற்கான வாய்ப்புக் கூட இவனுக்குக் கிடைக்கயில்ல. அதால உச்சிக்கும் அவன் போகமுடியேல்ல. ஆனா போக விரும் பினவன் மற்ற வீரரோட தானும் போக விரும் பினவன். உச்சிக்கு போகலாம் எண்டு நம்ப விரும்பினவன். முயற்சி செய்யவும் விரும்பின வன். ஆனா அவனுக்கு அதுக்கு வாய்ப்புக் கிடைக்கயில்ல அவன் புதைக்கப்பட்டு விட்டான்.

"அப்ப, அந்த ஆள் புதைக்கப்பட்டு



விட்டான்" என்று சொன்ன நான், "மலையில ஏறுறத்துக்கு அவனுக்கு வாய்ப்பே கிடைக் கேல்ல. அதனால அவன் உச்சிக்கும் போக யில்ல" என்றேன்.

"ஓம் அவன் புதைக்கப்பட்டு விட் டான்..." என்று என்னை நோக்கி சரிந்து கொண்டே சொன்னான். "புதைக்கப்பட்டது மட்டுமில்ல நான் அந்த புதை குழிக்கு மேல இன்னொரு பெரிய உயரமான பலமான, மலையை உண்டாக்கிவிடப் போறன். அவன் ஒருக்காலும்... ஒருக்காலும்.... ஒருக்காலும்... வெளியில வர ஏலாது. இனி மேல் ஒரு மலை யில ஏறுறவாய்ப்பு அவனுக்கு ஒருபோதும்... ஒருபோதும்... ஒரு போதும்... கிடைக்காது!" என்று தொடர்ந்து கூறினான். கைகளால் வழித்து வழித்து அந்த வீரனை புதைத்த குழிக்கு மேலே ஒரு மணல் குன்றை உருவாக்கி விட்டான். குன்றை உருவாக்கி முடித்ததும் கைகளில் இருந்த




மணலை தட்டி விட்டுக்கொண்டான். அங்கேயே சப்பாணி கொட்டி இருந்தபடி அந்தக் குன்றைப் பார்த்துக்கொண்டிருந்தான். பின்பு அமைதியா பெட்டியில் இருந்து இறங்கிக் கொண்டே, "அது அப்பா" என்றான். "அப்ப... அந்த குன்றுக்குள்ள புதைபட்டது அப்பா வா?" "ஓம்" என்றான் டிப்ஸ். "அது அப்பாதான்"

ஆலய மணிகள் ஒலிக்கத் தொடங் கின. ஒவ்வொரு மணி ஓசையும் ஒலிக்கும் பொழுது அவற்றை டிப்ஸ் எண்ணினான். "ஒண்டு... இரண்டு... மூண்டு....நாலு. நாலு மணியாயிட்டுது" என்றவன், "நேரம் காட்டுற ஒரு மணிக்கூடு வீட்ட இருக்குது" என்றான்.

"அப்படியோ? அப்ப உங்களுக்கு நேரமும் சொல்லத் தெரியுமா?" என்று நான் கேட்டேன்.

"ஓம் என்றான். வேற வேற மாதிரி யான மணிக்கூடுகள் இருக்குது. சிலதுகளுக்கு சாவி குடுக்க வேணும். சிலதுகள் மின்சாரத் தில இயங்குதுகள். சிலதுகளில எலாம் இருக்கும். சிலதுகள் கோயில் மணி போல ஒலிக்கும்"

"உங்கட வீட்ட இருக்கிறது எந்த வகை?" நான் கேட்டேன்.

"அப்பாவை புதைத்த விடயத்தில் இருந்து இந்த புத்திஜீவித்தனமான உரை யாடல் மூலம் டிப்ஸ் பின் வாங்கிக் கொண்டி ருந்தான். நானும் அவனட போக்கிலேயே போகப் போகிறேன். தன்னுடைய தந்தை யைப் பற்றிய இந்த உணர்வுகளிலிருந்து அவன் மீண்டுவர சில காலம் எடுக்கும். தன் சுயத்தின் மீது அவன் மேலாண்மை கொள்வ தாக உணர்வதாகத் தோன்றினால், இப்போது அவன் நிகழ்த்திக் காட்டியது பற்றி அவன் சிறிது பயந்திருப்பது போல தோன்றினால், மணிக்கூடு போன்ற சடப் பொருள் ஒன்றைப் பற்றிய கலந்துரையாடலின் பாதுகாப்புக்குள் ளான பின்வாங்கலை அவன் தனக்கெனத் தேடிக்கொள்ள விரும்பினால், அவனது உணர் வுகளை கீறிக் கிழித்துப் பார்ப்பது போன்ற எதனையும் நான் செய்யப்போவதில்லை. தன்னுடைய விளையாட்டின் போது அவன் ஏற்கெனவே சில, சுருக்கமான, உணர்ச்சிசார்ந்த கூற்றுகளை தெரிவித்திருந்தான்.

"என்னுடையது மணியடிக்கிற எலாம் மணிக்கூடு. நான்தான் அதுக்குச் சாவி குடுக்கிறனான். கைக்கடிகாரமும் இருக்குது. ஒரு மணிக்கூட்டு ரேடி யோவும் இருக்குது." என்றான்.

பின் மேளத்தை எடுத்து மெதுவாக அடிக்கத் தொடங்கினான். "நான் அப்பாவுக்காக மேளத்த அடிக்கிறேன்"

"அப்ப... இந்த மெதுவான மேள ஒலிகள் அப்பாவுக்காக... அல்லவா?" என்றேன்.

"ஓம்" என்றான் டிப்ஸ்.

"இப்ப மேளம் என்ன சொல்லுது?" நான் கேட்டேன்.

மெதுவாகவும் திட்டமிட்ட முறையி லும் டிப்ஸ் மேளத்தை அடித்தான். "தூங்கு... தூங்கு... தூங்கு" என்றான் அவன். "தூங்கு... தூங்கு... தூங்கு... தூங்கு... என்றவன் பின் ஒவ்வொரு எழுத்தாக "தூ...ங்....கு.... தூ...ங் ....கு.... தூ...ங்....கு.... தூ...ங்....கு...." என்றபடி படிப்படியாக மேளத்தின் அடிப்பு வேகத்தை அதிகரித்தான். கடைசியில் திடீர் ஆரவார முழக் கத்துடன் மேளத்தை அடித்து நிறுத்தினான்.

தலை தொங்கிப் போயிருக்க அங்கேயே அமர்ந்திருந்தான். மேளத்திலிருந்து எந்த ஓசையும் எழவில்லை. எழுந்து கொண்ட டிப்ஸ், எதுவும் பேசாமல் பொம்மலாட்ட அரங்கினுள் மேளத்தை வைத்துக் கதவைப் பூட்டினான். "உள்ள இதுக்குள்ள வைக்கிறன் மேளம்...." என்றவன் தனக்குத் தானே சொல்வது போல், "இந்த அலுமாரியில் மேளத்தை வைத்து கதவைப் பூட்டு" என்றான். மணல் பெட்டியை நோக்கி நடந்து சென்ற அவன், மணல் குன்று மூடியிருந்த புதைகுழியைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான்.

பிறகு பொம்மலாட்ட அரங்கினுள் சென்றவன், தனக்குப் பின்னால் கதவைச் சாத்திக்கொண்டான். இந்த முக்கோண அரங்கி னுள்ளே சிறிய ஜன்னல் ஒன்று இருந்தது. அதனூடாக பார்த்தால் வாகனங்கள் தரிப்பிடம் தெரியும். இந்த ஜன்னலின் வழியே சிற்றாலயத் தின் பின்புறத்தை டிப்ஸால் பார்க்க முடியும். டிப்ஸை என்னால் பார்க்க முடியவில்லை. இல்லையெனினும் அவன் பேசுவதை என்னால் கேட்க முடிந்தது.

(தொடரும்)

---

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நினைத்து என்னை நானே கண்டித்துக்கொள்வேன். உறவாடல்கள், உரையாடல்கள் மூலம் நீண்ட நாள் பிரிவுகள் தவிப்புகள் நிவர்த்திசெய்யப்பட்டுக் கொண்டிருந்தன. மனிசியின் தம்பியார் அவனது மனைவியாரிடம் "அதை எடுத்துக் குடும்" என... அன்போடு கட்டளையிட மனைவியும் அக்கா குடும்பத்திற்கு என்று வரும்போதே வாங்கி வந்த அந்தப் பொருளை எடுத்து என்னிடம் தந்தார். நானும் ஒருவகை நன்றியுடனும் கடமைப்படுகின்றோம் என்ற உணர்வோடும் ஒரு சிரிப்புச் சிரித்தவாறு வாங்கினேன்.

அது ஒரு அழகிய "காண்ட்போன்" கவர்ச்சியாக இருந்தது. "மதன் பாவிப்பான் தானே என்று வாங்கி வந்தனாங்கள்" என்று தொடங்கினார் மனைவியின் தம்பி... மதன் என்பது எனது மூத்த மகன். இதில வீடியோ எடுக்கலாம்... போட்டோ எடுக்கலாம்... பாட்டுக்கேட்கலாம்... "பிக்சர் மெசேச்..." அனுப்பலாம்...கேம் விளையாடலாம்... தினக்குறிப்பு இருக்கு... இப்படி அதன் பயன்பாட்டையும் அதன் நவீனத்துவத்தையும் விளக்கினார். இதை என்னை விட எனது மகன் மதன் ஆவலுடன் அருகில் இருந்து மகிழ்ச்சியுடன் கேட்டுக்கொண்டிருந்தான். இடையில் நான் "இது என்ன விலைவரும்..." சிரித்தவாறே "இதுது... அங்க அறுநூறுயூரோ" எனக்கு புரியவில்லை. "இஞ்சத்தைய காசுக்கு...?கேட்டேன்.

இஞ்சத்தயக்காசுக்கு "குறைஞ்சது அறுபதினாயிரம் ரூபா வரும்" திகைச்சுப்போனேன். "ஏன் இவ்வளவு காசுக்கு உதை வேண்டினீங்கள் உங்களுக்கு என்ன விசரே..." எனது மனைவி செல்லமாகப் பேசினாள். "மதன் பாவிப்பான்தானே. அவன் ஆசைக்கு வைச்சிருக்கட்டன்" பதிலுக்கு அவர்கள் கூறினார்கள்.


எப்படியோ எனது இலட்சியம் பிற்போடப்பட்டு விட்டது. எனி என்ன பிள்ளையளின்ர படிப்புச் செலவு இல்லைத்தானே. என்ர உழைப்பிலை கொஞ்சம் கொஞ்சமாய் மிச்சம்பிடிச்சு எண்டாலும் ஒரு கடைபோட்டுக்கொண்டு வீட்டோட போய்விட வேணும்."இப்போ இந்தச் சிந்தனையோட எனது காலை ஐந்து மணிக்கு எழும்பி பம்பரம்போல சுற்றி இரவு ஓய்வுக்கு வரும் அந்தவேலை தலை நரைத்தபோதும் எந்த சலிப்பும் இல்லாமல் தொடர்கின்றது. ஒவ்வொருநாளும் உழைத்து கழைத்து ஓய்வுக்கு வரும்போது இன்று முந்நூறு ரூபாய் கிடைக்கும் என்ற எண்ணத்தில் படுக்கைக்குப்போவேன்.

நேற்று இரவு நடந்த சம்பவம்தான் நான் இன்று சற்று சுணங்கி எழும்பி சின்ன முதலாளியிடம் பேச்சு வாங்கவேண்டி ஏற்பட்டது. நேற்று இரவு பத்து மணியிருக்கும். வீட்டுக்கு ரெலிபோன் எடுத்துக் கதைப்பம் எண்டுபோட்டு பக்கத்தில் கொமினிக்கேசன் இருந்தபோதும் தூரத்தில் இருந்த 'பப்ளித்பூத்தில் தான் கதைக்கிறனான். காசு குறைவு என்பதற்காக நான்போய் போன் எடுத்தால் தொடர்ந்து இன்கேச்சா இருந்துது.

அப்பிடி யாரோட இவ்வளவுநேரம் கதைக்கினம் எண்டுயோசிச்சுக்கொண்டு தொடர்ந்து முயற்சி செய்து ஒருவாறு இணைப்பை பெற்றுக்கொண்டேன். "கலோ நான் அப்பா கதைக்கிறன்..." என்று கூறியவாறே எதிரில் இருப்பது மனைவி என்பதை குரலில் அறிந்துகொண்டேன். என்னப்பா...இவ்வளவு நேரமா எடுத்துக்கொண்டிருக்கிறன். ஆரோட கதைச்சுக்கொண் டிருந்தனியள்... "அது இவன் மதன்தான் ஆரோ பிரண்டோட கதைச்சவனாம். நானும் சொல்லச் சொல்ல அரை மணித்தியாலமாய் கதைச்சுக்கொண்டிருந்தவன்..." மனைவி கூறினார். எனக்குள் நான் கணக்குப் போட்டேன் ஒரு நிமிசத்துக்கு பதின்மூன்று ரூபா, முப்பது நிமிசத்துக்கு மேல கதைக்க எப்பிடியும் முன்னூற்றைம்பது ரூபாய்க்கு மேல் முடிஞ்சிருக்கும். எனவே எனது இலட்சியம் இன்னும் தொலைதூரம் நோக்கிப் போகுது என்ற ஏக்கத்தில படுத்தனான் விடிய எழும்பக்கொஞ்சம் சுணங்கிப்போச்சு. அதுதான் சின்ன முதலாளி....

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்ப வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




*பாவலரே வணக்கம்*

*ஊடகவியலாளர்கள் இனி ஊமையாகிவிடுவார்களா?*

*யாமினி,*
*விசுவமடு.*

பேனா மேலாண்மைக்கு வளைந்து கொடுக்காத தன்மை கொண்டது. அதன் கூர்மை ஊடகவியலாளர்களை ஒருபோதும் ஊமையாக்காது. வாய்மையுடன் தொடர்ந்து பேசிக் கொண்டே இருக்கும்.

*பாவலா!*

*பக்கத்துவீட்டு விதவைப் பெண்ணின் முகத்தில் பட்டுவிட்டு எந்தச் செயலுக்கும் போகவேண்டாம் என்று எனது மனைவி கூறுகின்றாள். நாளைக்கு நான் இறந்துபோனால்? இவ்வாறான மூடநம்பிக்கை எப்போது ஒழியும்?*

*தயாபரன்,*
*கிளிநொச்சி.*

தன்னம்பிக்கையற்றவர்கள் இருக்கும் வரைக்கும் மூட நம்பிக்கைகளும் இருந்தே தீரும்.

*அன்பின் பாவலா!*

*தங்களது பொழுது போக்கிற்காக மற்றவரைப் பற்றிச் சிந்திக்காமல் கதைகட்டி விடுகின்றவர்கள் பற்றி?*

*சிவாஜினி,*
*சங்கானை.*

சந்தியில் நின்று வதந்தி பரப்பும் ஒரு வித மனநோயாளிகளே இவர்கள்.

*பாவலரே வணக்கம்!*

*பொழுதுபோக்கு எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும்?*

*சோபனா,*
*திருவையாறு.*

அர்த்தமுள்ளதாகவும் ஆனந்தம் தருவதாகவும் இருக்கவேண்டும்.

*பாவலா!*

*கூட்டலுக்கும் கழித்தலுக்கும் ஒரேவிடை வந்தால்...? எப்படி இருக்கும்...?*

*ஆ.ஆனந்தி,*
*புளியங்குளம்.*

குப்பையாக இருக்கும்.

*பாவலா!*

*உங்களால் மறக்கமுடியாத பெண் யார்?*

*வேலையா அகிலன்,*
*தாவடி.*

எனது பாட்டி, தமிழ் மூதாட்டி, ஔவையார்.

*பாவலரே!!*

*தமிழினத் துரோகிகள் பட்டியலில் தற்போதைய கதாநாயகன், அல்லது அரசன் யார் என்பதைத் தரமுடியுமா? (இக் கேள்விக்கான பதிலை நீர் தர மறுத்தால் உமது தலை வெடித்துச் சுக்குநூறாகிவிடும்.)*

*அ.யாழ்மதன்,*
*கிளிநொச்சி.*

துரோகிகள் கதாநாயகர்களோ அரசர்களோ கிடையாது வில்லன்கள் மட்டுமே உண்டு.

*சனாதிபதி ஏன் ஒன்றுக்கும் தலையை நிமிர்த்தி பதிலை அளிப்பதில்லை?*

*நிலவன்,*
*தமிழீழம்.*

அடக்கம் அல்ல அகங்காரமே அதற்குக் காரணம்.

*பாவலா!*

*எழுத்தாளன் செம்பியன் செல்வனின் படைப்புப் பற்றி?*

*யாழினி,*
*திருவையாறு.*

மண்பற்றும் மண்வாசனையும் மிக்க படைப்பு.

*பாவலா!*

*புத்தரின் சிலைகள் பல இடங்களில்திடீரென முளைக்கின்றனவே புத்தரின் அவதாரமா அல்லது உயிர் பெற்றுவிட்டாரா?*

*தயாழினி.*
*முல்லைத்தீவு.*

நிலையில்லா வாழ்க்கையை பற்றி போதித்தவர் புத்தர். அவரை சிலையாக்கி சந்திச் சண்டையாக்கியது அவமான விடயமே.

*பாவலா!*

*இம்முறை நடைபெறும் படையினரின் வெசாக் நிகழ்வில் நீரும் கலந்துகொண்டீராமே? எப்படி இருந்தது கொண்டாட்டங்கள்?*

*சியாமளா,*
*கோணாவில்.*

அற வழியை போதித்தவருக்கு ஆயுத படையினர் விழா எடுத்து ஒரு முரண் நிகழ்வாகவே உணரப்பட்டது.

*பாவலா!*

*வீதி விபத்துக்களை குறைக்க முடியுமா? இதனை குறைப்பதற்கு சிறு விளக்கம் தருவீரா?*

*தமிழிசை,*
*கிளிநொச்சி.*

வீதிகளில் மனிதர்கள் நடமாடுவதை குறைப்பதை தவிர வேறு வழியில்லை.

*பாவலா!*

*புலிகளின் அலுவலகத்தை சோதனையிட்டதால் எட்டுப் பொலிசாருக்கு சம்பள வெட்டாம்? இது உண்மையாக இருக்குமா?*

*ரூபி,*
*கிளிநொச்சி.*

இப்போதைக்கு சம்பள வெட்டு அடுத்து பதவி உயர்வாக மாறக்கூடும்.

*பாவலா!*

*தற்போது உமது பிரதேசத்தில் காலநிலை எவ்வாறு உள்ளது?*

*பிரியா,*
*வவுனியா.*

காலநிலை காலனின் பிடிக்குள் அகப்பட்டுள்ளது.




-வெள்ளணவா எழும்பி எந்தவேலை செய்யக்கிடக்கு. ஒரே அசதியாக் கிடக்கு. கை கால் உளையுது.

- ஏன் நேற்று முழுக்கக் கடுமையான வேலையோ?

-வேலையென்ன வேலை நாளாந்தஞ் செய்யிற வேலை தான்.

-அப்ப என்ன ஒழுங்கா உழைச்சு, வடிவாச்சாப்பிட்டு, நல்லா நித்திரை கொண்டா ஏன் அசதிவருது. ஏதோ நோயாக்கும்.

-என்னயென்ன நல்லா நித்திரை கொள்ளுறதோ...... அதுதானே ஏலாத விசயம்.

-ஏன் அப்பிடிச் சொல்லுறாய் நுளம்புத்தொல்லையே.

-கிட்டநெருங்கேலா-வலைகட்டித்தான் படுப்பம்.

-அப்ப.... குழந்தை ராராவா அழுதோ...

-இரவு படுத்தானெண்டா விடியத்தான் எழும்புவான்.


-அவன் விடியத்தான் எழும்புறானெண்டா உனக்கேன் நித்திரை வரேல்ல.

-அவன்ர கதையவிடு- இப்ப உள்ள இளையதலைமுறைப் பிள்ளையள் செவிப்புலன் வலுக்குறைஞ்சுதான் பிறக்குதுகள்.

-ஏன் அப்பிடிச் சொல்லுறாய்.

-எங்களுக்கு மென்மையான சத்தங்கேட்டா சந்தோசம். அதுகளுக்கு கோடாலியால பிளக்கிற மாதிரிச்சத்தங் கேட்டாத்தானே பாட்டுப்பிடிக்குது. ராராவா கோயில் பீக்கருகள் என்னைப் படுக்கவிடுதில்ல. குழந்தைப் பொடியன் நல்ல நித்திரை.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -121



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்-121

.......................................................................
.......................................................................
.......................................................................
.......................................................................

பெயர் : .......................................................

முகவரி : .......................................................

.......................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -120



த்ருமதி.ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

## பரிசுக்குரிய வரிகள்

*சாதி மத பேதமில்லை- தமிழீழத்தில்*
*அநாதைகள் என்ற சொல்லுமில்லை.*
*பாச உறவுகளாய் பாலகர் நீவீர்*
*தமிழ்த் தேசியமாய் எழுந்து நிமிர்ந்திடுவீர்.*

## பாராட்டுக்குரிய வரிகள்

*சின்னஞ்சிறு மொட்டுக்களின் சிலிர்ப்பு!*
*சிலிர்ப்பின் பால் சொல்லத் துடிப்பது!*
*நீவீர் என்ன அநாதைகளா!*
*நின் தாயாரை சுனாமி கொன்றதுவோ!*

கு.நிலானி,
புதுக்குடியிருப்பு.

*சிந்தனையில் சிக்கிய சிறார்களே! நீவீர்*
*சீர்மியமாய் வளர்ந்து ஏற்றமான கல்வியை கற்று*
*தலைவர் மாமா எண்ணம் போல*
*தரணியில் தமிழர் பெயர் பொறித்திடுங்கள்.*

சு.செல்வி,
பரந்தன்.

*தமிழீழ தேசம் உங்கள் வீடு- ஈழத்*
*தமிழரெல்லாம் உங்கள் உறவுகள்.*
*தாயாய், தந்தையாய்'தலைவர்'மாமா இருக்கிறார்.*
*'சோலை' யில் பூத்துக் குலுங்குங்கள் சிட்டுக்களாய்.*

ராஜசெல்வி,
கிளிநொச்சி.

*சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலக நாடுகள் வழங்கிய நிதியில் புதிதாக ஓர் புத்தர் சிலை திருமலையில் என்றால் பொதுக்கட்டமைப்பு இங்கே அநாதைகளாக உள்ள சிறுவர்கள் போன்ற ஆயிரமாயிரம் சிறுவர்களின் வாழ்வை புனரமைக்குமா?*

க.ஜெயக்குமார்,
புளியங்குளம்.



## கவனியுங்கள்..!




இந்த பாலம் கிளிநொச்சி நகரையும் வட்டக்கச்சி மற்றும் ஏனைய பகுதிகளையும் இணைக்கும் கிளிநொச்சிக்குள வீதி. ஆனால் அந்த வீதியில் அமைந்துள்ள இந்தப்பாலம் மிகவும் சீர்கேடான நிலையில் காணப்படுகிறது.

ஏராளமான வாகனங்களும் பாதசாரிகளும் மாணவர்களும் பயணிக்கும் இந்த பாலத்தை உரிய கவனம் எடுத்து சீர்திருத்த உரியவர்கள் ஏன் முன்வரவில்லை. முன் வருவீர்களா..?



ஐரோப்பிய ஒன்றியத்தின் சிறிலங்காவுக்கான தூதுவர் பூட்டோ வில்சன் மற்றும் சிறிலங்காவுக்கான நெதர்லாந்து தூதுவர் சுசான் பிளாங்ஹற் ஆகியோர் கிளிநொச்சிக்கு விஜயம் செய்து, தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரை சந்தித்துப் பேசியுள்ளனர். அதன் போது தமிழீழ காவல்துறைப்பொறுப்பாளர் பா.நடேசன் அவர்கள் கைலாகு கொடுத்து வரவேற்பதை படத்தில் காணலாம்.




எட்டி நட – வெள்ளைராஜா
கிட்டதான் வீடு வந்துவிடும்
எத்தனை நாள் காத்திருந்தோம்
போதாதடா உந்தன் வேகநடை.




**Sanshigaa**

**JEWEL HOUSE**

**சன்சிகா நகையகம்** සන්ෂිගා ජුවෙල්හවුස්

சிறியவர் முதல் பெரியோர் வரை
யாவரும் விரும்பி அணியும் தங்க
ஆபரணங்களை பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

114, BAZAAR STREET,
VAVUNIYA
TEL: 024-2224028

யாழ் கணேசா நகையகம்
124, செட்டியார் தெரு,
கொழும்பு -11



(சி-12119)

**EXPOAIR** *your friend in the skies...*

**எக்ஸ்போ ஏயார்** வானத்தில் உங்கள் நண்பன்...





**தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை**

ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்

கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

(C-11725)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -IV

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | வைகாசி 13 | 27 -05-2005 | வெள்ளிக்கிழமை | ஓசை-98



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-11902) விநாயகர் வீதி, மயிலிட்டி.

# தமிழகத்திலுள்ள ஈழத்தமிழர்கள் பாதுகாப்பாக நாடுதிரும்ப ஐக்கிய நாடுகள் சபை உதவ வேண்டும்

## ஐ. நா. பிரதிநிதியிடம் அரசியல்துறைப் பொறுப்பாளர் வேண்டுகோள்


(கிளிநொச்சி)

**சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட போர் நடவடிக்கைகளினால் புலம்பெயர்ந்து தமிழ்நாட்டில் தஞ்சமடைந்திருக்கும் ஈழத்தமிழர்களை சிறிலங்கா மற்றும் இந்திய அரசுகளுடன் கலந்துரையாடிப் பாதுகாப்பான வழியில் தாயகம் திரும்ப உதவிசெய்ய வேண்டும் என்று தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஐ.நா. சபை பிரதிநிதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

நேற்று முன்தினம் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்த, புதிதாகப் பணியேற்றுக் கொண்டஐ.நா.சபையின் சிறிலங்காவிற்கான வதிவிடப்பிரதிநிதி ராஜீவ்கபூரிடம் இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி சமாதான செயலகத்தில் மாலை நான்கு மணியளவில் இச்சந்திப்பு நடந்தது. புதிதாகப் பணியேற்றுக்கொண்ட ராஜீவ் கபூர்

(IV ஆம் பக்கம் பார்க்க)



## அதிரடி முடிவுகளுக்கு சனாதிபதி ஆயத்தம்

### அரசியல் வட்டாரங்களில் தகவல்

சிறிலங்கா சனாதிபதி அடுத்த வாரம் சில முக்கிய அரசியல் முடிவுகளை எடுக்கவுள்ளார் என்று அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால கடந்த 23ஆம் திகதி ஜப்பானின் தலைநகர் டோக்கியோவுக்கு மேற்கொண்ட விஜயத்தையடுத்தே இவ்வாறான தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜயந்த தனபால டோக்கியோவில் அந்நாட்டு வெளியுறவுத்துறை அதிகாரிகளைச் சந்தித்து உரையாடினார்.

இதேவேளை இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கான ஜப்பானின் விசேடதூதுவர் யசூசி அகாசியின் அழைப்பையேற்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் அக்கட்சி

(IV ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்புக் குறித்து புலிகளுடன் தீர்க்கமாகப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்

### ~நிதி அமைச்சர் சரத் அமுனுகம

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் விடுதலைப் புலிகளுடன் தீர்க்கமாக பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட வேண்டும் என - சரத் அமுனுகம கூறினார்.

ஆழிப்பேரலையின் பின்னரான பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தீர்க்கமாக பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுவது அவசியம். இந்தக் கருத்தை நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட வடக்குகிழக்கின் இடங்களில் ஒரு பகுதி அரசாங்கக் கட்டுப்பாட்டுப்பகுதியிலும் மறுபகுதி தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலும் இருப்பதே இதற்கான காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனை விடுத்து யாழ்ப்பாணத்தில் இருந்துகொண்டு சிங்களவர்களுக்குஎதிராகக் கோசமெழுப்புவதும் கொழும்பில் இருந்துகொண்டு தமிழீழ

(IV ஆம் பக்கம் பார்க்க)

## பௌத்த பிக்குகள் சங்கச் செயலர் எழிலனைச் சந்தித்துப் பேச்சு

(திருகோணமலை)

திருகோணமலை பௌத்த பிக்குகள் சங்கச் செயலாளர் இந்திரதேரர் நேற்றுத் திருகோணமலை மாவட்ட தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனை மூதூரில் சந்தித்தார்.வன்முறையற்ற சமாதானத்திற்கான அணி ஏற்பாட்டில் இச்சந்திப்பு நடைபெற்றது.இதில் தமது அனுமதி இல்லாமல் புத்தர்சிலை வைக்கப்பட்டது என்று எழிலனிடம் இந்திரதேரர் தெரிவித்தார்.

தமது அமைப்பிடம் புத்தர்சிலை வைக்க முதலில் அனுமதி பெறப்பட வேண்டுமெனவும், தமது கட்டுப்பாட்டின்படியே அது வைக்கப்பட வேண்டுமென்றும், உள்ள நடைமுறைகளுக்கு மாறாக இரு பிக்குகளின் தனிப்பட்ட முடிவிலேயே இந்தச் சிலை வைக்கப்பட்டது. அதனை அகற்ற மூன்று நாட்கள் அவகாசத்தைத் தமது அமைப்பு வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்தப் புத்தர்சிலை வைப்பு தமது அமைப்பிற்கு உடன்பட்ட விடயமல்ல என்றும் அவர் எழிலனிடம் தெரிவித்தார்.

## வீர வணக்கம்

25.05.2005 அன்று தவறுதலான வெடிவிபத்தின்போது தமிழீழ தேசிய துணைப்படை வீரர் ஒருவர் சாவடைந்துள்ளார். 2ஆம் லெப். சிவகாந்தினி, சின்னையா சிவகாந்தினி, ஆறுமுகத்தான்குளம், குமுழமுனை, முள்ளியவளை, முல்லைத்தீவு என்ற துணைப் படை வீரரே சாவடைந்தவராகும். , இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வரும் பெப்ரவரியில் நடத்த முடிவு

உள்ளூராட்சி மன்றத்தேர்தல்களை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் வாரத்தினுள் நடத்துவதற்கு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தீர்மானித்துள்ளார்.

அதற்கமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் ஆரம்பிக்கப்படுமெனத் தேர்தல் திணைக்கள முக்கிய பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அடுத்தாண்டு மார்ச் மாதத்துடன் உள்ளூராட்சிமன்றங்களின் ஆட்சிக் காலம் முடிவடைகின்றன. உள்ளூராட்சிமன்றங்களின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் முடிவடைவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னதாகவே தேர்தலை நடத்தும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு உள்ளதால் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையாளர் முடிவு செய்திருப்பதாக அந்தப் பேச்சாளர் தெரிவித்தார்.

## புத்தர்சிலையை அகற்ற அரசு வாக்குறுதி அளித்துள்ளதால் வடக்குக்கிழக்கில் 2ஆம் திகதிவரை கதவடைப்பு வேண்டாம்

### திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் வேண்டுகோள்

(திருகோணமலை)

திருமலை புத்தர்சிலை விவகாரம் தொடர்பில் எதிர்வரும் இரண்டாம் திகதிவரை வடக்கு, கிழக்கில் எந்தவித கதவடைப்பையும் மேற்கொள்ள வேண்டாமென விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

சர்ச்சைக்குரிய புத்தர்சிலையினை அகற்றுவதற்கு எதிர்வரும் ஜூன் மாதம் இரண்டாம் திகதிக்கு முன்னர் நடவடிக்கையெடுப்பதாக அரசாங்கத் தரப்பினர் உறுதியளித்திருப்பதாகவும், எனவே, அதற்கு மதிப்பளித்து எதிர்வரும் இரண்டாம்திகதிவரை வடக்கு, கிழக்குப் பகுதியில் எந்தவிதமான கதவடைப்புப் போராட்டமும் நடாத்தவேண்டாமெனவும் விடுதலைப்புலிகளின்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## மாவட்டம் தழுவிய கதவடைப்பு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

மாவட்டம் தழுவிய ரீதியில் இன்று கடைப்பிடிக்கப்படவிருந்த பூரண ஹர்த்தால் கதவடைப்பு யாவும் பிற்போடப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் நிறுவப்பட்டுள்ள புத்தர்சிலை அகற்றப்படுவதற்கான கால அவகாசம் எதிர்வரும் யூன் 2ஆம் திகதி வரை அரச தரப்பால் கோரப்பட்டுள்ளதற்கமைவாக அதனை நடைமுறைப்படுத்தும் வகையில் 2ஆம் திகதி வரை ஹர்த்தால் கதவடைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லையென தமிழர் தரப்புத் தெரிவித்துள்ளது. (சோ. லோ)

## வரி விளம்பரம்

**மணமகள் தேவை**

யாழ்ப்பாணம் இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த 45 வயது, சொந்தமாக ஒரு நிறுவனத்தை நடாத்தி வருபவரும் யாழ்ப்பாணத்தில் சொந்த வீடும் உடைய விவகாரத்துப் பெற்றவருக்கு திருமணமாகாத அல்லது விதவையான பெண் தேவை. பெண் யாழ்ப்பாணத்தில் வந்து வசிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். சாதகம் படம் மற்றும் குடும்ப விபரங்களுடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- திருமதி கமலாதேவி, 445 மணிக் கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (5378)

**காணவில்லை**

25.05.2005 அன்று தாண்டிக் குளத்திற்கும், ஓமந்தைக்கும் இடையில் யோசப்திருமேனி அந்தோனியாப்பிள்ளை என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (596871984-ஏ), நிரந்தரப் பயண அனுமதி அட்டையும் உள்ளிட்ட பேஸ் ஒன்று காணாமல் போய் விட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும்.தகவல். யோ. கிறிஸ்ரின். (5930)

**10 நிமிடத்தில் படங்கள்!!!**

பாஸ்,சகல அடையாள அட்டைப் படங்கள் உடனுக்குடன் வழங்குகின்றோம். டிஜிற்றல் அல்பம் தயாரிப்பவர்கள் யாழ்.ஒளி K.S.R.PHOTOS இல.05, கனகபுரம் தெரு, கிளிநொச்சி. (6202)

**உளவளப் பயிற்சிப் பட்டறை**

வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் சேவையாற்றும் சேவையாளர்களுக்கான உளவளப் பயிற்சிப் பட்டறை கடந்த 21ஆம் 22ஆம் திகதிகளில் உடுத்துறையில் அமைந்துள்ள நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் உப பணிமனையில் நடைபெற்றது.

இப் பயிற்சிப் பட்டறை யுனிசெப் நிதி ஆதரவுடன் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன அருட்சகோதரி கிறிஸ்ரபெல் இளையதம்பி குழுவினரால் நடாத்தப் பட்டது.

-அத்தியாவசியப் பொருட்கள் மீதான-

# படையினரின் தடையை அகற்ற திருமலையில் மக்கள் போராட்டம்

(திருகோணமலை)

மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் தமிழ்க் கிராமங்களுக்கு சிமெந்து, கட்டடப் பொருட்கள், விவசாயத்திற்குத் தேவையான எரிபொருட்கள் கொண்டு போவதற்கு கட்டைப் பறிச்சான் இராணுவ முகாமில் தடை விதிக்கப்பட்டிருப்பதைக். கண்டித்து, அத்தடையை உடனடியாக நீக்க வேண்டும் என்று கோரி தமிழ்ப் பொதுமக்கள் நேற்று முன்தினம் நாவலடியிலிருந்து கட்டைப்பறிச்சான் இராணுவ முகாம்வரை கண்டனப் பேரணி ஒன்றை நடத்தினர்.

ஆயிரக்கணக்கான மக்கள் பேரணியில் கோஷங்களை எழுப்பிய வண்ணமும் சுலோக அட்டைகளை ஏந்தியவண்ணமும் பங்குபற்றினர்.

இருவாரங்களுக்கு முன்பும் இதே போன்ற கண்டனப் பேரணி நடத்தப்பட்டது. அப்போது பொருளாதாரத் தடையை நீக்குவது பற்றி 14 நாட்களுக்குள் முடிவு பெற்றுத் தருவதாக கட்டைப்பறிச்சான் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள், பிரதேச செயலக அதிகாரிகள் முன்னிலையில் உறுதியளித்தார். அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படும் கால எல்லை நேற்று முன் தினத்துடன் முடிவடைந்தது. அதனையடுத்தே இந்தக் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது.

கண்டனப் பேரணியின் முடிவில், பேரணியை நடத்திய பொதுமக்கள் மக்கள் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் மகஜர்களை, கட்டைப்பறிச்சான் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி,அங்கு வந்து நின்ற போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள், மூதூர் பிரதேச செயலர் ஆகியோரிடம் கையளித்தனர். கோரிக்கையை திருமலை மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வருவதாக மூதூர் பிரதேச செயலக அதிகாரிகள் உறுதியளித்தனர். (25)

# த.பு கழகத்தால் கட்டி முடிக்கப்பட்ட 12 வீடுகள் தென்மராட்சியில் மக்களுக்குக் கையளிக்கும் நிகழ்வு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் நிகொட் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்தின் வீடுகள் பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்வு வரும் ஞாயிற்றுக்கிழமை ஒன்பது மணியளவில் மந்துவில் மேற்கிலுள்ள சூரியகுமாரன் சனசமூக நிலையத்தில் நடைபெறவிருப்பதாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

நுணாவில் கிழக்கு, மேற்கு மந்துவில் வடக்கு, கிழக்கு, மேற்கு மிருசுவில் தெற்கு. மீசாலை வடக்கு, சாவகச்சேரி நகர் போன்ற பகுதிகளில் இருந்து தேர்வு செய்யப்பட்ட 12 குடும்பங்களுக்கு இவ் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருப்பதாகவும், இவர்களுக்கான உரிமைப் பத்திரங்களும் இவ் வைபவத்தில் வழங்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

# சிவராமின் படு கொலை குறித்து இராணுவ புலனாய்வுத்துறையை விசாரிக்க முடியாது

## -பொலிஸ் அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

சிவராம் படுகொலை தொடர்பாக சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையினரிடம் விசாரணை நடத்த முடியாது என்று இந்தக் கொலை வழக்கை விசாரித்துவரும் சிறிலங்கா குற்றப்புலனாய்வுத்துறை பொலிஸ் அதிகாரி சரத்லுகொட கூறியுள்ளார்.

பி.பி.சி யின் சிங்கள சேவையான சந்தேசியாவிற்கு அளித்த நேர்காணலில் அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலை வழக்குத் தொடர்பாக பல்வேறு நபர்களிடம் பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருவதாகக் கூறியஅவர். இராணுவப் புலனாய்வுத்துறை மீதான ஆதாரமற்ற குற்றச் சாட்டுக்களை வைத்துக்கொண்டு அவர்களிடம் விசாரணை நடத்தமுடியாது என்றார்.

சிவராமின் நண்பர்கள், அவருடன் தொடர்பிலிருந்தோரிடம் மட்டுமே விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும், சிவராமுடன் கடைசி நேரத்தில் உடனிருந்த ஊடகவியலாளர்களிடமும் விசாரணை நடந்து வருவதாகவும் சரத் லுகொட தெரிவித்தார்.

சிவராமைக் கடத்திச்சென்ற வாகனம் குறித்தும் இன்னும் ஒலித்துக்கொண்டு இருக்கும் சிவராமின் செல்லிடத்தொலைபேசி குறித்தும் தமது விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளது என்று கூறிய அவர். இந்தக் கொலைக்கான காரணம் குறித்து எவ்வித தகவலும் எமக்குக் கிடைக்கவில்லை. விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்றார்.

சிவராம் கொலை வழக்கை முடக்கிப்போடும் நோக்கிலேயே சிறிலங்காப் பொலிஸ் செயல்பட்டு வருகின்றனர் என்ற எங்கள் சந்தேகத்தை சரத் லுகொடவின் பேட்டி உறுதிப்படுத்தியுள்ளதாகக் கொழும்பு ஊடகவியலாளர்கள் விசனம் அடைந்துள்ளனர்.

## கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்,கிளிநொச்சி

### வாகனங்கள் பகிரங்க ஏல விற்பனை

நல்ல நிலையிலுள்ள எமக்குச் சொந்தமான புத்தகப் பதிவுகளும் உடைய பின்வரும் விபரப்படியான வாகனங்கள் பகிரங்க ஏல விற்பனை மூலம் 09.06.2005 ஆம் திகதி 10.00 மணிக்கு கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்க தலைமைப் பணிமனை வாகனத்தரிப்பிடத்தில் வைத்து விற்பனை செய்யப்படவுள்ளது. கொள்வனவு செய்ய விரும்புவோர் மீளளிப்பு வைப்பாக ரூபா 1000/= (ஆயிரம்) மட்டும் செலுத்தி பதிவு செய்து கேள்வியில் பங்கு கொள்ளலாம். வாகனங்களை இன்றிலிருந்து 08.06.2005 ஆம் திகதி வரை கடமை நேரங்களில் பார்வையிடலாம். தெரிவு செய்யப்படுபவர்கள் மூன்று நாட்களுக்குள் முழுப் பணத்தினையும் செலுத்தி வாகனங்களைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

வாகன விபரம்

| | |
|---|---|
| 01. பாரவூர்தி இசுஸ் | .. 265962 |
| 02. பாரவூர்தி இசுஸ் | .. 249645 |
| 03 ஈ. எல். எவ். வான் | .. 285528 |
| 04 இருசக்கர உழவு இயந்திரம் | |
| 05 உந்துருளி எம்டி-90 | .. 151-5491 |

பொதுமுகாமையாளர்,
கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்,
யாழ்சாலை,கிளிநொச்சி.

(சி.11972)

## துயர் பகிர்கின்றோம்

தோற்றம் 14 08 1935



மறைவு 22 05 2005

முன்னை நாள் கண்டாவளை உதவி அரசாங்க அதிபரும், நாட்டுப் பற்றாளருமான **அமரர் சதா தனபாலசிங்கம் அவர்கள்,**

22.05.05 அன்று அமரத்துவம் அடைந்துள்ளமையையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது பிரிவால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத் துயரிலும் நாமும் பங்கு கொண்டு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், கண்டாவளை.

(6207)

## கண்ணீர் வணக்கம்

### அமரர். கந்தையா கார்த்திகேசு

தமிழீழ வைப்பகப் பணியாளர் செல்வி. கா. அஜந்தா அவர்களின் தந்தையார் திரு. கந்தையா கார்த்திகேசு அவர்கள் 25. 05. 2005 அன்று யாழ்ப்பாணத்தில் இயற்கை எய்தியதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

(11990)

பணிப்பாளர், பணியாளர்கள்
தமிழீழ வைப்பகம்.

## முல்லை மாவட்டக் கட்டட நிர்மாணிகள் சங்க ஒன்று கூடல்

29.052005 காலை 9.00 மணிக்குப் புதுக்குடியிருப்புச் சிறி சுப்பிரமணியம் வித்தியாலயத்தில் முல்லை மாவட்டக் கட்டட நிர்மாணிகள் அனைவருக்குமான ஒன்று கூடல் நடைபெறவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தலைவர், முல்லை மாவட்டக்
கட்டடட நிர்மாணிகள் சங்கம;
முல்லை மாவட்டம்.

செயலாளர், முல்லை மாவட்டக்
கட்டட நிர்மாணிகள் சங்கம், முல்லை
ம.வட்டம்.

(6206)

# மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு
# வடக்கு கிழக்கு மாகாணசபை.

## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (கார்ப்)

### ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
### "ஆஅவ" கடன் இல.2043 – SRI(SF)

# கேள்வி கோரல்-இல.04
## குடிசார் வேலைகளைப் பெறுதல்

01. போரினால் பாதிக்கப்பட்டபிரதேசபுனரமைப்புத்திட்டம் (CAARP) ஆகுசெலவுசார்பாகபலதரப்பட்ட நாணயங்களில்ஆசிய அபிவிருத்திவங்கியில் இருந்து ("ADB") கடன் ஒன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் CAARP, கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக வவுனியா மாவட்ட கேள்விச்சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்குத் தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த இக்டாட் பதிவு | கூறுவிலைப் பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | VA/CAARP/ED/18 | வ/நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் சேதமடைந்த கட்டடத்தை மீள்புனரமைத்தலும், நீர்த்தாங்கி நிர்மாணித்தலும். | M8 (கட்டடம்) | 13,000.00/= |
| 02 | VA/CAARP/ED/19 | வ/இறம்பைக்குளம்மகளிர் மகாவித்தியாலயத்தில் மலசல கூடத்தொகுதி நிர்மாணித்தல் | M8 (கட்டடம்) | 12,000.00/= |
| 03 | VA/CAARP/ED/23 | சூடுவெந்தபிலவு வ/அல் இக்பால் வித்தியாலயத்தில்110'X25' இரண்டு மாடி வகுப்பறைக்கட்டடம் நிர்மாணித்தல் | M7 (கட்டடம்) | 47,000.00/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக ("இக்டாட்" உடன் மேற்படி M7 இற்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைச் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும்.

IV "இக்டாட்"வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைசெயற்றிறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

4. பந்தி இரண்டில் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் கேள்வி கோரமுடியும். ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்பொழுது மேற்கொள்ளும் CAARP வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

5. தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் மேலும் தகவலை மாவட்ட பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, வவுனியாவில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி:024-2222589, பக்ஸ்:024-2222589, ஈமெயில்:necordva@sltnet.lk.

6. ஒப்பந்த ஆவணங்களை 27.05.2005 இல் இருந்து 09.06.2005 வரை முற்பகல் 9.30 இலிருந்து பி.ப 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்தில் இருந்து,ரூபா ஆயிரம் (1,000/=) மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு மீது கொள்வனவு செய்யப்படலாம்.

7. முன்கூட்டியே ஒப்பந்தக் கூட்டம் ஒன்று, இதன் NECORD அலுவலகத்தில் 06.06.2005முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும்.

8. கேள்வி கோருவோர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறிவைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும்.

9. அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப்பிணை முறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், மாவட்டக் கேள்விச்சபை, NECORD, மாவட்ட கருத்திட்ட அலுவலகம், கச்சேரி, வவுனியாவிற்கு 14.06.2005 பிற்பகல் 3.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்க அனுப்பப்பட வேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்குத் தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

*சி. சண்முகம்*
*தலைவர்,மாவட்ட கேள்விச்சபை/*
*அரசாங்க அதிபர்,*
*வவுனியா மாவட்டம்.*

(சி.12018)

# டோக்கியோ மாநாட்டை விமர்சித்த ஜே.வி.பி இப்போது ஆதரிப்பது வேடிக்கையாகவுள்ளது

## -ஐ.தே.கட்சி பா. உறுப்பினர் திஸ்ஸஅத்த நாயக்க

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் டோக்கியோ மாநாட்டை விமர்சித்து டோக்கியோவில் செய்யப்பட்ட பிரகடனத்தை விமர்சித்த ஜே.வி.பி.யினர் இப்போது அதனை ஆதரிப்பதாகக் கூறுவது வேடிக்கையானது என்று ஐக்கிய தேசியக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

ஜே.வி.பி யின் கருத்துக்களில் இவ்வாறு திடீர் மாற்றங்கள் ஏற்பட்டு வருவது குறித்து அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க கண்டனம் வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் கருத்துவெளியிடும்போதே அவர் இந்தக் கண்டனத்தை வெளியிட்டார்.

தற்போது ஜப்பானுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் ஜே.வி.பி யினர், டோக்கியோ மாநாட்டுப் பிரகடனத்துக்கு அமைய நடவடிக்கைகள் முன்னெடுப்பதற்குத் தாம் ஆதரவு தரத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டிருப்பது தொடர்பாகவே இந்தக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் டோக்கியோ மாநாடு இடம்பெற்றபோது, டொலர்களுக்காக நாட்டைக் காட்டிக்கொடுப்பதாகக் குற்றஞ்சாட்டிய ஜே.வி.பி யினர் இன்று அந்த நாட்டின் உல்லாச விடுதிகளில் தங்கியிருந்து டோக்கியோ மாநாட்டுக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்திருப்பது வேடிக்கையானது என்றும் இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

## -பொதுக் கட்டமைப்பிற்கு எதிராக-

# சப்பிரகமுவ மாகாணத்தில் ஜே.வி.பி கொண்டு வந்த பிரேரணை தோற்கடிப்பு

பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக ஜே. வி பி யினரால் சப்ரகமுவ மாகாண சபையில் நேற்றுக் கொண்டு வரப்பட்ட பிரேரணை தோற்கடிக்கப்பட்டுள்ளது.

மாகாணசபை அமர்வு நேற்று நடைபெற்றபோது ஜே .வி .பி உறுப்பினர்களால் சனாதிபதியால் முன்வைக்கப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்பு இரத்துச் செய்யப்பட வேண்டுமென பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டது. எனினும் அந்தப் பிரேரணை எட்டு மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

பிரேரணைக்கு எதிராக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்களெனப் 18 பேர் வாக்களித்தனர். ஐக்கிய தேசியக் கட்சியின் நான்கு உறுப்பினர்கள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. இந்த நிலையில் பிரேரணையின் போது கருத்துரைத்த முதலமைச்சர் மஹிபாலஹேரத் பொதுக் கட்டமைப்புத் தொடர்பில் மக்கள் மத்தியில் தேவையற்ற பீதி யைக் கொண்டுவரும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டாம் எனக் கேட்டுக் கொண்டார்.ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் தமது கருத்தில் வாய்ப்பேச்சின் மூலம் மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ள பொதுக் கட்டமைப்புத் தொடர்பில் பிரேரணை கொணடு வருவது அவசியமற்றது எனத் தெரிவித்தனர்.

# எதிரியின் நயவஞ்சகத்தை முறியடிக்க தலைவரின் கரத்தைப் பலப்படுத்துவோம்

## - கிளி.பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர்

(அலுவலக செய்தியாளர்)

எதிரியானவன் தற்போதைய சமாதான சூழ்நிலையிலும் தனது நயவஞ்சகத்தனத்தினை காடையர் கூட்டத்தின் துணையுடன் எம்மண்ணின் மீதும், தமிழ்மக்கள் மீதும் செயற்படுத்த முனைந்துள்ளான்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் ஜெயந்திநகர் கிராம முன்னேற்றச் சங்க வளாகத்தில் நடைபெற்ற சமகால அரசியல் கருத்தரங்கில் கிளி. பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் போர்ப்பிரியன் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்குகையில் தெரிவித்தார்.

தமிழீழத்தின் தலைநகரான திருமலையின் மத்தியில் தமிழ்மக்கள் பரம்பரையாக வாழ்ந்து வரும் பகுதியில் புத்தர்சிலையை நிறுவியதன் மூலம் தனது நயவஞ்சகப் பேரினவாதத்தினை வெளிப்படுத்தியுள்ளான்.

எனவே எதிரியானவனின் திட்டமிட்ட நயவஞ்சகச் செயல்களைத் தடுத்து நிறுத்த வேண்டிய காலம் நெருங்கிவிட்டது. ஈழத்தமிழர்கள் ஒவ்வொருவரும் எதிரியானவனின் நயவஞ்சகச் செயல்களை முறியடிக்க எமது தேசியத் தலைவரின் கரங்களைப் பலப்படுத்த திடசங்கற்ப்பம் கொள்வோமென அவர் மேலும் தெரிவித்தார்.

ஜெயந்திநகர் கிராம தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் யோகதாசன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் கிளிநொச்சி கோட்ட பொறுப்பாளர் சிறீ, வலய பொறுப்பாளர் சுடர்விழியன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

பெருந்திரளான மக்கள் மேற்படி கருத்தரங்கில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# நெதர்லாந்து தூதுவர், ஐ.ஒன்றியப் பிரதிநிதி புலிகளைச் சந்தித்தது மரபுகளை மீறும்செயல்

## -கொழும்பு ஆங்கிலப்பத்திரிகை சாடல்

நெதர்லாந்து உயர்ஸ்தானிகரான, ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி மரபுகளை மீறியுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.அவர்கள் இருவரும் இலங்கையில் தமது பணிகளை நிறைவுறுத்திக்கொள்ளும் வகையிலான பிரியாவிடைக்காகவே கிளிநொச்சிக்கு சென்று தமிழீழ விடுதலைப்புலிகளைச் சந்தித்தாக ஆங்கில இதழ் ஒன்று தெரிவித்துள்ளது. நெதர்லாந்து உயர்ஸ்தானிகர் சுசானா பிளாங்கட்டின் பதவிக்காலம் எதிர்வரும் ஜூன் மாதத்தில் நிறைவுறுகிறது.

அதேநேரம் [illegible] ஒன்றியத்தின் பிரதிநிதி [illegible] வில்டனின் பதவிக்காலம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நிறைவுறுகிறது.இந்த நிலையில் இவர்கள் இருவரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழச் செல்வனை சந்தித்தமையானது நாட்டின் சட்ட ஒழுங்குகளை மீறும் செயல் என்பதுடன், ராஜதந்திர மரபுகளையும் மீறும் செயல் என்றும் குறித்த ஆங்கில இதழ் தெரிவித்துள்ளது.

### புத்தர்...

திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் டிரான் பெர்னாண்டோ தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் எதிர்வரும் இரண்டாம் திகதிக்கு முன்னர் இந்தப் புத்தர்சிலை விவகாரம் தொடர்பாக தீர்வுகாணப்படுமென உறுதியளிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய எதிர்வரும் இரண்டாம் திகதிவரை எந்தக் கதவடைப்புப் போராட்டத்திலும் ஈடுபடப்பேவதில்லையென தமிழ்மக்கள் பேரவையின் தலைவர் விக்னேஸ்வரன் அறிவித்திருந்தார்.

எனினும், நேற்றையதினம் திருகோணமலை, தமிழ் மாணவர் ஒன்றியம் இன்று கடையடைப்புப் போராட்டமொன்றிற்கு அழைப்புவிடுத்திருந்தது.

இந்த நிலையிலேயே விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன், எதிர்வரும் இரண்டாம் திகதிவரை தமிழ்மக்களை அமைதி காக்குமாறு கோரியுள்ளார்

# வீர வணக்கக் கூட்டமும் நினைவுக்கல் திரைநீக்கமும்

(யாழ்ப்பாணம்)

இரு மாவீரர்களின் நினைவுக் கற்கள் நேற்று கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் திரை நீக்கம் செய்துவைக்கப்பட்டன.

நினைவுக்கல் திரைநீக்கம் கடந்த 10.11.1995 அன்று சூரிய கதிர் இராணுவ நடவடிக்கையின்போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீர வேங்கை இமையன் அந்தோனிப்பிள்ளை- அன்ரனி டெனிசன் ஆனந்தன் வீதி, மானிப்பாய்.

*. கடந்த 18.06.1996 அன்று வவுனிக்குளம் பகுதியில் ஏற்பட்ட வெடிவிபத்தின்போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட காவல்துறை மாவீரர் அன்ரனி கமல்ராஜ் கீதபொன்கலன்- அன்ரனி கமல்ராஜ், கோவில் வீதி, நல்லூர் ஆகிய மாவீரர்களது நினைவுக் கற்களே திரைநீக்கம் செய்யப்பட்டன. மேற்படி இரு மாவீரர்களினதும், நினைவுக்கல் திரைநீக்க நிகழ்வு நேற்று கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் நடைபெற்றது.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இரு மாவீரர்களது திருவுருவப் படங்கள் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்திலுள்ள மாவீரர் நினைவு மண்டபத்தில் மக்கள் வணக்கத்திற்காக வைக்கப்பட்டு நீர்வேலிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் கிரி தலைமையில் வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது. முதலில் மாவீரர் இமையன் அவர்களது திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை அவரது தாயார் திருமதி. அந்தோனிப்பிள்ளை - லில்லிமலர் ஏற்றி வைத்தார்.

மலர்மாலையினை சகோதரன் அ.அன்ரனி டனிஸ்டன் அணிவித்தார். அடுத்து காவல்துறை மாவீரர் அன்ரனி கமல்ராஜ் அவர்களது திருவுருவப் படத்திற்கான ஈகச் சுடரினை தாயார் திருமதி கீதபொன்கலன்- மங்கையற்கரசி ஏற்றி வைக்க, மலர் மாலையினை சகோதரன் கீ.அன்ரனி நிமல்ராஜ் அணிவித்தார். தொடர்ந்து மலர் மாலையினை யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கண்ணன், தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன் ஆகியோர் அணிவித்தனர். வீரவணக்க உரையினை யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சொலமன் சூ.சிறில் தமிழீழ காவல்துறை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் கண்ணாளன் யாழ்ப்பாணப் பிரதேசப் பொறுப்பாளர் செழியன் ஆகியோர் ஆற்றினர். தொடர்ந்து மாவீரர்களது நினைவுக் கற்களை அவர்களது பெற்றோர் திரை நீக்கம் செய்துவைத்தனர். இந் நிகழ்வில் பொதுமக்களும், போராளிகளும் கலந்து கொண்டனர். (சு)

## -கிளி. சுற்றயல் கூறு வைத்தியசாலைகளில்-

# பற்சிகிச்சைகள் நடைபெறும் தினங்கள் அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட சுற்றயல் கூறு வைத்தியசாலைகளில் பற்சிகிச்சைகள் நடைபெறுவதற்கான நேர அட்டவணையினை கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி வெளியிட்டுள்ளார்.

இதனடிப்படையில் திங்கள், வெள்ளிக்கிழமை பளை அரசினர் வைத்தியசாலையில் காலை எட்டு மணிமுதல் பிற்பகல் ஒரு மணி வரையும், செவ்வாய்க்கிழமை தர்மபுரம் வைத்தியசாலையிலும், மாதத்தில் முதலாவது, மூன்றாவது புதன்கிழமைகளில் அக்கராயன் வைத்தியசாலையிலும், இரண்டாவது, நான்காவது புதன் கிழமைகளில் முழங்காவில் வைத்தியசாலையிலும், வியாழக்கிழமை பூநகரி வைத்தியசாலையிலும் காலை எட்டுமணி முதல பிற்பகல் ஒருமணி வரை பற்சிகிச்சைகள் நடைபெறுமெனவும் பொது விடுமுறை நாட்களில் சிகிச்சைகள் நடைபெற்மாட்டாதெனவும் தெரிவித்துள்ளார். (சோ)

### பொதுக்கட்டமைப்பு....

விடுதலைப்புலிகளுக்கு எதிராக கோசம் எழுப்புவதும் யதார்த்தமற்றதென அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவாநந்தா ஆகியோர் தெரிவிக்கும் கருத்துக்கள் யாவும் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளக் கூடியவையே என்றாலும் உண்மையான களநிலவரத்தைக் கருத்திற்கொண்டு பார்த்தால் மாத்திரமே பொதுக் கட்டமைப்புப் பிரச்சினைக்கு தீர்காண முடியும் எனவும் அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

### தமிழகத்திலுள்ள...

தன்னை அறிமுகப்படுத்திக் கொண் டார்.

அப்போது தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் சிறிலங்காப் படையினரின் போர் நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து தமிழ் நாட்டில் தஞ்சம் அடைந்திருக்கும் ஈழத்தமிழர்களைப் பாதுகாப்பான முறையில் தாயகம் அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி கேட்டுக் கொண்டார்.

கடந்த காலங்களில் தமிழ்நாட்டில் தஞ்சமடைந்த ஈழத்தமிழர்கள் பாதுகாப்பற்ற முறையில் கடல்வழியாகத் தாயகம் திரும்பும் வழியில் கடலில் உயிரிழந்த நிகழ்வுகளையும் எடுத்து விளக்கினார்.

இச்சந்திப்பில் தமிழீழ அரசியல்துறைத்துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் மு.தியாகராஜ், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### அதிரடி...

யின் சிரேஷ்ட உறுப்பினர்களும் தற்போது ஜப்பானுக்கு விஜயம் செய்திருக்கின்றார்கள்.

கடந்த செவ்வாய்க்கிழமை மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்களைச் சந்தித்த ஜப்பானிய வெளியுறவுத்துறை அமைச்சின் அதிகாரிகள் ஜயந்த தனபாலவுடன் இடம்பெற்ற பேச்சுக் குறித்து மக்கள் விடுதலை முன்னணியினருக்கு எடுத்துக்கூறியிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையிலேயே சனாதிபதி அடுத்த வாரத்தினுள் முக்கிய சில அரசியல் முடிவுகள் எடுக்கவுள்ளார் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 [illegible] ஆண்டு [illegible] மாதம் 27ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.